

# ஜெயம்

*1942 – 2020*

நினைவு மலர்

http://ninaivumalar.online/

# ஜெயம்

(அப்புத்துரை ஜெயரத்தினம்)

*1942 – 2020*

*நினைவு மலர்*

http://ninaivumalar.online/

http://ninaivumalar.online/



பிறப்பு
16.02.1942

இறப்பு
07.12.2020

# திரு.அப்புத்துரை ஜெயரத்தினம் BA.SLAS (ஓய்வு)

(முன்னாள் செயலர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கொழும்பு, Senior Governance Advisor (G.TZ)

http://ninaivumalar.online/

http://ninaivumalar.online/

# உள்ளடக்கம்


| தலைப்புகள் | வழங்கியவர்கள் | பக்க இல. |
|---|---|---|
| தந்தையின் வாழ்க்கைப் படிகள் | | 1 |
| Life of our father in a nut | | 2 |
| ஒரு முன்னோயின் சகாப்தம் | அ.பாலச்சந்திரன் | 3 |
| துணிவுடன் தீர்மானமெடுக்கும் | செல்லையா பத்மநாதன் | 6 |
| நிமிர்ந்த நெஞ்சுடைய சிந்தனையாளர் | க. ஜெயபாலசிங்கம் | 8 |
| Tribute to the Late Mr. Apputhurai Jeyaratnam | Devanesan Nesiah | 10 |
| Appreciation | Walter Keller/ GTZ | 12 |
| தொழிலை எமது சமூகத்திற்கான... | டக்ளஸ் தேவானந்தா | 13 |
| என் நண்பன், என்தோழன், என் சகபாடி | சுந்தரம் டிவகலாலா | 14 |
| கல்வி சாய்ந்தது | சோ.தேவராஜா | 16 |
| மக்கள் நலன் சேவையாளன் | இரங்கநாதன் உமாகாந்தன் | 19 |
| Kokuvil Mama | Dayana Perampalam | 22 |
| அமரர் ஜெயத்தை நினைவில் துதிக்கின்றேன் | ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் | 23 |
| மதிப்புக்குரிய ஜெயரத்தினம் | திருமதி தவமலர் கந்தசாமி | 26 |
| சிவபதம் அடைந்த அமரர் | திரு. கணேசமூர்த்தி | 28 |
| பண்பாளனுக்கு எமது அஞ்சலி | சி.வி.கே. சிவஞானம் | 29 |
| தோழர் அ.ஜெயரட்ணம் | தோழர் தங்கவடிவேல் சௌந்தர் | 30 |
| சமூக மாற்ற சக்திகளுக்குப் பேரிழப்பு | தோழர் முனைவர். ந. இரவீந்திரன் | 31 |
| My lifelong friend... | A. Thillainathan | 35 |
| An irreparable... | Elanko Chelliah | 35 |
| True Friendship | Memerable triplets photo | 36 |
| அ.ஜெயரத்தினம் B.A (Hons) | முகிதீன் பிச்சை முகம்மது ஜலீல் | 37 |
| தோழர் ஜெயரட்ணம் | பேராசிரியர் பாலசுகுமார் | 41 |
| Memories Never Dies!.... | S.Krishnananthan | 42 |
| மீண்டும் பிறந்து வா அண்ணா | திருமதி.இரவீந்திராதேவி குலேந்திரன் | 46 |
| நீங்காத நினைவுகள் | க.பரமேஸ்வரன் | 50 |
| சிகரம் சரிந்தது | திருமதி கவிதா பிரேமச்சந்திரன் | 51 |
| அன்பும் அறிவும் மிக்க நண்பர் | மு. சண்முகம் | 52 |
| உள்ளத்தில் உறுதியும் செயலில் நேர்மையும் | தோழர். சி.க. செந்திவேல் | 54 |
| To our loving Kunchiah family | Ravi, Geetha, Raviena, Rathesh and Rasa Aunty | 57 |
| நெருப்பாறுகளை நீந்திக் கடந்த நண்பன் | வாழ்நாள் பேராசிரியர் சி.மௌனகுரு | 58 |
| துன்பக் கடலில் மூழ்கினேன் அப்பா | தமயந்தி நக்கீரன் | 64 |
| அன்பு அண்ணனுக்கு... | திருமதி.சொர்ணகாந்தரூபி லோகநாதன் | 65 |
| எங்கள் பெரியப்பா... | நல்லையா வில்லியம் சாந்தகுமார் | 67 |
| மறக்க மூடியாத பெருமகனார் | தோழர் தர்மகுலசிங்கம் | 68 |
| ஜெயரட்ணம் அவர்கள் ஓர் உன்னத மனிதன் | முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் | 69 |
| அர்த்தமுள்ள விடுதலைப் பயணத்தில்... | க. தணிகாசலம் | 71 |
| பொருளியல் சிந்தனைகளும் பாரதியும் | அ. ஜெயரத்தினம் | 73 |
| Tributes from Grandchildren | | 90 |
| வம்சவிருட்சம் | | 92 |
| நன்றிநவிலல் | | 93 |




http://ninaivumalar.online/

# தந்தையின் வாழ்க்கைப் படிகள்

| | |
|---|---|
| பிறப்பு | 16.02.1942 |
| ஆரம்பக் கல்வி: இணுவில் அமெரிக்கன் மிசன் ஆரம்ப பாடசாலை மற்றும் நல்லூர் ஆனந்த வித்தியாசாலை | 1947 - 1952 |
| இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வி: யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம் (யா/ஸ்ரான்லி கல்லூரி) | 1953 - 1960 |
| முதன்முதலான அரசபணி: எழுதுவினைஞர் இலங்கை ஏற்றுமதி இறக்குமதி திணைக்களம் - கொழும்பு | 1960 - 1961 |
| பல்கலைக்கழக கல்வி: இலங்கை பல்கலைக் கழகம் - பேராதனை | 1961 - 1964 |
| உதவி விரிவுரையாளர் பணி: கொழும்பு பல்கலைக் கழகம் | 1965 - 1968 |
| இலங்கை நிர்வாக சேவைகள் (SLAS) பரீட்சை சித்தி: | 1968 |
| மாவட்ட வருவாய் அதிகாரி (DRO) பதவியேற்பு - வவுனியா | 1970 |
| திருமணம் | 1970 |
| மாவட்ட வருவாய் அதிகாரி (DRO) இடமாற்றம் – பொத்துவில் | 1970 |
| ஆணையாளர், உணவுக் கட்டுப்பாடு மற்றும் வாகனங்கள் (தற்காலிகம்) | 1971 |
| 1ம் மகள் பிறப்பு | 1974 |
| மாவட்ட வருவாய் அதிகாரி (DRO) பதவியேற்பு – அக்கரைப்பற்று | 1972 – 1976 |
| 2ம் மகள் பிறப்பு | 1975 |
| உதவித் தேர்தல் ஆணையாளர் – மட்டக்களப்பு | 1976 -1978 |
| உதவித் தேர்தல் ஆணையாளர் – யாழ்ப்பாணம் | 1978 - 1983 |
| 3ம் மகள் பிறப்பு | 1979 |
| உதவித் திட்டமிடல் பணிப்பாளர் , திட்டமிடல் பணிப்பாளர், தற்காலிகப் பதில் அரச அதிபர் – மன்னார் | 1983-1989 |
| ஆணையாளர், காணிகள் விவகாரம், வடகிழக்கு மாகாணசபை - திருகோணமலை | 1989-1990 |
| செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு வட கிழக்கு மாகாணசபை - திருகோணமலை | 1991 |
| மேலதிக செயலர், புனர்வாழ்வு அமைச்சு, துறைமுக அதிகார சபை – கொழும்பு | 1994 - 2000 |
| மேலதிக செயலர், புனர்வாழ்வு, புனர்நிர்மானம் மற்றும் இந்து கலாசார அமைச்சு – கொழும்பு | 2000 - 2001 |
| அமைச்சு செயலர், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு – கொழும்பு | 2001-2004 |
| அரச பணியிலிருந்து ஓய்வு | 2004 |
| மதியுரைஞர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை – கொழும்பு | 2004 – 2007 |
| மதியுரைஞர் – Senior Govornance Advisor, GTZ (ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்) | 2007 – 2012 |
| இறப்பு | 07.12.2020 |



http://ninaivumalar.online/

# Life of our father in a nut-shell

| | |
|---|---|
| Birth | 16.02.1942 |
| Primary Education: Inuvil American Mission Primary School and Nallur Aanantha Viththiyasalai | 1947 - 1952 |
| Secondary Education: J/Kanagaratnam Madhya Maha Vidyalayam (formerly Stanley College) | 1953 - 1960 |
| 1st Govt. job: Clerk/ Department of Exports and Imports, Colombo | 1960 - 1961 |
| Tertiary Education : University of Ceylon, Peradeniya | 1961 - 1964 |
| Assistant Lecturer : University of Colombo | 1965 - 1968 |
| Passed the Ceylon Administrative Services (CAS now renamed as SLAS) | 1968 |
| 1st Appointment as a Civil Servant / District Revenue Officer – Vavuniya | 1970 |
| Marriage | 1970 |
| Transferred to Pothuvil as DRO | 1970 |
| Commissioner, Food Control and Motor Vehicles Regulation (Temporary) | 1971 |
| Birth of the eldest daughter | 1974 |
| District Revenue Officer – Akkaraipattru | 1972 - 1976 |
| Birth of the second daughter | 1975 |
| Assistant Commissioner, Elections / Batticaloa District | 1976 - 1978 |
| Assistant Commissioner, Elections / Jaffna District | 1978 - 1983 |
| Birth of the youngest daughter | 1979 |
| Deputy Director Planning (DDP) , then Project Director and Acting Government Agent – Mannar | 1983 - 1989 |
| Commissioner, Land Affairs, North Eastern Provincial Council (NEPC), Trincomalee | 1989 – 1990 |
| Secretary, Ministry of Finance and Planning and Founder Director of Department of Training and Personnel Development, NEPC | 1991 |
| Additional Secretary, Ministry of Rehabilitation, Shipping and Ports Authority, Colombo | 1994 - 2000 |
| Additional Secretary, Ministry of Rehabilitation, Reconstruction of the North and East and Hindu Cultural affairs, Colombo | 2000 – 2001 |
| Secretary, Ministry of Rehabilitation, Resettlement and Refugees, Colombo | 2001 – 2004 |
| Retirement from Civil Services | 2004 |
| Advisor, National Child Protection Authority, Colombo | 2004 – 2007 |
| Senior Governance Advisor, GTZ (German Technical Cooperation) | 2007 – 2012 |
| Demise | 07.12.2020 |



http://ninaivumalar.online/

# ஒரு முன்னோடியின் சகாப்தம் முடிந்தது

அப்புத்துரை பாலச்சந்திரன் சகோதரர்
யாழ்ப்பாணம்

அமரர் ஜெயரத்தினம் அவர்கள் அமரர்களான அப்புத்துரை பூமணி தம்பதிகளின் சிரேஷ்ட மகனாக 16.02.1942 இல் பிறந்தார். அவருக்கு ஆறு சகோதரர்கள் உண்டு. அவருக்கு அடுத்தது யோகராஜா, பாலச்சந்திரன், தெய்வேந்திரன், சொர்ணகாந்தரூபி, ரவீந்திராதேவி, புவனேந்திராஜா ஆகிய அறுவர் பிறந்தனர்.

ஜெயரத்தினம் அவர்கள் சிறுவயதிலிருந்தே கல்வியில் மிகவும் கெட்டிக் காரனாக விளங்கினார். மிகவும் வறுமையில் வாடிய குடும்பத்தில் வாழ்ந்தாலும் கல்வி முன்னேற்றம் தான் அவர்களுக்கு வாழ்க்கைக்கு மிகவும் முன்னேற வழிவகுத்தது.

சிறுவயதில் ஆரம்பக் கல்வியை நல்லூர் ஆனந்தா வித்தியாசாலையில் கற்றார். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 1952ம் ஆண்டு சித்தி யடைந்து 1953ம் ஆண்டு ஸ்ரான்லிக் கல்லூரியில் (தற்போது கனகரத்தினம் ம.மா.வி) ஆறாம் ஆண்டில் சேர்ந்து விடுதியில் இருந்து கற்றார். ஆனந்தா வித்தி யாசாலையில் இருந்து முதல் முதலில் சித்தியடைந்த பெருமை இவருக்கே சேரும். தொடர்ந்து கல்லூரியில் முதன்மை மாணாக்கராகவே வந்தார். பின் எஸ்.எஸ்.சி வகுப்புச் சோதனையில் முதல் தர பெறுபேறு (1stDiv) பெற்று கல்லூரிக்கும் தனக்கும் பெருமை பெற்றுக் கொடுத்தார். பின்னர் அக்காலத் தில் எச்.எஸ்.சி (HSC) 1960ஆம் ஆண்டு நடை பெற்ற சோதனையில் சித்தி யடைந்தார். HSC எடுக்க முன்னர் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை எழுதினார்.

HSC பரீட்சைப் பெறுபேறு வரமுன்னர் எழுதுவினைஞர் தேர்வில் சித்தி யடைந்தார். அதனால் அவருக்கு கொழும்பு ஏற்றுமதி இறக்குமதி திணைக்களத் தில் எழுதுவினைஞர் பதவி கிடைத்தது. ஆகவே எழுதுவினைஞராகக் கடமை யாற்றினார். ஆறு மாதம் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது HSC பெறு பேறு கிடைத்தது. அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டார்.

முதன் முதலில் ஸ்ரான்லி கல்லூரியில் இருந்து மூவர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். ஜெயரத்தினம், தில்லைநாதன், நல்லையா ஆகிய மூவருமே கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

ஆகவே அவர் கொழும்பிலிருந்து அப்பாவுக்கு கடிதம் ஒன்று எழுதி



http://ninaivumalar.online/

னார். நான் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு கல்வி கற்க தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்தக் கிளரிக்கல் வேலையை தொடர்ந்து செய்வதா அல்லது பல்கலைக்கழகத்திற்கு கல்வி கற்க செல்வதா? இதற்கு பதில் தரும்படி கேட்டிருந்தார். அப்பா எழுதிய பதிலில் பிச்சை புகினும் கற்கை நன்றே என்று கல்விக்கு அனுமதி அளித்தார். நாங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் கல்வி முக்கியம் என்பதை வலியுறுத்தினார். ஆகவே அண்ணா ஆறு மாதம் செய்த எழுதுவினைஞர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு 1961ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டார். பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டதன் மூலம் எமது ஊரிலிருந்து பல்கலைக்கழகத்தில் முதன் முதல் கல்வி கற்ற பெருமை இவரையே சேரும். இவர் புலமைப் பரிசில் பெற்ற மாணவனாக படித்த காரணத்தால் இவருக்கு பல்கலைக்கல்வி கட்டணம் முக்கால் பகுதி அரசாங்க நிதி கிடைத்தது. மிகுதி கட்டணம் தான் கட்ட வேண்டி ஏற்பட்டது. தற்காலத்தில் மகாபொல நிதி அநேகமான பல்கலை மாணவருக்கு கிடைக்கின்றது.

மேலும் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது பேச்சுப் போட்டிகள், விவாதப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் பெற்றார். இடதுசாரி இயக்கத்திலும் மிக ஈடுபாடாக இருந்தார். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இடதுசாரி இயக்கத்தில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். தடை செய்யப்பட்ட மே தினம், சாதி வன்முறைக்கு எதிரான ஊர்வலம், கோவில் பிரவேசம் ஆகியவற்றிலும் ஈடுபட்டார்.

1964ம் ஆண்டு பல்கலைக்கழக கல்வி முடிந்ததும் உடனடியாகவே அவருக்கு பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளர் பதவி கிடைத்தது. உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் (CAS) இப்போது SLAS என்று சொல்லப்படுகின்ற இலங்கை நிர்வாக சேவை பரீட்சை எடுத்தார். 1968ம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்தார்.

இலங்கை நிர்வாக சேவையில் முதலாவது பதவியாக வவுனியா DRO ஆக பதவியில் அமர்ந்தார். வவுனியாவில் DRO ஆக கடமையாற்றிய காலத்தில் அவருக்கும் கொக்குவிலைச் சேர்ந்த சடையர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி லோகநாயகி அவர்களுக்கும் 1970ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

சிறிது காலத்தின் பின்னர் அவருக்கு கிழக்கு இலங்கையைச் சேர்ந்த பொத்துவில் என்ற ஊருக்கு இடமாற்றம் கிடைத்தது. பொத்துவிலில் கடமை ஆற்றிய காலத்தில் ஜீப்பில் கடமைக்கு லாகுகல என்ற இடத்திற்கு சென்ற போது ஒரு விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தினால் அவருக்கு ஆசன பகுதியில் உள்ள இரண்டு எலும்புகள் உடைந்தன. அதனால் அவருக்கு பாரிய தாக்கம் ஏற்பட்டது.



http://ninaivumalar.online/

உடனடியாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டார். இரண்டு மாதம் அங்கே சிகிச்சை பெற்றார். பின் யாழ்ப்பாணம் வந்து தேவையான மருத்துவம் செய்தார். ஆறு மாதங்களின் பின்னர் ஓரளவு குணமடைந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் உணவுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் வாகன கொமிசனராகவும் தற்காலிகமாகக் கடமையாற்றினார்.

தற்காலிக கடமைக்காலம் முடிந்ததும் மீண்டும் கிழக்கு இலங்கையைச் சேர்ந்த அக்கரைப்பற்று என்னும் இடத்திற்கு DRO ஆக மாற்றம் கிடைத்தது. பின்னர் மட்டக்களப்பு உதவி தேர்தல் ஆணையாளர் ஆக கடமையாற்றினார்.

பின் அங்கிருந்து மாற்றலாகி யாழ்ப்பாணம் உதவி தேர்தல் ஆணை யாளராக கடமையாற்றினார். அந்தக் கால கட்டத்தில் திரு. தேவநேசன் நேசையா அவர்கள் யாழ்.அரச அதிபராகக் கடமையாற்றினார். 1981ம் ஆண்டு நடை பெற்ற மாவட்ட அபிவிருத்தி தேர்தல் மிக நெருக்கடிகளுக்கு மத்தியில் நடை பெற்றது. கொழும்பைச் சேர்ந்த மந்திரிகள் இருவர் யாழ்ப்பாணத்துக்கு வந் தனர். அவர்களால் தேர்தல் கடமைகளுக்கு பெரும் இடையூறு ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது, ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனம் எரிக்கப்பட்டது மேலும் பல கடைகள் எரிக்கப்பட்டன. எப்படியோ தேர்தலும் நடைபெற்றது. இலங்கை சரித்திரத்தில் இத்தேர்தல் கரும்புள்ளியாகியது. தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் வெற்றி பெற்றனர்.

சில காலத்தின் பின்னர் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வுடன் மன்னாருக்கு மாற்றம் கிடைத்தது. பின் அங்கிருந்து திருகோணமலை வட கிழக்கு மாகாண சபையில் நிதியமைச்சின் செயலாளராக மாற்றம் கிடைத்தது.

அதன் பின்னர் அமரர் அஷ்ரப் அவர்கள் புனர்வாழ்வு புனரமைப்பு மந்திரியாக பதவி வகிக்கும்போது அவர் கொழும்புக்கு மாற்றம் செய்து தனது அமைச்சின் செயலாளராக வைத்துக் கொண்டார். தொடர்ந்து அரசாங்கம் மாறினாலும் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் அதன் பின் ஜெயலத் ஜெயவர்த்தன அவர்களுக்கும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக்கு செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின் ஜேர்மனியின் GTZ எனும் நிறுவனத்தில் ஆலோசகராக சிலகாலம் கடமையாற்றினார்.

இப்படியெல்லாம் உயர்பதவிகள் வகித்தாலும் தற்பெருமை சிறிதும் இல்லாதவர், மற்றவர்களை மனம் நோகச் செய்யாதவர். மிகவும் பொறுமை சாலியாக வாழ்ந்து 7.12.2020 அன்று மறைந்தார். இவரது நாமம் வாழியவே.



http://ninaivumalar.online/

# துணிவுடன் தீர்மானமெடுக்கும் நிர்வாகத் தலைவர் அமரர் அ.ஜெயரட்ணம் அவர்கள்

செல்லையா பத்மநாதன்
ஓய்வு நிலை அரச அதிபர்
வவுனியா / யாழ்ப்பாண மாவட்டம்

அமரர் அப்புத்துரை ஜெயரத்தினம் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் ஓர் மூத்த அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

அவர் தனது இடைநிலைக் கல்வியை யாழ் /கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை பேராதனைப் பல்கலைக்கழகத்தில், பொருளியல் துறையில் அரசறிவியல் பாடத்தில் விசேட துறைப் பட்டதாரியுமாவார். அவர் தனது பல்கலைக்கழக காலத்தில் புகழ்பெற்ற அரசியல் விரிவுரையாளர் கலாநிதி A.J.வில்சன் அவர்களது வழிப்படுத்தலின் கீழ் அரசியல் துறை பட்டதாரியாகி, அவரது திறமை காரணமாக இரண்டு வருடங்கள் அளவில், உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் ஆவார்.

பின்னர், நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த பரீட்சையில் தோற்றி, அதில் சித்தியடைந்து, உதவி அரசாங்க அதிபராக அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றியவராவார்.

பின்னர், யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டு சிக்கல் நிரம்பியிருந்த யாழ்ப்பாண மாவட்டசபைத் தேர்தலை நடாத்தி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். யாழ். மத்திய நூல் நிலைய எரிப்பு, இரவிரவாக குருநாகல் மாவட்டத்திலிருந்து தேர்தல் கடமைக்கான ஊழியர் வருகை, தேர்தலில் நடைபெற்ற தில்லு முல்லுகள், அரசியல்வாதிகளது நேரடித் தலையீடு என்பவற்றை முறியடித்து தனது நேர்மையான, துணிச்சலான தீர்மானங்கள் எடுத்ததோடு தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்ட ஓர் அதிகாரியாகும். இவ்விடயத்தில் அவர் காட்டிய நிர்வாக நேர்மையும் துணிவும் எம்மைப்போன்ற இளம் நிர்வாகிகளுக்கு ஓர் முன் உதாரணமாக இருந்தது எனலாம்.

பின்னர், நான் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக கடமை பொறுப்



http://ninaivumalar.online/

பேற்ற பொழுது, யாழ் மாவட்டத்திற்கு பெரிதும் தேவைப்பட்டிருந்த புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளராக பதவி யேற்று மறைந்த அமைச்சர் Dr.ஜயலத் ஜயவர்த்தனாவோடு கடமையாற்றி எம்மாவட்டத் திற்கு அளப்பரிய சேவை செய்த பெருந்தலைவராவார்.

அமரரும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் எனது பாட சாலைக் காலத்தில் அவருடன் நேரடித் தொடர்பு இருந்தது. இடது சாரி சிந் தனை கொண்ட அமரர் காலம் சென்ற இடது சாரி சிந்தனையாளர்களான திரு. கார்த்தியேசு, திரு.ஜனகன் ஆசிரியர் ஆகியோரோடு சேர்ந்து சீன சார்பு இடது சாரிக் கொள்கைகளை வட மாகாணத்தின் இளைஞர்களிடம் வளர்ப்பதற்கு, தனது பல்கலைக்கழக காலத்தில் பாடுபட்ட தோழருமாவார். அவர்களுடன் அக்காலத்தில் மாணவராக நடந்த காலத்தில் நாம் செய்த செயற்பாடுகள் இன்னும் எனது மனக்கண் முன் நிற்கின்றது.

காலத்தில் அழியாத நேர்மையுடன் சேவையாற்றிய அமரர், நேர்மையான நிர்வாகிகளிடையே போற்றத்தக்கவராவார். அவரது ஆத்மா சாந்தியடைவதாக. அவரது பிரிவால் துயருறும் அவரது மனைவி, மூன்று பிள்ளைகள், எனது நட்புக்குரிய சகோதரர்கள், உறவினர் அவர்களுடன் எனது துக்கத்தையும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.



http://ninaivumalar.online/

பழைய மாணவர் சங்கம்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(ஸ்ரான்லி கல்லூரி)
**OLD STUDENTS' ASSOCIATION**
**J/CANAGARATNAM MADHYA MAHA VIDYALAYAM**
**(STANLEY COLLEGE)**

# நிமிர்ந்த நெஞ்சுடைய சமுதாய சிந்தனையாளர்

**க.ஜெயபாலசிங்கம்**
**தலைவர், பழைய மாணவர் தாய்ச்சங்கம்**
**யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி)**

'தோன்றில் புகழோடு தோன்றுக' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைக்கு ஒப்ப எமது கல்லூரி அமைந்துள்ள கிராமமான அரியாலையிலே மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்து தன் வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்வு முறைமைக்கும் தேவையான கல்வியறிவை விடுதி மாணவனாக இருந்து பெற்று வந்த காலத்தில் கல்லூரியின் சிறந்த மாணவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அதன்பின் அரச துறையிலும் அரச சார்பற்ற துறையிலும் பல பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி ஓர் நிர்வாக அதிகாரியாக சேவையாற்றினார். எமது கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக பல பதவிகளையும் வகித்து கல்லூரி சமூக வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக செயற்பட்டார். யுத்த காலத்தில் கல்லூரி பல அழிவுகளை சந்தித்தபோது தனது ஆளுமைக்கு ஏற்ப மாணவர் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக செயற்பட்டார். அதன் விளைவாக சகலரும் பயன்பெறக் கூடியதான ஆங்கில கல்வி அல கொன்று எமது கல்லூரி வளாகத்தில் அமையப்பெற்றது சிறப்பம்சமாகும்.

தனது ஊர் மக்களையும் தான் சார்ந்த சமூக மக்களையும் வறிய பொருளாதார நலிவுற்ற மக்களையும் பெண் விடுதலையும் சமூக மாற்றத்தையும் பெரிதும் விரும்பி செயற்பட்ட ஓர் சமூக மாற்றத்திற்கான போராளியாக புத்தம் புதிய யுகம் மலர வேண்டும் நித்தம் சத்தங்கள் மக்கள் நிம்மதிக்காய் ஒலிக்க வேண்டுமென்ற தாரக நினைவைக் கொண்டதனால் தன்னையோர் இடதுசாரிக் கொள்கை கொண்டவராக ஆக்கிக் கொண்டார். அதன் காரணமாக அவரிடத்திலே சமுதாயம் சார்ந்த நுண்ணறிவும் அதனூடான சுயவிமர்சனமும் என்றும்



http://ninaivumalar.online/

காணக்கூடியதாக இருந்தது. மக்கள் நலன் சார்ந்த அரசியல் கூட்டங்களிலும் இலக்கிய கூட்டங்களிலும் அவரைக் காணக்கூடியதாக இருந்தது.

எங்கெல்லாம் அநியாயம் நடக்கிறதோ அதற்காக நீ கோபப்படுபவனாக இருந்தால் நீயும் நானும் நண்பர்கள் என்ற மாசேதுங் அவர்களுடைய கோட்பாட்டிற்கு இணங்க நட்புலகை அமைத்துக் கொண்டார். அவரிடத்திலே நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய பல விடயங்கள் காணப்பட்டன. குறிப்பாக தான் கலந்து கொள்ளவேண்டிய நிகழ்வுகளிலே தனது வரவு மேற்கொள்ள முடியவில்லை என்றால் முன்கூட்டியே அறிவிக்கின்ற செயற்பாட்டை நடைமுறைப் படுத்துகின்ற ஒருவராக வாழ்நாளில் கடைப்பிடித்து வந்துள்ளார். எளிமையான வாழ்க்கை முறைமையினைக் கொண்டவர். மொழி, சமயம் முறைமைக்கு அப்பால் மனிதப் பண்பியலைக் கடைப்பிடித்து வந்தார். மென்மையான பேசும் சுபாவமும் எல்லோரையும் அரவணைத்து தன் ஆளுமையின் ஊடாக உதவுகின்ற மனப்பான்மை கொண்டவராகவும் விளங்கினார்.

எமது கல்லூரியின் வளர்ச்சிப் பார்வையிலே இவரது குடும்பத்தினரின் குறிப்பாக சகோதரர்களின் வழிகாட்டுதலும் பங்களிப்பும் என்றும் கிடைக்கப் பெறும். எவ்வுதவிகள் கேட்டாலும் மனங்கோணாது உதவுபவர்களாக இருந்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் எம்மை விட்டு அவசரம்போலும் விண்ணுலகம் சென்றுவிட்டார். நாம் அவருக்கு செய்யும் அஞ்சலி அவருடைய நினைவுகளையும் செயற்பாடுகளையும் இம்மண்ணில் வாழுகின்ற மக்களின் விடிவுக்காக உழைப்பதும் அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதுமாகும். இறுதியாக எமது மூத்த உறுப்பினர் திரு.ஜெயரத்தினம் அவர்களின் ஆத்ம சாந்தியடைய எமது கல்லூரி சமூகத்தின் சார்பிலும் குறிப்பாக பழைய மாணவர்கள் சார்பிலும் பிரார்த்திப்போமாக!

நல்லாரைக் காண்பதும் நன்றே!
நலம்மிக்க நல்லார் சொற் கேட்பதும் நன்றே!
நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே!



http://ninaivumalar.online/

# Tribute to the Late Mr. Apputhurai Jeyaratnam

**Dr. Devanesan Nesiah**
**Retired Civil Servant**

I first met Mr. Apputhurai Jeyaratnam, then the Assistant Elections Officer for Jaffna, soon after I assumed duties as the Government Agent and the first District Secretary (to the District Minister and the District Development Council) of Jaffna in mid-1981. It was immediately following a particularly trau matic period in the history of Jaffna, marked by several killings, the burning of the celebrated Jaffna Public Library with over 90,000 books, periodicals and manus cripts, many of them irreplaceable, and a brazen attempt to rig the inaugu ral Dis trict Development Council (DDC) elections. Earlier, Mr. Jeyaratnam had helped the GA in selecting the polling stations, and in selecting and training key offi cials, with a view to ensuring that the election results reflected the will of peo ple of Jaffna. The integrity and professionalism that Mr. Jeyaratnam displayed was characteristic of his career throughout his life and earned him widespread respect. But his crowning achievement was not a consequence of what he did, but of what he refused to do.

The terms of the 1981 District Development Council (DDC) Bill were negotiated by the TULF and President J.R. Jayawardene, and the inaugural DDC elections were scheduled for June 1981. Many hoped that the DDC was going to be one step towards devolution, so these elections were crucial. Sri Lanka has election laws that offer a sound framework for free and fair polls, and, if those laws are duly implemented, could protect the integrity of any election. President J.R. Jayawardene had other ideas. He wanted to ensure that the DDC was not a step towards devolution but a façade that enabled further centralization. Accor dingly, he had sent his two senior Ministers, Gamini Dissanayake and Lalith Athulathmudali to Jaffna to rig the elections with the help of the then Govern ment Agent. The two Ministers had brought with them a set of minor employees, army personnel and police officers from outside and wanted some of them to be appointed to key positions in the conduct of the elections, and for the others to take charge of law and order in Jaffna.

Designed precisely to resist such political pressure, the election laws gave the Government Agent ultimate authority in relation to the elections, even overriding the powers of Cabinet Ministers, who in all other matters would rank higher than the Government Agent. Sadly, however, in this case, my predecessor Government Agent went along with the Ministers' objective despite the objec tions of the Assistant Elections Officer, Apputhurai Jeyaratnam. In the circum



http://ninaivumalar.online/

stances, many of those appointed and trained to key positions in conducting the elections had their letters of appointment revoked. Many of the those who came in with the Ministers were appointed in their place to conduct the elections, and the others were given authority in relation to law and order. In consequence, there were many killings and cases of arson including the burning of the Jaffna Public Library and many other buildings, and much lawlessness and unrest. These were all intended to intimidate and punish the Jaffna people and adversely impact the elections.

Displaying great personal courage Mr. Jeyaratnam refused to cooperate with the effort to rig the elections, defying his own Government Agent, as well as the two Ministers. My predecessor, an officer from the foreign service, had very little knowledge of public administration or of the conduct of elections; neither did the minor employees brought in by the Ministers. The two Ministers knew very little of Jaffna, and those they brought in knew even less. All this contributed to ensure that the rigging was badly bungled, and law and order went out of hand. In consequence, the TULF won all the seats. Averting this result was precisely the purpose for which the two Ministers and their team were sent to Jaffna. My predecessor was relieved of his duties and the Ministers went back even though the unrest and violence generated continued.

Had Apputhurai Jeyaratnam and the other staff cooperated with the rigging, it is likely that the rigging would have succeeded and the impact on the capacity of the administrative service fundamentally compromised at a critical juncture. In the event, the newly elected DDC was able to function for at least a short period, in ways that sought to advance the interests of the Jaffna people, who had been distressed by the events of the weeks preceding and during the elections. Secondly, staff who operated with professionalism and integrity were validated by this experience. Both of these were of enormous value to the Jaffna community but in a more personal way, as the incoming Government Agent, I too benefited. The District Minister and Chairman of the District Development Council were most cooperative. This positive working relationship would not have been possible if the rigging had succeeded and the composition of the DDC was fundamentally different.

Moreover, the administrative service had to function at the very highest levels to meet the challenges of this difficult period. In particular, about two years later, the July 1983 riots took place and Jaffna had to receive tens of thousands of displaced persons coming in, having lost all or most of their belongings. Since most of these persons had no homes in Jaffna, arrangements had to be made to house and feed them. All this complicated our duties in ensuring peace and order



http://ninaivumalar.online/

in Jaffna. If we had some success in meeting these needs, and in containing the unrest and curbing the violence catalyzed by the 1981 events, the credit must go largely to the staff, many of whom were of excellent quality and integrity, and to the population of Jaffna who were most cooperative.

Thus, Apputhurai Jeyaratnam had a critical historical role in frustrating the attempt to rig the DDC elections. Clearly, he was guided, not by any political consideration but by reasons of character and a sense of integrity. During my tenure as Government Agent, I profited greatly from the professionalism and exp ertise of the staff of the Jaffna Kacheri. Among the staff, Apputhurai Jeyaratnam were amongst the youngest and most junior but in terms of dedication to duty and integrity, he was second to none. Unfortunately, I had little opportunity to work with him after I left Jaffna but it was my good fortune to have some brief contact with him when I was working as Additional Commissioner General of Essential Services. I also had the opportunity to meet him and his family on the occasion of the marriage of his daughter Kalyani in December 2009 when I was privileged to be an Attesting Witness at her wedding.

I take great pleasure in paying this tribute to one of the finest men I had the good fortune of getting to know and working with. I wish the best to his family and his friends.

## Appreciation

**Walter Keller**
**Former Senior Advisor**
**GIZ -PIP**

l am extremely sad to hear about the demise of A. Jeyaratnam, my long term colleague in the GIZ supported "Performance improvement Project" (PIP). We did not only have a long history in working together, we were friends at the same time and l had the highest esteem for him personally and his work. Before his retirement and prior to joining GIZ he was a distinguished Public Servant who excelled in all position of responsibilities entrusted. Among a number of different jobs, he was Secretary to the Ministry of Rehabilitation, Resettlement and Refuge Affairs. He will be long remembered for his immense contribution to the work of the GIZ supported PIP and for assisting the Northern and Eastern Provincial Councils and the Local Authorities in enhancing their service delivery systems to the public.



http://ninaivumalar.online/

# தொழிலை எமது சமூகத்திற்கான கடமையாக முன்னெடுத்தவர்

டக்ளஸ் தேவானந்தா பா.உ
கடற்றொழில் அமைச்சர்

அமரர் அப்புத்துரை ஜெயரட்ணம் அவர்கள் நான் முதன் முதலில் ஏற்றி ருந்த வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்குக் கிழக்கின் தமிழ் விவகா ரங்கள் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றியவர்.

குறுகிய காலமே அந்த அமைச்சு செயற்பட்டிருந்த நிலையில் எனது விரைவான செயற்றிட்டங்களுக்கு அவரால் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்க முடிந்திருந்தது.

எனது அரசியல் வரலாற்றில் முதலாவதாக ஏற்றிருந்த அந்த அமைச்சின் மூலமாக ஓர் அமைச்சினை எமது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதற்கு ஓர் உதாரணமாக அந்த அமைச்சை நான் முன்னெடுத்திருந்த நிலையில் அதற்குப் பக்கபலமாக இருந்தவர்களில் அமரர் அப்புத்துரை ஜெயரட்ணமும் ஒருவர் என்பதை மறுக்க முடியாது.

எனது இந்த அமைச்சுக்கு வருவதற்கு முன்பாகவும் அவர் சகோதரர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் அமைச்சராக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிலும் மிகச் சிறந்த முறையில் தனது பணிகளை முன்னெடுத்திருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

தொழிலை எமது மக்களுக்கான கடமையாக முன்னெடுத்திருந்த அமரர் அப்புத்துரை ஜெயரட்ணம் அவர்களது இழப்பு எமது சமூகத்தின் இழப்பாகும்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட ஏனைய அரச பணியாளர்கள் அனைவருடனும் எனதும் எனது கட்சியினதும் துயரங்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

நன்றி



http://ninaivumalar.online/

# என் நண்பன்
# என் தோழன்
# என் சகபாடி

**சுந்தரம் டிவகலாலா**
**முன்னாள் செயலாளர் – கல்வி அமைச்சு**
**வடகிழக்கு மாகாணசபை**

அமரர் ஜெயரட்ணம் அவர்களை 1965ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபத்தில் சந்தித்தேன். அப்போது நான் இரண்டாம் வருட பொருளியல் மாணவன். அவர் நாலாம் வருட பொருளியல் மாணவன். அந்த ஒருவருட காலத்தில் அவருடன் அதிகளவு நெருங்கிப் பழகக் கூடிய சந்தர்ப்பம் குறைவாக இருந்தது எனக் கூறலாம். ஏனெனில் அவர் அந்த வருடம் BA இறுதிப் பரீட்சைக்கு தயார்படுத்திக் கொண்டிருந்த வருடமாகையால்....

பல்கலைக்கழகத்திலிருந்த காலத்தில் மாக்சிச சித்தாந்தத்தில் ஒன்று பட்டிருந்த நாம் பல கலந்துரையாடல்களில் தமிழ், சிங்கள, முஸ்லீம் மாண வர்கள் வேறுபாடின்றி பங்குபற்றினோம் என்பது சிறப்பாக குறிப்பிடத்தக்கதா கும். 1968ம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவையில் ஆட் சேர்ப்ப தற்கான திறந்தபோட்டிப் பரீட்சையில் நாம் இருவரும் அத்துடன் பொருளி யலை சிறப்புப் பாடமாகக் கற்ற நண்பர்களாகிய அமரர்.பற்குணம், அமரர். மார்க்கண்டு, திரு.தில்லைநாதன் ஆகிய ஐவரும் தோற்றி சித்தியடைந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பரீட்சையின் பெறுபேறாக 1970ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதி சேவையில் சேர்ந்தோம். 6 மாத பயிற்சி யின் பின்னர் நண்பன் ஜெயரட்ணம் வவுனியா மாவடத்தில் DRO ஆக பதிவி யேற்றபோது நான் திருகோணமலை மாவட்டத்தில் காணி அபிவிருத்தி உத்தி யோகத்தராக (LDO) பதவியேற்றேன். நண்பன் ஜெயரட்ணம் பதவியேற்ற சிறிது காலத்தில் திருமணம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து புதுமணத் தம்பதியான அவர்களுக்கு வவுனியா வாழ் பிரமுகர்களினால் இரவு விருந்துபசாரம் ஒன்று வழங்கப்பட்டது. அந்த விருந்துபசாரத்தின் பின்னர் நண்பன் ஜெயரட்ணம் அவர்கள் தனது உத்தி யோக இடத்திற்கு சென்றபோது அங்கே ஒரு புதிய செற்றி செட் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அதனை அங்கே வைத்தது யார் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. மறுநாள் காலை அவ்வன்பளிப்பைச் செய்தவர்கள் வவுனியா நகர் வாழ் அன்பர்கள் என அறிந்து கொண்டார். சிறிது நேரத்தில் அவரை அக்காலத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய அதிபர் நெவில் ஜெய



http://ninaivumalar.online/

வீரா அவர்கள் அழைத்து அந்த செற்றி செட் பற்றி விசாரித்தார். நடந்தவற்றை ஜெயரட்ணம் தெளிபடுத்தினார். அதனை செவிமடுத்த அரச அதிபர் "நீர் பொது மக்களிமிருந்து அன்பளிப்பு பெற்றது ஒரு பிழையான விடயம், அதனை எந்த அரச அதிகாரியும் செய்யக்கூடாது. பொது மக்களிடமிருந்து உதவியையோ அன்பளிப்புக்களையோ பெற்ற அரச அதிகாரிகள் நேர்மையாக செயற்பட முடியாது. அதனால் அவரை 24 மணித்தியாலங்களில் இந்த மாவட்டத்தை விட்டுச்சென்று விடும்" என்று கூறியபோது நண்பன் ஜெயரட்ணம் தான் எவரிட மிருந்தும் அன்பளிப்பு பெறவில்லையென்றும், வவுனியா மாவட்டத்தை விட்டு உடனடியாக இடமாற்றத்தில் செல்ல தயாராக இருப்பதாகவும் கூறி அரச அதி பரிடமே இடமாற்றத்திற்கான கட்டளையையும் பெற்றுத்தருமாறு கேட்டார்.

அதனைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்குள் நண்பன் ஜெயரட்ணம் அக்கரைப்பற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதனை அறிந்த நான் திரு கோணமலையிலிருந்து நண்பன் ஜெயரட்ணத்தின் வீட்டிற்கு எனது மனைவி யுடன் சென்று கதைத்தது இப்போதும் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. அரச சேவையில் நாம் எப்பதவி வகித்தாலும் ஒரு மாக்சிச சிந்தனைவாதிக்கும் ஏனையோருக்குமிடையில் செயற்பாட்டு முறையில் வித்தியாசம் இருக்கும். அதனை நான் அவரிடம் நிறையக் கண்டுள்ளேன். அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் சென்ற ஜெயரட்ணம் யாழ்ப்பாணம் சென்று உதவித் தேர்தல் ஆணையாளராக நியமனம் பெற்று அதன் பின்னர் பிரதி திட்டமிடல் பணிப் பாளராக நியமனம் பெற்று செயற்பட்டார். 1989ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபையின் காணி ஆணையாளராக நியமிக்கப்பட்ட அவர் அதனைத் தொடர்ந்து நிதி அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1994இலிருந்து கொழும்பில் கடமையாற்றிய அவர் பல பதவிகள் வகித்து ஓய்வுபெறும் வரையும் அம்மாவட்டத்திலேயே கடமையாற்றினார்.

நண்பன் ஜெயரட்ணத்தினது நேர்மையான நிதானமான மக்கள் நேய சேவைகளிற்கு பல உதாரணங்கள் உண்டு. அரச அதிகாரியாக இருந்த நண்பன் ஜெயரட்ணம் ஒரு இலக்கியவாதி மட்டுமல்ல பல்வேறு விடயங்களை அறிந்து கொண்ட ஒரு அறிஞரும் ஆவார். அவருடைய வாசிப்புத் திறனும் விருப்பும் அலாதியானது. அவர் மென்மையாகப் பேசும் பக்குவம் கொண்டவர். யாழ்ப்பாணம் வந்ததன் பின்னர் ஒரு சில சந்தர்ப்பங்களில் நான் அவரைச் சந்தித்துள்ளேன். ஆறுதல் பணிமனைக்கும் வந்து அவர் எங்களைக் கௌரவப் படுத்தினார்.

அவரை இழந்து இருக்கும் அன்பு மனைவி, அன்புப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்களிற்கு எனதும் எனது குடும்பத்தினரதும் ஆறுதல் வார்த்தைகள் கூறி இச்சிறு எண்ணப் பதிவை முடித்துக் கொள்கின்றேன்.



http://ninaivumalar.online/

## கல்வி சாய்ந்தது

தோழர் சோ.தேவராஜா
சட்டத்தரணி

கல்வி கரையில. கற்பவர் நாள் சில. கற்றவனுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு. கற்றது கையளவு கல்லாதது உலகளவு.

“கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.” (391)

“தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு” (383)

“எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு” (392)

“கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்” (393)

“உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்” (394)

“தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு” (396)

“யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு” (397)

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து” (398)

“தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்” (399)

“கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை” (400)

அறிஞர் அ.ஜெயரத்தினம். நண்பர். தோழர். அவரின் பிரிவை நினைத் ததும் தமிழும் குறளும் எம்மை ஆசுவாசப்படுத்தின. ஆற்றுப்படுத்தின.



http://ninaivumalar.online/

அமைதி தந்தன. கல்விக்குச் சாவில்லை. கல்விக்குச் சரிவில்லை. எனினும் எங்கள் தோழர் அ.ஜெயரத்தினம் அவர்களின் இழப்பு எமது கண் முன்னே கல்வியே சாய்ந்தது போன்ற தவிப்பை ஏற்படுத்தியது.

எண்ணையும் எழுத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு கற்றவர். முகத்தில் இரண்டு புண்களைக் காவித் திரியாமல் இரு கண்களோடு காட்சி தந்தவர்.

தான் கற்ற கல்வியால் அவரின் அறிவு நீரோடையாக ஊறிக் கொண் டேயிருந்தது. 1982-இல் பாரதியாரின் நூற்றாண்டைத் தமிழுலகம் கொண்டாடி யது. தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணத்தில் மாதாந்தம் பாரதி ஆய்வரங்கு நடாத்தியது. அந்த ஆய்வரங்குத் தொடரில் அறிஞர்களைப் பேராசிரியர் க.கைலாசபதி தலைமையில் அழைத்து ஆராய்ந்த போது அதில் அ.ஜெயரத்தினம் மகிழ்வுடன் கலந்தார். பாரதியின் பொருளியல் சிந்தனை களை ஆய்ந்து விளக்க வல்லவர் என்று அவரைக் கைலாஸ் தெரிவு செய் தார். அவரது ஆய்வு அரங்கேறியது. தாயகம் சஞ்சிகையில் பிரசுரமாகியது. தேசிய கலை இலக்கிய பேரவை பின்னாளில் வெளியிட்ட நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு முதல் நூலான 'பாரதி-பன்முகப்பார்வை'யில் அவரது ஆய்வு இடம் பெற்று கல்வியின் ஊற்றாகத் தோற்றம் பெற்றது.

உவப்பாக பேசி - அறிஞர்களுடன் உரையாடி- உள்ளத்தால் பிரிவது அவரின் இயல்புடைத் தொழில் ஆகும். அள்ள அள்ளக் குறையாத அறிவால் ஆய்வுத் திறத்தால் தமிழுக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

கொடிது. கொடிது. இளமையில் வறுமை கொடிது என்பார் ஔவை. வறுமையின் நிறம் சிவப்பு. வர்க்க உணர்வு. அ.ஜெயரத்தினத்தின் அழிவற்ற செல்வம் கல்வி. கள்வர் பயத்துக்கு உள்ளாகும் பொருட்செல்வத்தை அவர் மதித்தார் அல்லர்.

இலங்கை நிர்வாக சேவையில் உயர்ந்தார். மிளிர்ந்தார். அறியாமையும் ஆணவத்திமிரும் அரசோச்சிய எமது சமூகத்தில் அஞ்சாமல் ஞானச் செருக் குடன் தன் பணிகளை ஆற்றினார். இவரது சமகாலத்தில் இவருடன் இன் னொரு நிர்வாக சேவையில் நிமிர்ந்த தோழோடு தோழனாகப் பணிபுரிந்தவர் சி.பற்குணம் அவர்கள். இருவரும் எமது தமிழ்ச் சமூகத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர்கள்.



http://ninaivumalar.online/

தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டு இந்நிலத்தையாளும் வல்லமை படைத்தவர் அ.ஜெயரத்தினம். அவரின் வல்லமைக்கு வலுச்சேர்க்க யாழ். மண்ணுக்கு வாய்ப்பில்லை. எனினும் சிறிது காலம் யாழ்ப்பாணத்தில் உதவித்தேர்தல் ஆணையாளராகத் துணிவுடன் அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

அ.ஜெயரத்தினம் அவர்கள் தனது கல்வித் திறத்தால் பின்னர் அவரை வந்து சேர்ந்த பெரும் பொருட் செல்வத்தைக் கண்டு இன்புற்றாரில்லை. அவர் தன்னை ஒரு மாக்சிஸ்ட்டாக வரித்துக்கொண்ட கற்றறிந்தவர் என்பதனால் மற்றவர்கள் - பிறர் - உலகம் மகிழ்வதற்காகத் தனது பணிகளை ஆற்றித் தான் மகிழ்ந்தவர். உலக இன்பமே தன் இன்பமெனக் கொண்டவர்.

இலங்கை நிர்வாக சேவையில் பல பதவிகளைப் பெற்றார். பதவி வரும் போதும் பணிவுடன் மக்களுக்கு எருது போல் தலைசாய்த்துப் பணிபுரிந்தார். சீனத்து இலக்கிய மேதாவி லூசுன் வாக்கியத்துக்கு இலக்கணமானார். சங்கானைத் தோழர் கதிரேசு தனது பல்கலைக்கழகக் கல்வியினை முதலாளித்துவக் கல்வியெனத் தூக்கியெறிந்தார். அவரை அன்புடன் ஆதரித்து அரவணைத்து இன்புற்று இணைந்து பழகுவார்.

நிர்வாக சேவையில் இருந்தபோது சில பலவந்தமாக இடம்பெற்ற இடமாற்றங்களைக் கூட இன்முகத்துடன் ஏற்றார். அவர் வர்க்க உணர்வுடன் கற்றவர் என்பதனால் எந்த ஊரும் எந்த நாடும் ‘எனது ஊரும் நாடுமே’ எனப் பணிபுரிந்து மகிழ்ந்து வள்ளுவர் கூறும் குறளின் இலக்கியமானார்.

அவருக்கும் எனக்குமிடையிலான அவரின் இறுதிக்கால கொக்குவில் பேரவையின் உரையாடல்களை ஒப்புவித்து ஒப்பாரி வைக்க இது உகந்த தருணமல்ல.

அ.ஜெயரத்தினத்தின் கல்வி உணர்வு, வாழ்வு, அர்ப்பணிப்பு அணையாத விளக்காக - ஒளிவிளக்காக துன்பப்பட்ட மக்களின் துயரைத்துடைக்கும். தனது பணியை எமது தமிழ்ச் சமூகத்தின் ஏழு பிறப்புக்கும் வெளிச்சத்தைத் தரும். மகிழ்ச்சியைத் தரும்.

துக்கத்தைப் பலமாக மாற்றுவோம்!!!



http://ninaivumalar.online/

# மக்கள் நலன் சேவையாளன் அமரர் அ.ஜெயரட்ணம்

**இரங்கநாதன் உமாகாந்தன்**
**பிரதிப் பிரதம செயலாளர் – திட்டமிடல்**
**வடக்கு மாகாணம்**

இப்புவியிலே மானிடராக அவதரித்து மறைவது இயல்பானதெனினும் சிலரது ஆத்மா இவ்வுலகை விட்டு பிரிகின்றபோது எமக்கு ஈடு இணையில்லா இழப்பாக அமைந்து விடுகிறது. அந்த வகையில் 07.12.2020 அன்று காலமான அமரர் அ.ஜெயரட்ணம் அவர்களின் இழப்பு ஓர் பாரிய இழப்பாகும்.

அமரர் அவர்கள் 1942 மாசி மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் இணுவிலில் பிறந்தார். உண்மை, நேர்மை, கடமை, உணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, புத்தாக்க உணர்வு, இரக்க சுபாவம், நவீனத்துவ சிந்தனை என்பவற்றை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த உயரிய பண்பாளராக விளங்கினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அமரர் அ.ஜெயரட்ணம் அவர்கள் 1970ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு உதவி அரசாங்க அதிபராகவும், பின்பு மன்னார் மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளர், கருத்திட்ட பணிப்பாளர் மற்றும் பல்துறை உயர்பதவிகளை வகித்து வந்தார். இவர் தான் பணியாற்றிய காலத்தில் பல பதவிகளை வகித்து அப்பதவிகளுக்கு பெருமை சேர்த்தார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

1990களின் ஆரம்பத்தில் அமரர் அவர்கள் வட கிழக்கு மாகாண சபைக்கு நிதி திட்டமிடல் செயலாளராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் மாகாண சபையின் நிதி நடைமுறையின் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு காணப்பட்டது. அவ்வேளையில் திரு.அ.ஜெயரட்ணம் அவர்கள் பல நிர்வாகிகள், கணக்கியல் நிபுணர்கள் மற்றும் திட்டமிடலாளர்கள் யாவரையும் ஒன்று கூட்டி மாகாண சபைக்காக ஒரு சிறந்த நிதி முறைமைக் கொள்கைகளை வகுத்தவர் என்றால் அது மிகையாகாது. அத்துடன் நிதி மற்றும் திட்டமிடல் செயலகத்தின் செயலாளர் என்ற வகையில் அப்போதைய வடமாகாணத்தின் பிரதிச் செயலாளராக இருந்த அமரர் திரு.சி.ரங்கராஜா அவர்களின் ஒத்துழைப்புடன் பல சிறந்த கருத்திட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கென பல உதவி வழங்கும்



http://ninaivumalar.online/

வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதியீட்டம் செய்வ தற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்ட பெருமையும் அமரர் அவர்களையே சாரும். இதற்கு மகுடம் சூட்டியது போல வடக்கு, கிழக்கு மாகா ணத்தில் ஒரு சிறந்த திட்டமிடல் செயல்முறையை அமரர் சி.ரங்கராஜாவுடன் இணைந்து இம் மாகாணத்திற்காக ஸ்தாபித்தார் என்றார் அது அவருடைய திற மையையும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையையும் வெளிக்காட்டுகின்றது.

1990ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட சகல பட்ட தாரிகளுக்கும் தொழில்வாய்ப்பை வழங்கும்பொருட்டு ஏறக்குறைய 180 பட்ட தாரிகளை முகாமைத்துவ பட்டதாரி பயிலுனர்களாகவும் மற்றும் விசேட பட்ட தாரி பயிலுனர்களாகவும் நியமித்து வட கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட எல்லைப் பரப்பினுள் நிர்வாகப் பயிற்சியினை வழங்குவதற்கு அமரர் அவர்களின் விடாமுயற்சி பாராட்டுக்குரியதாகும். எனினும் இரண்டு வருட கால பயிற்சிகளை அவர்கள் முடிவுறுத்திய பின்னர் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் செயன்முறையில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டது. அச்சூழ்நிலையில் 180 பயிலுனர்களும் தமது பயிற்சிக் காலத்தை முடித்து நிரந்தர நியமனம் கிடைக்காமையிட்டு மிகவும் மனவருத்தத்திற்கு உள்ளாகினர். இச் சூழ்நிலை யில் அமரர் அ.ஜெயரட்ணம் அவர்களின் தற்துணிவில் மத்திய அரசின் திட்டமி டல் அமுலாக்கல் அமைச்சின் ஊடாக பல பிரயத்தனங்களை மேற் கொண்டு இப்பட்டதாரி பயிலுனர்களுக்கு திட்ட அமுலாக்கல் உத்தியோகப் பதவி களையும் மற்றும் பல்வேறு அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களில் நிறை வேற்றத் தரப் பதவிகளையும் வழங்குவதற்கு புதிய நடவடிக்கைகளை மேற் கொண்டு இப்பயிலுனர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்த பெருமையும் இவரையே சாரும்.

வட கிழக்கு மாகாண சபையின் 1990களில் அமரர் அவர்கள் செயலா ளராக பணியாற்றிய காலத்தில் இம் மாகாணங்களுக்கான பின்வரும் சேவை களை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

1. வறுமை தணிப்பு திட்டங்களை அமுல்படுத்தியமை.
2. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதில் அனுபவம் உள்ளமையால் வடக்குக் கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக் கான தந்திரோபாய திட்டங்களை வகுத்தமை.
3. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு நிதி நிறுவ னங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி பல கருத்திட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாண பகுதிகளில் நடைமுறைப்படுத்தியமை.
4. மாகாண திட்ட செயன்முறைகளை வடக்குக் கிழக்கில் ஸ்தாபித்தமை.


http://ninaivumalar.online/

5. உள்ளூர் மட்ட திட்டச் செயன்முறைகளை வடக்குக் கிழக்கில் ஸ்தாபித்தமை.
6. வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான ஒரு நிதிக்கொள்கையை வகுத்தமை.
7. மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வடக்கு கிழக்கு மாகாணத் திற்கு பல செயற்பணிகளை நிறைவேற்றியமை.

இவ்வாறான பல பணிகள் மற்றும் நிதி திட்டமிடல் செயன் முறைமைகளை ஸ்தாபிப்பதற்காக முன்னின்று உழைத்த பெருமை அமரர் அவர்களையே சாரும். இவ்வாறான ஒரு நல்லறிவாளன், ஒரு சேவையாளன், மனிதாபிமான மிக்க முறையில் மக்களுடன் பழகியதுடன் நட்புக்கும் முன்னுரிமை கொடுப்ப தில் என்றும் பின்னிற்கவில்லை.

இவரின் ஓய்வு நிலைக்கு முன்பு மத்திய புனர்வாழ்வு அமைச்சில் செயலா ளராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான ஒரு மனிதாபி மானம் மிக்க பண்பாளன் மற்றும் தன்னார்வத்துடன் பல பணிகளை மேற் கொண்டு மக்களுக்காக சேவையாற்றிய மகான் எம்மைவிட்டுப் பிரிந்தது எமது சமூகத்திற்குப் பேரிழப்பாகும். இவரது பிரிவு எம் எல்லோருக்கும் ஆழ்ந்த கவ லையை ஏற்படுத்தியுள்ளது. இவரின் வழிகாட்டலில் உருவாக்கியவர்கள் இன்று எம் மத்தியில் உயர் பதவிகளை வகித்து சிறப்பாக சேவையாற்றுவது குறிப் பிடத்தக்கது. எனவே இவரது இலட்சியப் பாதையைப் பின்பற்றி மக்களுக்கு சேவையாற்றுவதில் எமது பங்கு அளப்பரியது. அன்னாரின் ஆத்மா இறைவ னின் பாதாரவிந்தங்களை அடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பம் ஆறுதலடைய இறைவனை வேண்டுகிறேன்.



http://ninaivumalar.online/

# Kokuvil Mama.

**Dayana Perampalam**
**Jaffna**

Our Kokuvil Mama, very intelligent,
With pure and kind Heart and pleasant smile.

Whom we know as our father's heartiest friend.

Wherever you were,
never forgot to wish your friend's family
with beautiful greeting cards
Reactions of your love!

Always visited our father
as his school friend
Your friendship continued
even after marriage and having children
We know very well all of these!

Never seen that,
You both called each other by name
Ever calling " Nanbar"
We know very well the deepest meaning of that word

You both are the ideals for friendship

Mama, whenever you came to hometown,
Never returned without visiting our Father.

You were a motivator to me Mama,
Often asked me to do higher studies.
Mama, you were a teacher to me
for going to the academic side.

At our father's funeral
We saw how you wept
Your tribute touched our hearts.
Your 60 years' friendship,
taken you with him within 1 ½ years.

We wish you to enjoy your friendship at heaven.

We missed you!
But, never ever forget your kindness & Love Mama!

Good bye Kokuvil Mama!.



http://ninaivumalar.online/

# அமரர் ஜெயத்தை நினைவில் துதிக்கின்றேன்

ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம்
இளைப்பாறிய பணிப்பாளர்
வெளிவிவகார அமைச்சு

ஏனையோர்க்கு முன்மாதியாக வாழ்க்கையின் உயரப்படிகளை ஏறலாமென்ற அனுபவ பாடத்தை கற்றுத்தந்த சான்றோன் அமரர் ஜெயத்தை நினைவில் துதிக்கின்றேன்.

ஏழு, எட்டு வயதாகவிருக்கும் போது அறிமுகமாகிய பின்னர் தொடர்ந்து ஊடாடிய இலங்கையின் சிவில் சேவை என்று அழைக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அதியுயர்நிலையை அடைந்து அமைச்சு செயலாளராக ஓய்வு பெற்று, அண்மையில் காலமாகிவிட்ட, எனக்குப் பிரியமான ஒருவரைப் பற்றி அஞ்சலியுரை எழுதுவது என்பது மனதுக்கு மிகவும் பாரமானதொரு விடயமாகும். அமரர் திரு.ஜெயரத்தினம் அவர்களின் மூன்றாவது இளைய சகோதரன் எனது பால்ய நண்பனாகவும், ஒரே வயது குழாமை சேர்ந்தவன் என்ற முறையில் அமரருடன் சிறுவயதிலிருந்து ஊடாடும் வாய்ப்பை பெற்றேன். முன்னர் ஸ்ரான்லிக் கல்லூரியில் (இன்றைய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) புலமைப்பரிசில் பெற்ற மாணவனாக, கல்வியில் முன்னிலை பெற்ற மாணவனாக ஏனையோர் கதைப்பது எனது காதில் விழுந்தமை இன்றும் ஞாபகமுள்ளது.

1961ம் ஆண்டு என எண்ணுகிறேன், அமரர் அன்றைய எச்.எஸ்.சீ (H.S.C) பரீட்சையில் சித்தியடைந்து பேராதனைப்பல்கலைக்கழகத்துக்கு தேர்வாகியுள்ளார் என எனது மறைந்த பாசமிகு தந்தையார் தாயக்கட்டை விளையாடும் சக தோழர்களிடம் “இன்று தான் இந்தப் பிரதேசத்தில் ஒளி தோன்றியுள்ளது” என கூறியமை அமரர் ஜெயம் அவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளமையே உவமானங்களுடன் கூறினார் என்பது எனக்கு விளங்கும் போது 15 வயதாகிவிட்டது. நானும் அவரைப்போன்று ஆனந்த வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியைக் கற்று புலமைப்பரிசில் சித்தியடைந்த பின்னர் அதே ஸ்ரான்லிக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். அவர் அந்நேரம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தார். விடுமுறையில் வரும்போதெல்லாம் எனது வீடு தேடி வந்து எனக்கு பெரும் ஊக்கமளித்தார் என்பது இன்னும் எழுதுவதற்காக சொல்லப்பட்ட காரியம் அல்ல. எனது மனைவி, பிள்ளைகள் எல்லோருக்கும் என்னுடன் பிற்காலத்தில் நெருங்கிப்பழகிய பல நண்பர்களிடம் கூறியுள்ளேன். அவர் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகக் கடமை பார்த்த காலமானாலும் சரி, பின்னர்



http://ninaivumalar.online/

இலங்கை மத்திய வங்கியில் பொருளியாளராக தேர்வு செய்யப்பட்ட கட்டமா னாலும் சரி, பின்னர் கனவு அரச சேவையான இலங்கை நிர்வாகசேவை யிலும் தேர்வு பெற்று பதவியை ஏற்றுக் கொண்டு அலங்கரித்த கட்டமானலும் என்னுடன் அவ்விடயங்களைப் பகிர்ந்து கொண்டமை எனக்கு வெறும் செய்தி அல்ல. அது பெரும் ஊக்குவிப்பு முயற்சியாகவே அமைந்தது என பின்னர் தெரிந்து கொண்டேன். நான் எழுதுவினைஞர் சேவையிலிருந்த காலத்தில் என்னுடன் அன்பாக உரையாடி கடும் முயற்சி செய்வதே வாழ்க்கையில் மேலுயர ஒரே மார்க்கம் என்பதை அழுத்தமாக கூறுவது அவரது வழக்கமா கும். சிறப்பான அம்சம் யாதெனில் புகழ்பெற்ற உலக இலக்கியங்களை வாசிக் கும் பழக்கத்தை என்னிடம் புகுத்தினார். எனது வீட்டில் சிறிய நூலகம் என்று கூறுமளவுக்கு புத்தக தொகுதியொன்று பராமரிக்கப்படுகிறது என்றால் அதற்கு காரணம் அமரர் என்பது மட்டுமே.

அமரருடன் பழகிய நீண்டகாலத்தில் அவரின் பரந்த வாசிப்பு கலாச்சாரம் என் மீது படரத் தொடங்கியது என்பது எனது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை செலுத்தியது என்பது நான் நன்றியுடன் என்றும் நினைவு கூறும் விடயமா கும். ஒரு சம்பவத்தை அழுத்தமாக கூறுவது பொருத்தமானது என எண்ணுகி றேன். சுமார் 30 வருடத்துக்கு மேல் என்று என் நினைவு சாட்சியமளிக்கின்றது. 1980களின் இறுதியில் கொக்குவிலில் அமைந்துள்ள அமரரின் இல்லத்துக்கு சென்றிருந்தேன். பல தேசிய சர்வதேசிய விடயங்களை, அரசியல் பொருளா தார சமூக தளங்களில் உரையாடுவது, அவருடனான சந்திப்பின்போது விவா திப்பது வழமையாகும். அன்றும் அமரருடன் பல விடயங்களையும் உரையா டிய பின்னர் எனது இளம் குடும்பத்தின் மீது பார்வையை திருப்பி பிள்ளை கள் என்ன வயதாகிறது? பிள்ளைகளின் கல்வி, வளர்ப்பு முறைமை அவசியம் என வலியுறுத்தினார். தர்மு அங்கே பாரும் ஒரு கரும்பலகை உள்ளது. நீர் வீட்டுக்கு சென்ற பின்னர் முதல் வேலையாக உமது வீட்டிலும் ஒரு கரும்பலகையை அமைத்துக் கொள்ளும், நான் காரணம் சொல்ல தேலையில்லை நீராகவே புரிந்து கொள்ளுவீர் என்றார். நான் வீட்டுக்கு வந்து மனைவியிடம் இவ்விட யத்தை குறிப்பிட்டேன். எனது மைத்துனர் ஒருவரின் உதவியால் கரும்பலகை யொன்றை வீட்டுச்சுவரொன்றில் நிறுவிக் கொண்டோம். அமரர் குறிப்பிட்டது போல் கரும்பலகையின் பயனை முழுமையாக எனது மூன்று பிள்ளைகளும் பெற்றுக் கொண்டனர். எனது கொழும்பு வீட்டிலும் கரும்பலகையொன்று உள்ளது. கொழும்பு வீட்டில் கரும்பலகை அமைக்கும் போது என் பிள்ளை கள் இளைஞர்களாகிவிட்டமை வேறு விடயம். ஆனால் கரும்பலகை தத்துவம் என்னிடம் ஆழமாக வேரூன்றிவிட்டது. நான் இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் சேவையாற்றும் போது கரும்பலகை தத்துவத்தை பின்



http://ninaivumalar.online/

பற்றினேன். தற்போது வைற்போட் என சொல்லப்படும் பலகையும் கரும்பலகை யின் முன்னேறிய ஒரு வடிவமே இன்றுவரை எனது அன்புக்குரிய பல இளம், நடுத் தரவயது நிறைந்தவர்கள் என்னைச் சந்திக்கும் போது கரும்பலகை தத்து வத்தை அவர்களுக்கும் எடுத்துரைப்பது எனது வழக்கமாகிவிட்டது.

1998ம் ஆண்டு இலங்கை வெளிநாட்டுச்சேவை ஆட்சேர்ப்பு பரீட்சை யில் சித்தியடைந்ததன் காரணமாக நேர்முகப்பரீட்சைக்கு நான் அழைக்கப் பட்டேன். அப்போது அமரர் புனர்வாழ்வு புனரமைச்சில் செயலாளர் என் கின்ற அதிஉயர்பதவியை அலங்கரித்துக்கொண்டிருந்தார். நான் அமரரின் ஆசீர்வாதம் பெறுவதற்காக அவரின் அமைச்சுக்கு சென்றிருந்தேன். நான் நேர் முகப்பரீட்சைக்கு செல்வதை முன்னரே அறிந்திருந்தார். என்னை வரவேற்று உற்சாகமான வார்த்தைகளால் எனக்கு உளமுரமூட்டினார். 'தர்மு அதோ தெரி கிறதே அது தான் நீர் போகவேண்டிய இடம் பயப்படத்தேவையில்லை'. அந்த மேல்மாடிக் கட்டிடத்திலிருந்து பார்த்தால் வெளிவிவகார அமைச்சு முன்பக்கம் காட்சி தரும். இதற்கு முன்னர் நான் வெளிநாட்டமைச்சுக்கு சென்றதில்லை. 'இது உமக்கு வாழ்க்கையில் மேலே உயர்வதற்கு இறுதி சந்தர்ப்பம். நானும் பல பெரிய நேர்முகப்பரீட்சை சபைகளிலே தலைமை தாங்கியிருக்கிறேன். நீர் பயப்படாமல் எதிர் கொள்ளக்கூடிய ஆற்றல்கள் உம்மிடம் இருக்கின்றன' எனக் கூறி நான் கட்டியிருந்த ரையையும் மீள் சரிபார்த்து என்னை அனுப்பி வைத் தார் என்பது எனது நினைவுகளிலே அடிக்கடி தவழும் ஒரு விடயமாக இருக்கி றது. ஒருவருக்கொருவர் கைகொடுத்தல், தூக்கிவிடுதல், அடுத்தவரின் ஏற்றத்தை பார்த்து இரசித்தல் என்பது யாழ்ப்பாண மையங்கொண்டவர்களுக்கு கைவந்த கலையல்ல என்பதை அனுபவத்தில் பலரும் அறிந்திருப்பார்கள். அமரர் எவ்வாறு என் மீது செல்வாக்கு செலுத்தினார் என்பதை புலப்படுத்தவே இவற்றை உரைத் தேன்.

2018 இல் எனது நூலான "சமகாலத்தில் சர்வதேசம்" யாழ் நாவலர் மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது. நூலுக்கு நயப்புரை வழங்கி எனது நிகழ்வினை கௌரவப்படுத்தியமை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தந்தது.

இவ்வஞ்சலிக் குறிப்பை நிறைவு செய்யும் முன்னர் அவரை இழந்து துன்பசாகரத்துள் மூழ்கியிருக்கும் அவரது மனைவி, மூன்று பெண் பிள்ளை கள் அவர்களின் குடும்பத்தினர் அமரரின் சகோதரர், சகோதரிகள் குடும்பத் தினர் யாவர்க்கும் எனது சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் அஞ்சலிப் பூக்களை பாதகாணிக்கையாக்குகிறேன்.



http://ninaivumalar.online/

# மதிப்பிற்குரிய திரு.ஜெயரட்ணம் அவர்களின் நினைவஞ்சலியாக சில வார்த்தைகள்

**திருமதி.தவமலர் கந்தசாமி**
**மகன் ரவீந்திரன் குடும்பம்**
**(அவுஸ்ரேலியா)**

அன்னாரின் அன்பு மனமும் அறிவின் ஆற்றலும் எல்லாருக்கும் நீங்காத நினைவுகளாகும். சிறுபராயம் முதல்கொண்டு நான் நன்கு அறிவேன். அவருடைய கல்வித்திறன் அவரின் வாழ்க்கைக்கு பெருவிளக்காய் வீசியது. அது ஒரு பெரும் வெற்றியாக அவரின் வாழ்க்கையின் உச்சகட்டத்துக்கு அழைத்துச் சென்றது. யாவருக்கும் அது மகிழ்ச்சியைக் கொடுத்து.

திருகோணமலையில் உயர் பதவியில் இருந்த காலத்தில் நானும் திருகோணமலையில் வாழ்ந்து வந்தேன். அப்பொழுது அவர் குடும்பத்தோடு உறவு கொள்ளும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. 1993 காலங்களில் எனது மகனின் திருமணமும் நடைபெற்றது. திருமணத்தில் அவரது உதவி பெரிய பங்களிப்பாக இருந்தது. அவரது அழகான வீட்டிலேயே திருமணப் பெண்ணும் அத்துடன் அவரே தந்தையாக இருந்து மணமகனின் கையில் ஒப்படைக்கும் உன்னதமான கடமையையும் அவரே பொறுப்பெடுத்தார். (மெதடிஸ்த ஆலயத்தில்) கடமையில் கண்ணியமும் கருத்தனமும் கொண்ட பெருமைக்குரிய திரு.ஜெயரட்ணம் அவர்களை மறக்கவும் முடியுமா? சில சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி செய்த அன்புள்ளத்தையும் மறக்க முடியுமா?

அவருக்கு அருமையும் பெருமையும் கொண்ட அன்பு மனைவி ஓர் பெரும் சொத்து. அவர்களுக்கு மூன்று பெண் செல்வங்களைப் பெற்றது மாத்திரமல்ல அவர்கள் கல்வியிலே உயர்ந்தோங்க வேண்டுமென்ற கொள்கையும் கொண்டு மூத்த மகளை ஒரு டாக்டராகப் படிப்பித்தார். அவர்களும் உயர் கல்வியில் மேம்பட்டார்கள். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" யென்று வாழ்க்கையில் உயர்ச்சியைக் கொடுத்தது. இவையெல்லாம் எமது நினைவுகளில் ஆழமாக இருக்கும் முத்துக்கள்.

ஜெயரட்ணம் என்னும் பெயர் அவருக்கு மிகவும் பொருத்தமானது. ஜெயம் என்பது வெற்றி. அது அவரின் வாழ்க்கையில் பெரும் வெற்றியை ஈட்டியது. ரத்தினம் என்றால் அது மிகவும் அரிதானது. ஆம் அவர் தமது



http://ninaivumalar.online/

குடும்பம், பெற்றோர் சகோதரர்களுக்கு ஒரு ரத்தினம். சிந்தையிலும் செயலிலும், கல்வியிலும், கடமையிலும், நீதிமானாகவும் விளங்கினார். இவ்வளவும் பொருந்திய எமது அன்பிற்குரிய ஜெயரத்தினத்தை மகனாகப் பெறுவதற்கு அவரது பெற்றார் என்ன தவம் செய்தார்களோ? அவரின் சகோதரர்கள் Dr. யோகராஜா, பாலச்சந்திரன், சொர்ணகாந்தரூபி, தெய்வேந்திரன், ரவீந்திராதேவி, புவனேந்திரன் யாவருக்கும் ஒரு அன்பு அண்ணா ஆவார்.

அவரது உயர் பதவி Governance Advisor அளவுக்கு கொண்டு சென்றதை நாம் யாவரும் பெருமைப்பட வேண்டிய விடயம். தனது கடமைகளை கருத்தோடும் அன்போடும் செய்யச் செய்ய கடவுள் அவரை மென்மேலும் ஆசீர்வதித்தார் என்பது உண்மை.

அவரின் ஆன்மா சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

இகமும் பரமும் ஒன்றே இவ்வடியார்க்கு
அகமும் ஆண்டவன் அருளே
சுகமும் நற்செல்வமும் சுற்றமும் முற்றமும்
நிகரில்லா இறைவனின் இன்ப பொற் பாதமே!!!



http://ninaivumalar.online/

# சிவபதமடைந்த அமரர்

திரு.கணேசமூர்த்தி
முன்னாள் பிரதி அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினரும்
இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர், (S.L.E.A.S)

அப்புத்துரை ஜெயரட்ணம் அவர்கள் எனது நீண்ட கால நண்பராவார். அமரர் ஜெயரட்ணம் அவர்கள் மிகவும் பண்பான நேர்மையான ஆளுமை மிக்க ஒரு உன்னதமான மனிதராவர். அமரர் ஜெயரட்ணம் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் மிக மூத்த அதிகாரியாக பல்வேறு உயர் பதவிகளை வகித்தவர். அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர் துறை முகங்கள் கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றிய போது நான் அந்த அமைச்சின் அமைப்பாளராக சுமார் ஐந்து வருடம் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத் தது. அவருடன் பல நிர்வாகத் திறமைகளையும் மற்றவர்களுக்கு உதவி புரிவதில் மிகவும் சிறந்த மனிதர். தனது கடமைகளை நேரம் காலம் பாராது திறம்பட நிறைவேற்றுவார். மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமான முறை யில் அணுகி உதவி புரியும் ஒரு பண்பான மனிதன். எல்லோருடனும் அன்பா கப் பழகும் சுபாவம் உள்ளவர். அவர் மற்றவர்களுடன் பேசும்பொழுது மிக வும் மென்மையாகப் பேசுவார். அவர் ஒரு நிறைவான மனிதர். தன்னுடன் பணிபுரிந்த எல்லோரையும் மிகவும் கண்ணியமான முறையில் நடத்தும் ஒரு பண்பான மனிதன். அவர் எங்களை விட்டுப் பிரிந்தாலும் அவர் ஆற்றிய சேவைகளும் அவரின் உயர்வான சிந்தனைகளும் என்றும் நிலைத்திருக்கும்.

அன்னாரின் பிரிவால் அல்லறும் அவரின் குடும்பத்தாருடன் சேர்ந்து அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி.



http://ninaivumalar.online/

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සී.වී.කේ. සිවඥානම්
සභාපති, උතුරු පළාත් සභාව
C.V.K. SIVAGNANAM
Chairman, Northern Provincial Council

A9 வீதி, கைதடி (யாழ்ப்பாணம்) / A9 පාර, කයිතඩි (යාපනය) / A9 Road, Kaithady (Jaffna)
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / e - mail: cvkayes@gmail.com
தொலைபேசி / දුරකතන / Telephone: 021 205 7084, 021 205 7081 (208)
தொலை நகல் / ෆැක්ස් / Fax: 021 205 7084

# பண்பாளனுக்கு எமது அஞ்சலி

**சீ.வி.கே.சிவஞானம்**
**அவைத் தலைவர்**
**வடக்கு மாகாணசபை**

அமரர் அ.ஜெயரத்தினம் அவர்கள் எமது ஸ்ரான்லிக் கல்லூரிக் கால சக மாணவன். தமது வாழ்விலே உயர் நிலையை அடைந்த மாணவர்களில் இவரும் ஒருவர். கல்லூரிக் காலத்திலேயே மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவராக இருந்தார். தனது வாழ்க்கையில் எவரையும் நோகடிக்காதவராகவே இருந்தார்.

அரச சேவையில் பல பதவிகளை வகித்து எல்லோரது நன்மதிப் புக்களையும் பெற்றவர். உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும் வட கிழக்கு இணைந்த மாகாணசபையின் பிரதி பிரதம செயலாளராகவும் இலங்கையின் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராகவும் மிகவும் அர்ப்பணிப்புடனும் ஆற்றலுடனும் பணியாற்றி பெருமை பெற்றவர்.

அவருடைய மனிதாபிமான பண்புகள் வியக்கத்தக்கவை; எவருடனும் கோபப்பட்டதை நான் ஒருபோதும் காணவில்லை.

ஒரு நல்ல குடும்பத் தலைவனாகவும் சிறந்த தந்தையாகவும் விளங்கி அவரது பெருந்தன்மை மற்றும் பண்பியல்புகளால் அவரது மூன்று பிள்ளை களையும் உயர்ந்த கல்வியிலும் தொழில்களிலும் நிலைத்து நிற்க வைத்த உதாரண புருஷனாவார்.

தனிப்பட்ட முறையில் எம்மிருவருக்குமிடையிலும் ஒரு சிறந்த நட்பிருந்தது.

இதுவரை நான் சந்தித்த நான்கு தேர்தல்களின் போதும் என்னை மன மார வாழ்த்தி ஆதரவு தந்தமையை நான் நன்றியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.



http://ninaivumalar.online/

“உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு” என்றார் திருவள்ளுவர்.

இறப்பு என்பது இயற்கையானது. அந்த இறப்பின் பின்பு நற்பேறு பெறும் பொருட்டு நல்வாழ்வு வாழ்ந்த அமரர் ஜெயரத்தினத்தின் ஆன்மா இறைவன் அடியில் அமைதி பெற பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## தோழர் அ.ஜெயரட்ணம் அவர்களுக்கு அஞ்சலி

**தோழர் தங்கவடிவேல் சௌந்தர்**

என் அப்பாவின் அன்புக்குரியவரும் தோழர் சண் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவருமான தோழர் ஜெயரட்ணம் எனது திருமணத்தில் கலந்து வாழ்த்தியதுடன் பதிவுத் திருமணத்தில் எனது சாட்சி யாளராகவும் இருந்து பெருமைப்படுத்தினார். தோழரின் மரணம் துயர் தருவ தாக உள்ளது. அவருக்கு எனது குடும்பம் சார்பில் அஞ்சலியைத் தெரிவித்து அவரது குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



http://ninaivumalar.online/

# சமூக மாற்ற சக்திகளுக்குப் பேரிழப்பு

**தோழர் முனைவர். ந. இரவீந்திரன்**

தோழர் அ. ஜெயரத்தினம் அவர்களது மறைவுச் செய்தி பேர திர்ச்சியைத் தருகிற ஒன்றாக கிடைத்திருக்கிறது. மிக ஆரோக்கியத்துடன், ஒரு இளைஞருக்கு உரிய ஆர்வத்தோடு அவர் கலந்துரையாடல்கள், கூட்டங்கள் போன்றவற்றில் கலந்து கொள்பவராக இருந்து வந்தார். அவ்வாறு துடிப்புடன் இயங்கி வந்தமையால் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்து மரணத்தைச் சந்திக்காது திடீர் மறைவுக்கான அதிர்ச்சிச் செய்தியைத் தந்துள்ளார்.

அவ்வகையில் சந்தித்த ஒரு தருணத்தில் “உங்களுடைய ‘சாதி, தேசம், பண்பாடு’ நூலொன்றைப் பெறமுடியுமா?” எனக் கேட்டிருந்தார். அப்போது என்னிடம் அதன் பிரதி ஏதும் இருக்கவில்லை. இந்தியா சென்று வரும்போது “சாதி, தேசம், பண்பாடு” நூல் ஒன்றை எடுத்துக் கொடுக்க எண்ணி யிருந்தேன்; அதற்குள் அவர் விடைபெற்றுச் சென்றுள்ளார். தனது இளவல் ஒருவனது கருத்தைப் படிக்கும் அவரது ஆர்வத்தை அவ்வாறு அவர் என்னிடம் கேட்டதிலிருந்து கண்டுகொண்டேன்.

அவருடனான எனது முதல் சந்திப்பு இத்தகைய இடையறாக் கற்றலுடன் தொடர்புடையதாக அமைந்திருந்தது. அதற்கு முன்னரே கூட்டங்களிலோ வேறு களங்களிலோ முதல் சந்திப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. மனதில் ஆளப் பதிந்த சந்திப்பாக நாமிருவரும் ஒரே பணியில் ஈடுபட்ட தருணம் அமைந் திருந்தது.

தேசிய கலை இலக்கியப் பேரவை பாரதி நூற்றாண்டின் பொழுது (1982 தை மாதம் தொடங்கி) மாதந்தோறும் ஆய்வரங்கு நிகழ்வை முன்னெடுத்து வந்திருந்தது. அந்தத் தொடரில் “பொருளியல் சிந்தனைகளும் பாரதியும்” எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை தோழர் ஜெயரத்தினம் சமர்ப்பித்திருந் தார். அந்த ஆய்வரங்கத் தொடரைத் தலைமை தாங்கி நடாத்திய பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வு நெறியைச் செப்பனிடுபவராகவும் இருந்தார். அறுப தாம் ஆண்டுகளிலேயே பல்கலைக் கழகத்தில் அவரது மாணவராக இருந்து அத்தகைய ஆய்வு முறைமையை ஜெயரத்தினம் கற்றவர் என்ற பொழுதிலும் பாரதியியலுக்கான மேலதிக அறிதலுக்காக கைலாசிடம் அவர் வந்து உரையா டியுள்ளார். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் (ஆய்வுத் துறையின் அரிச்சுவடியில்



http://ninaivumalar.online/

இருந்த நான் அடிக்கடி சென்று வந்த பொழுதிலான ஒரு நாளில்) பேராசிரியரின் வீட்டில் ஜெயரத்தினம் அவர்களைச் சந்தித்தமை பசுமரத்து ஆணி போலப் பதிந்துள்ளது!

பின்னர் கூட்டங்களிலோ பொது களங்களிலோ சந்திக்கும் வேளைகளில் நட்புணர்வுடன் உரையாடி இருக்கிறோம். யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் ஆணையாளராக அவர் இருந்த காலத்தில் பல்வேறு விடயங்களின் பொருட்டு காரியாலயத்தில் சென்று உரையாடிய தருணங்களும் நினைவில் பதிந்துள்ளன. அத்தகைய உரையாடல்களின் போது சமூக நலநாட்டத்துடன் அவர் பணியாற்றும் பாங்கினை உணரக் கூடியதாக அமைந்திருந்தது. பொதுவாக அவர் மிகச் சாந்தமாகவே பேசுவார். இருப்பினும் அவர் மனதைக் காயப்படுத்தும் சமூக விரோத நடவடிக்கைகளைக் கூற வருகிற பொழுது அறச் சீற்றத்துடன் கோபக் கனலைக் குரலில் கலந்து பேசியதையும் பார்த்திருக்கிறேன்.

தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் மீதான அவரது ஈடுபாடு ஆழமிக்கது. சமூக மாற்ற அக்கறையின் அசைக்க இயலாத பற்றுறுதியை வெளிப்படுத்துவது அது. கவிஞர் முருகையன் தலைமையில் சமயச் சடங்காசாரங்கள் இன்றி நடந்த மணியம் தோழரின் மகளுடைய திருமண நிகழ்வில் கலந்துகொள்ள இயலவில்லை என்று மறுநாளில் குடும்ப சமேதராக வந்து தோழர் ஜெயரத்தினம் உரையாடிய நிகழ்வும் ஆழப் பதிந்து மனதைக் கனக்க வைப்பதாய் உள்ளது.

திருகோணமலையில் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுச் செயலாளராக அவர் இருந்த பொழுது அவரது இல்லத்தில் சென்று எமது பிள்ளைகளுடன் அவரைச் சந்தித்த நாளும் மறக்கவியலாத ஒன்று. எங்களுடைய திருமணத்தை வாழ்த்த வந்த அதே பற்றார்வத்துடன் எங்களை வரவேற்று உபசரித்திருந்தார். அவருடைய மகள் தந்தையின் நினைவுச் சுவடு அர்த்தமுள்ளதாக வெளியிடப்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் தொடர்பு கொண்டு உரையாடிய பொழுது அந்த இரு தருணங்களையும் நினைவு மீட்டினார். பலரும் தங்களிடம் ஏற்பட்டிருந்த சமூக ஊடாட்டத்தைப் பிள்ளைகள் வரையில் கொண்டு செல்லாமல் தங்கள் அளவில் பற்றுறுதியுடன் இருப்பதோடு அமைதி காண்பதுண்டு. மாறாக தோழர் ஜெயரத்தினம் தனது சமூக மாற்ற அபிலாசையைப் பிள்ளைகளிடமும் சுவறவிட்டிருந்த பாங்கினை அந்த உரையாடலில் கண்டுணரக் கூடியதாக அமைந்திருந்தது.



http://ninaivumalar.online/

பாரதி ஆய்வுத் தொடரில் அவர் சமர்ப்பித்த கட்டுரையை இந்த நினைவுக் குறிப்பை எழுதுகிற பொழுது எடுத்துப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எவ்வளவு காத்திரமிக்க ஆக்கம் அது என்ற வியப்பு ஏற்பட்டு நாங்கள் செய்யத் தவறிய பணி குறித்த குற்ற உணர்வை ஏற்படுத்தி நிற்கிறது. முதல் சுதந்திரப் பேரெழுச்சி தொடங்கிய 1906 - 1908 காலகட்டத்தில் பாரதியின் பொரு ளியல் சிந்தனை 1917 ஒக்ரோபர் புரட்சிக்குப் பின்னர் எத்தகைய பரிணமிப்பைப் பெற்றது என்பதை வரலாற்றுப் பொருள் முதல் வாத அணுகுமுறையுடன் மிக அற்புதமாக ஜெயரத்தினம் "பொருளியல் சிந்தனைகளும் பாரதியும்" என்ற அந்த ஆய்வில் வெளிப்படுத்தி உள்ளார். பாரதி காலத்தில் பிரித்தானிய ஏகாதி பத்தியம் தாராளவாதக் கொள்கையுடனேயே இயங்கி வந்தது. இருபதாம் நூற் றாண்டின் முதல் தசாப்தத்திலேயே அதனை பாரதி கண்டித்திருப்பதனை விதந் துரைக்கிறார் தோழர் ஜெயரத்தினம். மக்களிடையே சமாதானம், பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுப் படையெடுப்பை முறியடித்தல் என்பன மட்டுமே அரசுக் குரிய கடமையாக இருக்க இயலாது - மக்களிடையே செல்வம், உணவு, கல்வி, ஆன்ம விருத்தி, ஆரோக்கியம், நல்லொழுக்கம், பொது மகிழ்வு என்பன பெருக ஏற்ற நடைமுறைகளை முன்னெடுப்பதும் அரசின் பணியாக அமைய வேண்டும் என வலியுறுத்தியவர் பாரதி. ருஷ்யப் புரட்சி சோஷலிஸத்தை உலக அரங்குக்கு அறிமுகப்படுத்திய பின்னர் சமத்துவப் பொருளாதாரக் கொள்கையை இந்திய சமூகநியதிக்கு அமைவாக எவ்வாறு வென்றெடுக்க இயலும் என்ற அக்கறை பாரதியிடம் இருந்துள்ளது.

அத்தகைய கனதிமிக்க ஆய்வினை வழங்கிய அவரைத் தொடர்ந்து "தாயகம்" சஞ்சிகையில் எழுத வைத்திருக்க வேண்டும். அவருக்கான வேலைப் பழுக்கள் தொடர்ந்து எழுத இடந்தரவில்லை. வேறு தளங்களில் பல வேறு சந்தர்ப்பங்களில் அவர் எழுதியுள்ளமையை அறிய முடிகிறது. அவற்றை ஒருங்கமைத்து சேமிக்கும் எண்ணம் அவருக்கு இருக்கவில்லை. எழுத்தாளர் என்பதைவிட ஆற்றல்மிக்க நிர்வாகி என்ற கடமையில் மக்கள் நலநாட்டத்தை முன்னெடுப்பதும் சமூக மாற்றக்களங்களுக்கு உத்வேகம் ஊட்டுவதுமே தனக் குரிய காத்திரமிக்க பணி என்று அவர் அமைதி கொண்டுவிட்டார். இருப்பினும் அவரது எழுத்தாக்கங்களைத் தேடியெடுத்து தொகுப்பாக வெளியிட வேண் டிய பொறுப்பு எமக்கு முன்னால் உள்ளது. மக்கள் விடுதலையை நாடும் அனைவரும் அதனைச் சிரமேற் கொண்டு இயங்கியாக வேண்டும்!

"புதிய தளம்" சஞ்சிகையை வெளியிட முற்பட்ட பொழுது அறுபது, எழுபதாம் ஆண்டுகளில் இயங்கிய ஆளுமைகளின் அனுபவங்களைப் பேட்டி



http://ninaivumalar.online/

களின் வாயிலாக வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அத்தகைய இரு நேர்காணல்கள் ஆரோக்கியமான வகையில் வெளிவந்தன. ஆயினும் அவற்றில் வெளிப்பட்ட சில விமரிசனங்கள் சமூகத்தளத்தில் ஏற்க இயலாத நெருக்கடியை ஏற்படுத்துவதாகி விட்டது. அவற்றைச் சீராக்கித் தொடர முடிந்திருந்தால் தோழர் ஜெயரத்தினம் அவர்களது விரிவான ஒரு நேர் காணலை “புதிய தளம்” வாயிலாக வெளிப்படுத்தி இருக்க இயலும்.

இத்தகைய தோழர்களது இழப்பு ஏற்படுகிற பொழுதுதான் அவர்களது கனதியை உணர நிர்ப்பந்திக்கப்படுகிறோம் அவர்கள் இருக்கும் பொழுதே கவனத்திலெடுத்து அவர்களது பங்களிப்பு அனுபவங்களை வெளிப்படுத்தாமல் போயுள்ளமை சமூக மாற்ற சக்திகளுக்கு ஏற்படும் பேரிழப்பாகும். புரட்சிக் கலையை முழு நேரப்பணியாக ஏற்று இயங்கும் தலைவர்கள் கவனங்கொள்ளப் படுகிற அளவுக்கு மக்களுடன் தொடர்பாடி புரட்சியின் உண்மையான சக்தியான மக்களைக் களத்தில் செயற்படுத்தும் பணிக்குரிய ‘சில்லும் அச்சாணியாகவும்’ உள்ள இத்தகைய ஆளுமைகளைக் கண்டுகொள்ளாதிருப்பது துரதிர்ஷ்டமான ஒன்றாகும்.

தோழர் அ. ஜெயரத்தினம் அவர்களது வாழ்வும் பணியும் குறித்த முழுமையான வரலாற்றுத் திரட்டல் தொகுத்து எழுதப்பட வேண்டும் அதனோடு இணைந்ததாக அவரது எழுத்தாக்கங்களைத் தொகுத்து வெளியிடும் நூலாக்கத்துக்கானதாகவும் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயற்படுத்தும் பணியை முற்போக்கு அணியினர் முன்னெடுப்பது அவசியமானதாகும்!.



http://ninaivumalar.online/

## My Lifelong Friend Jeyaratnam

**Arumugam Thillainathan**
**London**

Jeyam and I passed the 5th Standard Scholarship Examination and entered the Stanley Govt Central School in 1953 and studied there until 1960. In 1961, we entered the then University of Ceylon, Peradeniya. Jeyam and I were roommates at the James Peiris Hall for all the four years. We both did Economics Special degree and joined as Assistant Lecturers at the Colombo Campus in 1965. Thereafter, we passed the Ceylon Administrative Service Examination and joined the Public Service in 1970.

In the University, Jeyam was a powerful debater and participated in several debates. He developed his talent in literary critic as well.

Jeyam began to read Karl Max in his early teenage and started believing in Marx philosophies and adopted his ideologies. In the University he developed further his Marxist knowledge and became a Communist, but never a politician. Subsequently, he got attracted towards Mao Zedong and followed his philoso phies.

Jeyam was a non- believer, but he was a virtuous, honest, disciplined, sincere, simple, and humble person. However, he was very bold and courageous and had shown these qualities when he served as the Jaffna District Election Commissioner during the early Eighties.

Jeyam and I treated each other as lifelong friends and had contacts until the last moment, through Face Book. I miss him miserably. I express my sincere condolences to his wife, children, and family.

## An irreparable loss to Sri Lanka

**Elanko Chelliah**
**London**

Uncle, your vision of life was truly remarkable. you are truly indeed an inspiration to us all. Great loss to all the people who know you. May your soul rest in peace. I still remember the time that we spent together. Myself and indeed all who know you have missed a great fan of cricket, distinguished civil servant and a honourable gentleman.



http://ninaivumalar.online/

# True friendship

**from A.Jeyaratnam's memories...**

Markandu, Thillai and I were University mates at Peradeniya and colleagues in the prestigious Ceylon Administrative Service (CAS), later renamed SLAS.

After the graduation at Peradeniya we had an opportunity to jointly prepare for a tough competitive exam that will pave way for us to become members of the prestigious Ceylon Administrative Service. After succeeding in the written test we were called for an interview. Mark came to Colombo, stayed with us and faced the Viva. While returning from the Viva we took a photo and commonly agreed in the event of only one of us get in to the service that person should maintain friendly relationship with the other two for the rest of life. Fortunately, all three of us were selected and became officers in the dream service. Copies of the photo is still with us reminding our friendship.





http://ninaivumalar.online/

## A.ஜெயரத்தினம் BA (Hons)

முகிதீன் பிச்சை முகம்மது ஜலீல்
முன்னாள் உதவி பொது முகாமையாளர்
இலங்கை வங்கி

தனது நண்பரிகளின் இதயத்தில் மிக நெருக்கமாக இறுதிவரை வாழ்ந்தவர் நண்பர் ஜெயரத்தினம். இலங்கை பல்கலைக்கழக பேராதனை வளாகத்தில் ஆரம்பித்த எங்கள் நட்பு நண்பரின் உயிர் அர்ப்பணமாகும் வரை நீடித்தது. ஆத்மார்த்தமாக ஜெயரத்தினம் என்றும் தன் நண்பர்களின் இதயத்தில் வாழ்ந்தவர்.

இலங்கை பல்கலைக்கழகம் (பேராதனை) ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகளையும், கலாநிதிகளையும் வழங்கியது. ஆனால் நாட்டுக்கு ஜெயரத்தினம் என்ற ஒரு அருமையான, உயர்ந்த உள்ளம் படைத்த மனிதனை, சிறந்த கல்விமானை, திறமைமிக்க நிர்வாகசேவை உத்தியோகத்தரை, ஒரு உண்மையான நண்பனைத் தந்தது.

1961ம் ஆண்டு தனது 17வது மிக இளமையான வயதில் பல்கலைக்கழகம் புகுந்த ஒரு மாணவன் 1942ம் ஆண்டில் பிறந்த ஜெயரத்தினம் தனது பள்ளிக்கூட நண்பன் தில்லைநாதன் என்ற மனித நேயம் மிக்க ஒரு அருமையான உயர்ந்த உள்ளம் படைத்த ஒரு நண்பனுடன் நன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டு பல்கலைக்கழகம் புகுந்தார். ஜேம்ஸ் பீரிஸ் மண்டபத்தில் அவர்கள் இருவரும் தங்கும் அறை அமைந்திருந்தது.

முதலாவது ஆண்டில் பொருளாதார பாடத்தில் சிறப்பு சித்தி எய்தி பொருளியலில் விசேட சிறப்பு பட்டப் படிப்புக்கு உரிய தகுதியைப் பெற்றுக் கொண்டார். நாங்கள் ஒரு மாணவர்கள் பொருளியலில் விசேட பட்டப்படிப்புக்கு தெரிவானோம். அதில் நண்பர் தில்லைநாதனும் ஒருவராவார். அன்று முதல் தோழர்கள் ஜெயரத்தினம் தில்லைநாதன் அவர்களுடைய முழு இலட்சியம், பொருளியலில் விசேட வங்கியியல் பட்டப்படிப்பில் முதலாம் தரத்தில் பட்டம் பெறவேண்டும் என்பதாகும்.

காலை நேரம் பொருளியல் விரிவுரை மண்டபத்துக்கு சிரித்த முகத்துடன் தன் அன்பு நண்பன் தில்லைநாதனுடன் அமைதியாக நடந்து வந்து



http://ninaivumalar.online/

அனைவருக்கும் காலை வணக்கம் கூறிவிடுவார். எல்லா விரிவுரைகளிலும் மிகவும் கவனம் செலுத்தி விரிவுரையாளர்களுடன் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பல கேள்விகளைக்கேட்டு தன் அறிவுத்திறனை வளர்த்தார். அவர் சமர்ப்பிக்கும் வாராந்த கட்டுரைகளில் நூல் நிலையத்தில் தான் ஆராய்ச்சி செய்து அறிந்து வைத்து பல அறிஞர்களுடன் கருத்துக்களை மேற்கோள் காட்டி விரிவுரை யாளர்களின் மதிப்பைப் பெற்றுக் கொள்வார். இவர்தான் சமர்ப்பித்து நன்ம திப்பைப் பெற்றுக்கொண்ட கட்டுரைகளை எல்லாம் "ஜலீல் நீங்கள் படிப் பில் கவனம் செலுத்தாத விளையாட்டுப்பிள்ளை இவற்றைப் படியுங்கள்" என்று காட்டமாக கூறி, அறிவுறுத்தி அவற்றை எனக்குத் தருவார். அப்படியான பெருந் தன்மையும் பெருங்குணமும் கொண்ட நண்பன் ஜெயரத்தினம். அதனைப் போலவே அருமை நண்பர் தில்லைநாதனும் "ஜலீல் விளையாடித் திரியாமல் படியுங்கள் என்று தன் கட்டுரைகளையும் தருவார். இவற்றை எல்லாம் எனது "நண்பிகள்" எனக்கு எழுதித் தருவார்கள். இறைவன் தந்த எனது இனிய இரு நண்பர்களாலும் எனது அறிவு வளர்ந்தது. எனது பல்கலைக்கழக வாழ்க்கை உல்லாசமாக அமைந்தது.

பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களுக்கு பகிடிவதை நடை பெறும். இரண்டு வாரங்களுக்கு இந்த பகிடி வதை தொடரும். ஜெயரத் தினம் "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை அச்ச மில்லை என்பதில்லையே" என்று பாடினான் மகாகவி பாரதி. அதனைப் போல் எந்த பகிடிவதைக்கும் ஈடுகொடுத்து சமாளித்து சிரித்த முகத்துடன் எதிர் கொள்ளுவார். எங்களது இரண்டாம் வருடத்தில் நாங்கள் "சீனியர்" வந்த புது முகங்களை "ஜூனியர்" களை ஜெயரத்தினம் பகிடிவதைகளில் ஈடுபட மறுத் துவிட்டார். புதிய மாணவர்களுடன் அன்பாகப் பழகி பண்புடன் உபசரித்து அறிவுரைகள் வழங்கி ஒரு புதிய உத்தியைக் கையாண்ட மனித நேயம் உள்ள ஒரு மாமனிதன் தான் நண்பன் ஜெயரத்தினம்.

அன்றைய காலகட்டத்தில் இருந்த தமிழ் - முஸ்லீம் உறவுகள் யாராலும் இருந்த புரிந்துணர்வுகளுக்கு ஓர் அடையாளமாகவே எங்கள் நட்பும், உறவும் விளங்கி 60 அறுபது வருடங்களாக நீடித்திருந்தது.

ஜெயரத்தினத்தின் மாமா கைத்தறி நூல் இறக்குமதியாளர். எனது தந்தை கைத்தறி தொழிற்சாலை வைத்து நடத்தி வந்தார். தனது தொழிற் சாலைக்குத் தேவையான மொத்த நூல்களையும் ஜெயரத்தினத்தின் மாமாவி டமே எனது தந்தை கொள்வனவு செய்வார். அவர்கள் இருவருக்கும் இடையே



http://ninaivumalar.online/

ஒரு நட்பு விளங்கியது. யாழ்ப்பாணத்தில் இருந்து அவர்கள் வெளியேற்றப் படும்வரை அவர்களின் நல்ல நட்பு நீடித்திருந்தது.

ஜெயரத்தினம் அக்கரைப்பற்று பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிப ராாக பதவி வகித்த கால கட்டத்தில் நானும் என் தகப்பனும் அக்கரைப்பற்று சென்று ஜெயரத்தினத்தை பல தடவைகள் சந்தித்து அளவளாவி இருக்கின் றோம்.

எனது மனைவியின் மூத்த அண்ணன் காலஞ்சென்ற எம்.ஏ.அப்துல் மஜீத் பொத்துவிலில் சம்மாந்துறை பாராளுமன்ற பிரதிநிதியாகவும் நெசவுத் தொழில் அமைச்சராகவும் பதவி வகித்தார். அவர் ஜெயரத்தினத்தின் சேவை களை பல தடவைகள் பாராட்டி மெச்சுவார். அப்துல் மஜீத் அவர்களுக்கும் ஜெயரத்தினத்துக்கும் இடையே ஒரு நல்லுறவு, புரிந்துணர்வு இருந்தது. ஜெயரத்தினம் எனக்கு பல தடவைகள் கூறினார். ஜலீல் உங்கள் மச்சான் எந்தச் சமயத்திலும் என் கடமைகளில் தலையிட்டதே இல்லை. எனது சேவை யில் எந்த தலையீடும் செய்யாத ஒரு அரசியல்வாதி அப்துல் மஜீத் என்று கூறுவார். அவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் மிக மதிப்பும் நல்லெண்ண மும் அன்பும் கொண்டு உறவாடினார்கள்.

நண்பர் ஜெயரத்தினம் இலங்கை நிரவாக சேவையில் மிகவும் திறம் பட செயலாற்றி நிர்வாக சேவையில் ஆக உயர்ந்த அந்தஸ்தான அமைச்சின் நிரந்தர காரியதரிசியாக நியமனம் பெற்றார். அவர் புனர்வாழ்வு அமைச்சின் நிரந்தர காரியதரிசியாக பெரும் சேவையாற்றி அமைச்சராக பதவியில் இருந்த டாக்டர் ஜயலத் ஜயவர்தனாவை திறம்படி வழி நடத்தினார். நிர்வாக சேவை உத்தியோகத்தர்களிடையே ஜெயரத்தினத்துக்கு ஒரு மதிப்பு என்றுமே இருந்தது. எந்தவிதமான ஊழலும் இல்லாது மிகவும் திறம்பட அமைச்சை வழிநடத்தினார். ஜெயரத்தினம் பதவி வகித்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் தனது மேலதிகாரிகளின், கீழே உள்ள ஊழியர்களின், பொதுமக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்று விளங்குவார். பல தடவைகள் நான் என் ஜெயரத்தினத்தை புனர்வாழ்வு அமைச்சில் சந்திக்கும்போது எல்லாச் சமயங்களிலும் அவரது மேசையில் எந்தவொரு கோப்பும் இருக்காது. ஏன் என்றால் வேலைகளைத் தாமதிக்காமல் உடனுக்குடனேயே எல்லா வேலை களையும் முடித்திடுவார். கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தல் ஒரு சிறு தவறும் ஏற்படக்கூடாது என்பதிலும் மிக கவனமாக இருந்தார்.



http://ninaivumalar.online/

சில மாதங்களுக்கு முன்பு அவர் கொழும்பு வந்தநேரம் என்னை வந்து சந்தித்தார். அப்போது அவர் தன் காலில் ஒரு சிறுபிரச்சினை என்று ஊன்றுகோலுடன் வந்தார். அவர் பல்கலைக்கழக வளாகத்தில் சறுசுறுப்பாக கம்பீரமாக நடப்பதை நினைவுபடுத்தி இருவரும் சிரித்தோம். பல மணி நேரம் அளவளாவினோம். இனிய நண்பர் தில்லைநாதன் இலங்கை வந்த நேரம் அவரும் ஜெயரத்தினமும், நானும் மற்றுமொரு நிர்வாகசேவையில் அரசாங்க அதிபராக பதவி வகித்த காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களும் "ஹெலிடே இன்" ஹோட்டலில் மதிய உணவு உட்கொண்டு பலமணி நேரம் சிரித்து அளவளாவியதையும் நினைத்து மகிழ்ந்தோம். பல்கலைக்கழக பொருளியல் விசேட வகுப்பில் நாங்கள் ஏழுபேர். அதில் ஒருவர் மாணவி. நான் அவவுக்கு என் முதல் வருடத்தில் வைத்த பெயர் (பட்டப்பெயர்) சரோஜாதேவி. பல்கலைக்கழக வாழ்வு முடிவுற்ற பின்பும் நாங்கள் கதைப்பது இந்த பெயரில்தான். சரோஜாதேவி இப்போது எங்கே என்று அதை எல்லாம் நினைத்து நினைத்து சிரித்தோம், மகிழ்ந்தோம்.

அடிக்கடி தொலைபேசி மூலம் எங்கள் தொடர்பு நீடித்திருந்தது. பல்கலைக்கழக நண்பர்கள் யாராவது மரணித்த செய்தி கிடைத்தால் உடனே நாங்கள் அதை பரிமாறுவோம். மறைந்த நண்பர், நண்பிகளின் நல்ல குணங்களை நினைவு கூறுவோம்.

நண்பர் ஜெயரத்தினம் மறைவதற்கு இரு நாட்களுக்கு முன்பு தொலை பேசியில் தொடர்புகொண்டு அவருடைய யாழ்ப்பாண வீட்டு விலாசத்தைக் கேட்டேன். எங்கள் நண்பர் அவுஸ்ரேலியாவில் இருக்கும் பேராசிரியர் அமீர் அலியின் புத்தகம் ஒன்றை ஜெயரத்தினத்துக்கு தபாலில் அனுப்புவதற்காக விலாசம் தேவைப்பட்டது. அவர் மகிழ்ச்சியாக தான் அந்தப் புத்தகத்தை எதிர்பார்ப்பதாகக் கூறினார். அதேசமயம் கூறினார் ஜலீல் மறுமுறை அமீர் அலி இலங்கை வந்தால் நீங்களும் அவரும் யாழ்ப்பாணம் வந்தால் என் வீட்டில் உணவு அருந்த வேண்டும் என்று அழைப்பு தந்தார். நானும் நிச்சய-மாக என்று கூறினேன். மறுநாள் நான் புத்தகத்தை அனுப்பிவிட்டேன். சில நாட்கள் கழித்து நண்பர் தில்லைநாதன் தொலைபேசியில் ஜெயரத்தினத்தின் மறைவுச் துயரச் செய்தியை கூறி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். நான் புத்தகம் அனுப்பிய அன்றே அவர் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

ஜெயரத்தினம் மனித நேயம், இரக்கம், அன்பு, பாசம் நிறைந்த ஒரு மாமனிதன். அவரது உள்ளம் என்றுமே ஒன்றுபொல் இருந்தது. எந்த உயர்



http://ninaivumalar.online/

பதவியில் இருந்தபோதிலும் உள்ளம் என்றுமே மிக மிக பணிவாக இருந்தது. நான் என்ற கர்வம், பதவி என்ற மோகம் என்றும் தலைகாட்டியதில்லை. அவரது பழக்க வழக்கங்கள் புனிதமானவை. மதுவைத் தொட்டதில்லை. புகைபிடிப்ப தில்லை, எந்த கெட்ட பழக்கமும் அவரிடம் இருந்ததே இல்லை.

காலப்போக்கில் தான் ஓய்வுபெற்ற பின் அவர் ஒரு கர்மபோதியாக மாறிக்கொண்டிருந்தார்.

நண்பர் ஜெயரத்தினத்தின் மனமாறாப் புன்னகை, ஊராரும் அருந் தவம் ஆர்க்கின்ற நெஞ்சுறுதி, யாருக்கேனும் அஞ்சாமை, ஊர்க்கொண்ட அறிவுமதி பார்க்கின்ற உயர் விழி நேர்காணும் போதினிலே நெஞ்சுநிறை நட்புரிமை வட ஈழத்தின் நன்முத்தி, மணி விளக்கு என்று இகபரம் போற்ற வாழ்ந்த என் அருமை, இனிய நண்பன் ஜெயரத்தினத்தின் ஆத்மாவில் இறையருள் பொழியவும், மறையருள் நிறையவும் அன்னவர்க்கு நான் இரு கரங்களையும் ஏந்தி வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

## தோழர் ஜெயரட்ணம்

**பேராசிரியர் பாலசுகுமார்**

தொண்ணூறுகளில் ஒரு நாள் தோழர் பற்குணம் எனக்கு ஒருவரை அறி முகப்படுத்துகிறார். இவர் ஜெயரட்ணம் என பேராசிரியர் மௌனகுரு மூலம் பெயரளவில் அறியப்பட்ட ஜெயரட்ணம் என் முதல் அறிமுகத்திலேயே கவர்ந்து விடுகிறார்.

எளிமையும் புன்னகையும் நிறைந்த முகம் ஒரு அறிவார்ந்த பார்வை தொடரும் உரையாடல் என்னையும் அவருக்குப் பிடித்துப்போகிறது.

தொடர்ந்து பல சந்தர்ப்பங்கள் விழாக்கள், கருத்தரங்குகளில் அவருக் கும் எனக்குமான புரிதல் நீள்கிறது. என் நாடகங்களைப் பார்த்து பரவசப்பட்ட வர். கருஞ்சுழி நாடகத்தைப் பார்த்த அவர் கட்டிப்பிடித்து பாராட்டியது இன்ன மும் என் நினைவில் நிலைத்ததொன்று.

மாக்சியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர், ஓய்வறியா வாசிப்பாளன். செவ்வணக்கம் சொல்லி அஞ்சலிக்கின்றேன்.



http://ninaivumalar.online/

# Memories Never Dies! A Tribute to Apputhurai Jeyaratnam

**S.Krishnananthan**
**Retired Civil Servant**

Mr Apputhurai Jeyaratnam is a multifaceted personality. He was an able administrator, a humanist with a rational mind, a vociferous reader especially Marxist and world literature in Tamil and English and politically a sympathizer of the left. I too shared with him passionately in these pursuits. All these commonalities blossomed into lifelong friendship in no time.

It was early 80s of the last century, when we first met in Mannar in an official capacity. I joined him as Project Accountant of the newly launched World Bank funded Integrated Rural Development Project- IRDP where he was the Project Director. Incidentally, the recently demised Mr Sivagurunathan Rangarajah was the Assistant Project Director of the same project. Later Mr Rangarajah gained prominence as the last Chief Secretary of the merged Northern and Eastern Provinces and the first Chief Secretary of the Northern Province.

Mr Jeyaratnam was handpicked to the post of Project Director with great expectations. He accepted this challenge readily and immersed into the project with full of enthusiasm partly to justify the trust and confidence placed on him but chiefly to be part of the team for realising a great dream of people of Mannar for a fruitful quality life.

Integrated approach to rural development was a novel concept at that time towards alleviation of poverty. Mannar during this period was in a sorry pitiful state. it had not been connected to the national power grid but depended on electricity from old oil powered generators, that failed frequently. Drinking water was an other hazard especially in the Mannar Island with water supplied only for an hour or two in the mornings and the people have to queue up with wooden pots near public standpipes to collect this precocious liquid. Other infrastructure essentials such as transport. health, education, fisheries and agriculture were also in a bad state. The people in Mannar did not have proper infrastructure facilities due to years of neglect and were leading a life of misery.

The IRD Project was an ambitious project that would have transformed the entire district beyond recognition. But it was not to be, even before it was properly launched, the entire Northeast Province was engulfed in periodic violence and Mannar was one of the worst affected districts in the entire province. The Project limped for a few more years and came to a complete halt in 1988 to the disappointment of all of us.



http://ninaivumalar.online/

However during the brief existence, much was achieved in some aspects of the project due to the untiring efforts of Mr Jeyaratnam. The IRDP building in the Kachcheri premises in the Mannar District still exists as a standing monu ment of the Project.

To this date, all of us who had worked in Mannar even for a few years cherish the memory of Mannar District and people of Mannar for transforming us as good citizens of Sri Lanka, of course in different but significant ways.

Nevertheless, during this brief period of existence, small but noteworthy beginnings were initiated. and work was carried out during day and night as if the despite frequent skirmishes between the militants and the security forces, it was believed that the disturbances were a temporary phenomena and peaceful environment would become a reality soon.

It should not be forgotten that Mr A.Jeyaratnam was our boss, but with a difference-a benevolent boss. We worked as a team. The usual practice in team work is for the leader getting credit for all the successes and blames others for the failures. This dampens the enthusiasm of other members resulting in benefits of teamwork becoming marginal.

Mr Jeyaratnam was an exception to this rule. He had the grace in accept ing failures on his shoulders and reward successes to his colleagues. He was an example for magnanimity. This encourages team members to perform to the maximum.

In 1984, when I submitted the first year final accounts for the Project, it was highly acclaimed by World Bank and other high officials in Colombo as it was the first time, a final account was prepared locally without any foreign in puts.. He as the Project Director could have claimed sole ownership for the suc cess, but he being a gentleman went to town giving me alone absolute credit for this accomplishment. This is only one instant, but the examples are too many to be narrated in a short article like this. He is a natural team player and team players whether in sports or in any other activities are assets to the entire side and worthy of emulation.

Thus IRDP Mannar was a short-lived Project, once the project was finally ter minated in late 1988, months of dejection followed, but it turned out to be tem porary, elections were on the horizon for President and Parliament. Mr Jeyarat-nam came forward to meticulously plan and to conduct the Presidential Election in 1988 and soon thereafter Parliamentary Election 1989 in quick succession


http://ninaivumalar.online/

in Mannar district amidst the presence of armed groups including Indian Peace Keeping Force (IPKF), Sri Lankan army and numerous militant groups that made life night marish.He had successfully conducted both elections amidst all the constraints.

In this connection, it should be reminded that Mr Jeyaratnam had pre vious experiences in organizing elections in the midst of chaos. As Assistant Commissioner of Elections in Jaffna district during the notorious 1981 District Development Council Elections in violent prone situation with a couple of senior cabinet ministers from Colombo determined to engage in vote rigging, he had successfully conducted elections and declared results. Even today, Senior Public Servants of that era, speak with nostalgia of the courage and stamina displayed by Mr Jeyaratnam in overcoming the intimidation and threats and successfully conducting the elections.

1990 saw Mr Jeyaratnam assuming duties in Trincomalee as Secretary, Provincial Ministry of , Finance, Planning and Cooperative Development of the newly formed Northeast Provincial Council. It was a challenge as it was a new institution, One had to select suitable officers, organize institutions, set standards and precedents for the successors to follow. In this circumstances, he persuaded me to join him as Director Budget. It was an offer that I could not refuse. I readily agreed and joined him in 1994 as Director Budget. Our experience in Mannar had helped us immensely in this new endeavor.

Mr Jeyaratnam as Secretary was instrumental in developing a strategic document named “development direction” to be used as a guide in developing Northeast Province and it was a pioneering effort of the nascent Northeast Prov ince under the cable leadership of Mr Jeyaratnam. The Northeast Province was the first to prepare such a strategic document among all the Provincial Councils in the country inviting praises all round.

Mr Jeyaratnam in 1994,soon after organizing the presidential election for Trincomalee district successfully left the Northeast Provincial Council to assume duties as Secretary to the Ministry of Rehabilitation, Resettlement and Refugee Affairs in Colombo and continued his good work to the whole country.

After his retirement he joined GTZ, subsequently renamed as GIZ as “Local Governance” adviser to the Performance Improvement Project- PIP.As local governance adviser, He made dramatic far-reaching initiatives to awaken the dormant local authorities in the Northern and Eastern provinces.

One of his initiatives was organizing informal advisory committees to each local authority to encourage people participation in the decision making



http://ninaivumalar.online/

process. The other was again organizing Integrated Local Level Development Plans-ILDP to bring both centrally administered Divisional Secretariats and Pro vincial Council run Pradeshasabhas in each Pradeshasabha area under one um brella and formulate plans for the entire area. Under this scheme all development actors whether attached to the Central Government, the Provincial Councils or the Local Authorities got together and prepared integrated plans for implemen tation jointly. His experience in IRDP Mannar would have helped him in formu lating this concept.

It is rather unfortunate that this initiative remains dormant after the clo sure of the GIZ –PIP. This is the fate of many projects, that once the Projects for mulated and implemented with much fanfare and costs they were simply allowed to wither away once the project period is over. If sustainability of projects is not assured, it is unwise to launch any projects at all.

By 2012 both of us had completed all our public sector assignments and returned to our respective villages in Jaffna to lead a peaceful relaxed and con tented life and under these new circumstances, our friendship continued to flourish.

In the opening section, I had indicated that Mr Jeyaratnam had many interests other than his career and that he is a lover of good books and politically a left inclined thinker. But I had not elaborated in the subsequent sections due to my concentrating on his career developments. However even while in service, he was able to look at all issues with empathy and with a socialist perspective in line with his socialist and humanistic upbringing.

Once he was comfortably resettled in his native ancestral home at Kokuvil, Jaffna he resumed his pet literary activities. As a lifelong admirer of poet Barathiyar and academic Prof K.Kailasapathy, he revisited many of their writings and renewed his connection with the "Thesiya Kalai Ilakkiya Peravai' located at kokuvil Jaffna close to his residence to satisfy his lifelong interests in politics and lit erature. "Thesiya Kalai Ilakkiya Peravai' premises were the meeting points of all progressive and leftwing intelligentsia in Jaffna and Mr Jeyaratnam had no hesitation in joining with them to be intellectually active and alive and made quality contributions at the numerous forums.

He was a frequent visitor to the Jaffna public Library to borrow books to satisfy his humanistic urges.

Finally, I wish to appeal to all his friends, relations and well-wishers to rally around a group of his close associates to establish a memorial in Jaffna adjacent to his home a fitting memorial to keep his memory alive.



http://ninaivumalar.online/

# மீண்டும் பிறந்துவா அண்ணா

திருமதி.இரவீந்திராதேவி குலேந்திரன் (சகோதரி)
கொழும்பு

07.12.2020 இந்நாள் எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாளாக அன்று இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தொலைபேசியில் கேட்ட அண்ணாவின் திடீர் மரணம் என்னையும் எனது குடும்பத்தவர்களையும் ஓர்கணம் நிலைகுலையச் செய்துவிட்டது.

மேலும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் அவரின் மரணச் சடங்கில் பங்குபற்ற முடியாமல் போனமை எமக்குப் பெரிய மனவருத்தத்தை ஏற்படுத்தி விட்டது.

அண்ணா தனது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதை முன்னரே அறிந்து கொண்டிருந்தார் போல, நான் எதிர்பார்க்காத விதமாக சென்றவருடம் 2019 கார்த்திகை மாதம் 5ம் திகதி கொழும்பிற்கு அண்ணா என்னைத்தேடி வந்திருந்தார். இங்கே சுமார் 45 நாட்களுக்கு மேலாக எங்களுடன் தங்கியிருந்தார். இதை நினைக்கும்போது எனது மனம் சிறிது ஆறுதல் பெறுகிறது. இந்நாட்களில் என்குடும்பத்தினருடன் தனது கடந்துகால சந்தோசமான தருணங்களை பகிர்ந்துகொண்டார். தனது மனதிலுள்ள சில கவலையான விடயங்களையும் பகிர்ந்துகொண்டு தனது மனதை தேற்றிக்கொண்டார்.

அதுமட்டுமல்ல தனது மரண அறிவித்தலை தானே தயாரித்து எனது இளைய மகனிடம் கொடுத்து அதனை கணனியில் பதிவேற்றம் செய்து வைக்கக் கூறியதுடன் உரிய நேரத்தில் இதனை குடும்பத்தாருக்கு அனுப்பி வைக்கும்படியும் வேண்டிக் கொண்டார். அண்ணாவின் மரணச் செய்தி கேட்டவுடன் தான் எனது மகன் இதனை எமக்கு காண்பித்தார்.

ஏழு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்த பிறந்த மகனாகப் பிறந்த அண்ணா சிறுவயதில் கல்வியில் அதிதிறமைசாலியாக இருந்தார் இந்நாட்களில் அண்ணாவின் நம்பிக்கை, விடா முயற்சி, புத்திமதியுடன் அம்மாவின் ஆசியும் அவரைக் கல்வியில் மேலும் மேலும் திறமைசாலியாக்கியது.

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினும் கற்கை நன்றே”

என்ற பொன்மொழியை அம்மா எப்போதும் கூறியதை நான் மனதில் நிறுத்தி கல்வியில் முன்னேற முடிந்தது என்று அண்ணா கூறுவார்.



http://ninaivumalar.online/

"ஈன்றபொழுதினில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற வள்ளுவரின் பொன் மொழியை மெய்யாக்கியவர் எனது அண்ணா. அதுமட்டுமல்ல தன்னைப்போலவே தன் ஆறு சகோதரர்களையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணமதில் வெற்றியும் கண்டார்.

அண்ணாவின் வாழ்க்கையில் மறக்கமுடியாதவர்களாக முதலில் எனது அம்மா, பப்பாவையும் அதற்கு அடுத்ததாக எங்கள் சக்கரைப் பெரியம்மாவை யும் அத்துடன் தனது கல்விக்கு பெரிதும் உதவிசெய்த எங்கள் சின்னத்தம்பி அத்தானையும் என்றும் நினைவு கூருவார்.

அதுமட்டுமல்ல தனது கல்வித் திறமையாலும் வகித்த உயர் பதவி யாலும் தான் கல்வி கற்ற ஸ்ரான்லி கல்லூரிக்கும் தான் வசித்த ஊருக்கும் தனது சமூகத்திற்கும் தனது குடும்பத்திற்கும் பெருமை சேர்த்தார்.

அண்ணாவின் பொறுமை, சகோதர பாசம் அன்றிலிருந்து இன்றுவரை குறைந்ததே இல்லை. அதுமட்டுமல்ல எனது கணவர், பிள்ளைகளுடன் மிகவும் அன்பாகப் பேசுவார். அயலவர்களுடனும் அதேமாரிதியாக ஒற்றுமையாக இருப்பார். அவரது எளிமையும் பெருமை இல்லாத குணத்தாலும் எல்லோரா லும் விரும்பப்படுவார்.

அன்பு மிக்க மனைவி, முத்தான மூன்று பெண்பிள்ளைகள் அவரது அழகான குடும்பம். அவர்களையும் கல்வியில் சிறந்து விளங்க முன்னேற்றி னார். அருமையான மருமகன்களையும் பேரக் குழந்தைகளையும் பெற்றிருந் தார். எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் தனது மகள்கள் மூவரும் லண்டன் செல்ல விரும்பியபோது எவ்வித தயக்கமும் இல்லாது சந்தோசமாக அனுப்பி வைத்தார்.

உலகில் மறுபிறவி ஒன்று உண்டு என்பது உண்மையென்றால் நீங்கள் எனது வீட்டில் மீண்டும் வந்து பிறக்க வேண்டும் அண்ணா.

இப்படிப்பட்ட பல நல்ல குணங்களை உடைய அண்ணா ஒரு நாட் கூட நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருக்காமல் இவ்வுலகை விட்டு மறைந்தார் என்பது அவருக்கு கிடைத்த கடவுளின் ஆசீர்வாதமாகும்.

அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய நானும் எனது குடும்பமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



http://ninaivumalar.online/

**ஈடுசெய்ய முடியாத உங்கள் இழப்பிற்கு எனது இந்த கவிதை மலர்களை சமர்ப்பணமாக தூவுகின்றேன்.**

எங்கள் இனிய அண்ணாவே
அன்னையாய் தந்தையாய் எம்மை
கண்ணை இமை காப்பது போல
கனிவுடனே எம்மை வளர்த்து வைத்தாய்

ஜெயரத்தினம் என்ற பெயரிற்கு ஏற்ப
ஜெகம் தன்னில் ஓங்கி நின்றாய் - நின்
புயங்களில் எமை சுமந்து நல்ல
கல்வி வறுமையிலும் கற்பித்தாய்

எண்ணமெல்லாம் எங்களின்
உயர்வினையே நினைத்திருந்தாய் - நாம்
வண்ணமுடன் இப்புவியில் வாழ
நல்ல வழி ஆக்கி வகுத்தாய்

மண்ணில் நல்ல கல்வியாளனாய்
மகிழ்வுடனே திகழ்ந்திருந்தாய் - நீர்
விண்ணுயர இலங்கை நிர்வாக சேவையாளராக
வியக்க வைக்கும் பதவி பெற்றாய்

உன் அயராத உழைப்பால் உயர்ந்தோம் - நாம்
உற்ற நற்பதவிகளில் மிளிர வழிவகை செய்தாய்
பெற்றதாய் தந்தையர்க்கு பெரிதுவக்கும் - நல்ல
சான்றோன் என்னும் பெருமை சேர்த்தாய்

என்னதான் இடர்வரினும் - நீர்
எமக்கு உறுதுணையாகிடுவாய்
சொன்ன சொல் தவறாது
தூயவழி பற்றி நின்றாய்

என்னினிய ஒளி விளக்கே - ஏன்
எமை பிரிந்து சென்றாய்?



http://ninaivumalar.online/

நின்முகம் இனி யாம் எப்போது
இப்புவி தன்னில் காண்போமோ?

அண்ணாவே உந்தன் நல்
அன்பினை நாம் மறவோம்
கண்ணீரால் கவலையில் வாடுகின்றோம் - எம்
இதயங்களில் என்றும் வாழ்வாய்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
16 - 02 - 1942



விண்ணில்
07 - 12 - 2020

அமரர்
## அப்புத்துரை ஜெயரத்தினம் - BA,SLAS(ஓய்வு)

முன்னாள் செயலர், புனர்வாழ்வு, புனரமைப்பு
அமைச்சு, கொழும்பு.

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
பாதி வழியில் பரிதவிக்க விட்டு
பறந்து சென்ற மாயமென்ன?
கண்ணிமைக்கும் நேரத்தில் காலன்
உன்னைக் கவர்ந்ததால்
கண்ணீர்க் கடலினிலே கலங்கி நாம் தவிக்கின்றோம்
மீண்டும் நீர் எம் நிலையைக் கண் திறந்து பாராயோ

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

குடும்பத்தினர்



http://ninaivumalar.online/

# நீங்காத நினைவுகள்

**க.பரேமேஸ்வரன்**
**முன்னாள் செயலாளர்**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு**
**கொழும்பு**

நாம் இருவரும் முதலில் அறிமுகமாகியது 1962ம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழக பேராதனை வளாகத்தில். அப்பொழுது நெருங்கி உறவாட சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஆனால் 1970ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை தரம் 5இல் நாம் இருவரும் சேர்ந்தபோது எமது உறவு மிக நெருக்கமாகி யது. முக்கியமாக முதல் ஆறு மாத பயிற்சி காலத்தில் கொழும்பில் ஒவ்வொரு நாளும் சந்தித்து எமது நட்பை வளர்த்துக் கொண்டோம். பின்பு நாம் இருவரும் சேவையில் இருந்து ஓய்வு பெறும் வரை மட்டக்களப்பு, மன்னார், திருகோண மலை இறுதியாக கொழும்பு ஆகிய இடங்களில் ஒன்றாகக் கடமையாற்றினோம்.

இவற்றுள் மறக்க முடியாத பொற்காலம் ; மன்னாரில் கடமையாற்றிய அந்த ஏழு வருடங்கள் I.P.K.F பிரச்சினை யின்போது ஒரே வீட்டில் நம் இரு குடும்பங்களும் ஏறக்குறைய ஒரு வருடத் திற்கு மேல் ஒன்றாக இருந்ததை மறக்க முடியுமா? I.P.K.F பிரச்சினையின் போது யாழப்ப்பாணத்தில் இருந்து முதலில் புறப்பட்ட லொறி ஒன்றில் நான் குடும்பத்துடன் வந்து மன்னாரில் இறங்கியபொழுது நீ உடன் வந்து என்னைக் கட்டியணைத்து அழுத பொழுது நான் ஏன் அழுகிறாய் என்று கேட்டேன். நான் துவக்கு சூட்டில் காயமடைந்ததாக செய்தி வந்தது என கூறி அழுதாய். அக் கண்ணீரே நீ என் மீது எவ்வளவு அன்பு கொண்டுள்ளாய் என்பதைக் காட்டியது.

திருகோணமலையில் கடமையாற்றியபோது ஒரு காலை நேரம் நீ தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு வாழ்த்து தெரிவித்தாய். நான் ஏன் எனக்கேட்டபோது நீயும் நானும் அமைச்சின் செயலாளர்களாக நியமிக் கப்பட்டுள்ளதாக கூறினாய். நான் நம்பவில்லை. அச் செய்தியின் பிரதியை அனுப்பி என்னை மகிழ்வித்தாய். இருவரும் கொழும்பில் பதிவியேற்க ஒன்றாகப் புறப் பட்டு சென்றோம்.

இலங்கை நிர்வாக சேவையில் மிக திறம்பட கடமையாற்றி நல்ல முறை யில் சேவையில் இருந்து ஓய்வு பெற்று சிறந்த நிர்வாக சேவையின் ஒரு



http://ninaivumalar.online/

உதாரண புருஷனாக திகழ்ந்துள்ளாய். பொது சேவையில் பெயரும் புகழும் பெற்றது போல் குடும்ப வாழ்விலும் மிக அன்புடன் இருந்து பெண் பிள்ளைகள் மூவரையும் நல்ல முறையில் வளர்த்து ஒரு சிறந்த குடும்பத் தலைவனாகவும் உன் கடமைகளை நிறைவு செய்தாய். உன்னை நினைத்து நான் என்றுமே பெருமைப்படுகின்றேன்.

இப்பொழுது நீ எம்முடன் இல்லையே ஆனால் நீ எனது குடும்ப நண்பனாக என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய். உன் ஆத்மா சாந்தி அடையவும் உன் குடுத்பத்தினர் மன அமைதி அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## சிகரம் சரிந்தது!!!

**திருமதி கவிதா பிரேமச்சந்திரன்**

அன்புள்ள பெரியப்பா எப்பொழுதும் புன்னகை ததும்பும் வதனம்.

'கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக'. என்ற வள்ளுவ-னின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டியவர். அன்பு துணிவு விடாமுயற்சி தன்னம்பிக்கை சத்தியம் பொறுமை போன்ற நன்னடத்தைகளை தனது அணிகலன்களாக கொண்டு வாழ்ந்தவர்.

பெற்றோர், உடன்பிறப்புகள், மனைவி, பிள்ளைகள், கல்வி கற்ற பாடசாலை, தான் வாழ்ந்த சமூகம் என அனைத்திற்கும் பெருமை சேர்த்தவர்.

தமிழனின் பெருமையை நிலைநாட்டி இந்த இலங்கைத் திருநாட்டில் பெரும் உயர் பதவிகளை வகித்தவர்.

இனிமேல் நான் பெரியப்பா என அழைப்பதற்கு இவ் அவனியில் எனக்கு யாருமில்லை.

இறந்தும் இறவா வரம்பெற்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை துதிக்கிறேன்.

ஓம் நமச்சிவாய.



http://ninaivumalar.online/

# அன்பும் அறிவும் மிக்க நண்பர்

**இ.சண்முகம்** (J.P)
**ஓய்வு பெற்ற தபாலதிபர்**
**ஆனைக்கோட்டை**

நானும் நண்பர் ஜெயரத்தினமும் யா/ஸ்ரான்லி கல்லூரியில் 1954 ஆம் ஆண்டு கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தோம். நான் தரம் ஆறிலும், அவர் தரம் ஏழிலும் கற்றுக்கொண்டிருந்தோம். வயதோ குறைவு பாடசாலைச் சூழலோ புதிது. அத்துடன் விடுதி வாழ்க்கை எனக்கு மனதில் பயமும் கவலையும் ஏற்படுத்தி இருந்தவேளையில், என்மீது அன்பு, பரிவுகாட்டி ஆறுதல் அளித்தவர் நண்பர் ஜெயரத்தினம் அவர்களே! மிகுந்த உற்சாகத்துடன் பயின்ற அவர் 1960ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். ஸ்ரான்லி கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான முதல் மாணவ அணியில் அவரும் ஒருவராக இடம்பிடித்திருந்தார். பாடசாலைக் கல்வி முடித்து ஏற்றுமதி, இறக்குமதித் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய வேளை, பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்று, பட்டம் பெற்ற பின்னர் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையிலும் சித்தி எய்தினார்.

உதவி அரச அதிபர் (பொத்துவில்) தேர்தல்கள் ஆணையாளர் (யாழ்ப்பாணம்) ஆகிய பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்து இலங்கை நிர்வாக சேவையின் அதியுயர் பதிவியான அமைச்சுச் செயலாளர் ஆக புனரமைப்பில் நீண்ட காலம் பணி புரிந்தார். ஓய்வின் பின்னரும் கூட பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசகராக இணைந்து கொள்ள வாய்ப்புக்கள் கிடைத்தன. கொழும்பில் பணியில் இருந்த வேளையிலும், வேறுபல இடங்களிலும் அவரை அடிக்கடி சந்தித்த சந்தர்ப்பம் கிடைத்தது.

மேலும் இடதுசாரிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர் இளமையிலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பினைப் பேணி வந்தார். பீட்டர் கெளமன், சண்முகதாசன், எஸ்.ஏ.விக்கிரமசிங்க, கார்த்திகேசன் மாஸ்டர், வி.பொன்னம்பலம் ஆகியோரது கூட்டங்களுக்குச் செல்லும் வேளையில் என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். எவ்வாறிருந்தபோதும் அனைத்துக் கட்சிகளிலும் அவருக்கும் பல நண்பர்கள் இருந்தார்கள். நண்பர் சிறந்த ஒரு பேச்சாளர், அவரது பேச்சுக்கள் யாவும் உணர்பூர்வமாக அன்றி அறிவு பூர்வமாகவே அமைந்திருக்கும். பாடசாலை நாட்களில் தமிழ் இலக்கியங்களைப்



http://ninaivumalar.online/

படிப்பதிலும், அவற்றின் சிறப்புக்கள் பற்றி நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆழ்ந்த அக்கறையும் உள்ளவர். பாரதியும், பாரதிதாசனும் அவருடைய ஆதர்ச புருஷர்களாவார்.

மிகவும் கஷ்டப்பட்ட சூழலில் பிறந்து வளர்ந்த அவர் அம்மக்களுக்காக தன்னாலான சேவைகளைச் செய்ய பல பிரயத்தனங்களை மேற்கொண்டார். அவரோடு படித்த நாட்கள், பழகிய நாட்கள் என்றென்றும் எம்மனதை விட்டகலாது. அவருடைய பிரிவால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து விடுபட, அவரது குடும்பத்தினருக்கு இறைவன் வழிகாட்டப் பிரார்த்திக்கின்றேன்.

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 ◈ 02 ◈ 1942 |  | 07 ◈ 12 ◈ 2020 |

## அமரர் அப்புத்துரை ஜெயரட்ணம்

நேசித்த நெஞ்சமெல்லாம்
நிறைதுயருக்கானதுவே
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ நெஞ்சம் கனக்குதய்யா
நேர்மையான நல் உள்ளம் கொண்டவரே
நேசமுடன் நிறைகுடமாய் வாழ்ந்தீர்
வஞ்சித்த காலன்
அவன் வானுலகுக்கழைத்தானோ?
நம்பமுடியவில்லை
பண்பான உம் வார்த்தை
என்று நாம் இனிக்கேட்போம்.
உம் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**ஜி.எஸ். லிங்கநாதன் அன்கோ**
**ஊழியர்கள்.**

Harikanan, Jaffna.



http://ninaivumalar.online/

# உள்ளத்தில் உறுதியும் செயலில் நேர்மையும் தோழர் ஜெயரத்தினத்தின் வாழ்வாகும்

**தோழர் சி.கா.செந்திவேல்**

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் தோழமைக்கும் உரியவரான அ.ஜெயரத்தினம் கடந்த 07.12.2020 அன்று கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் தனது 78வது வயதில் இயற்கை எய்தினார். அவரது மறைவிற்கு எங்கள் அனைவரினதும் செவ் அஞ்சலிகள்.

தோழர் அப்புத்துரை ஜெயரத்தினம் சிறந்த கல்வியாளர். நேர்மையான உயர் அரச நிர்வாகியாகச் செயலாற்றியவர். மனித நேயமிக்க சமூக அக்கறையாளராக விளங்கியவர். வெளிப்படைத்தன்மையும் மக்கள் சார்பு நிலைப்பாடும் கொண்டவர். குடும்ப வாழ்வில் தாய் தந்தையரை மதித்துப் பேணுபவராகவும், மூன்று பிள்ளைகளுக்கு நல்லதோர் தந்தையாகவும் வாழ்ந்தவர். தனது கொள்கை வழி நின்ற தோழர்களை நேசித்து வந்தவர். இவை அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்து கொண்டது அவர் வரித்துக் கொண்ட மாக்சிச உலக நோக்கும் பொதுவுடமைக் கட்சிக் கோட்பாடும் எனக் கூறுவது மிகையல்ல.

அவர் பொருளாதார நெருக்கடியின் வறுமையாலும், சமூக ஏற்றத் தாழ்வின் கொடூரத்தாலும் உழைக்கும் குடும்பத்திலிருந்து வந்தவர். அதன் காரணமாகவே அவர் மாக்கிச லெனினிச வாதியாகியாகிக் கொண்டதுடன் அன்றைய நா.சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கம்யூனிசக் கட்சியுடன் தன்னை இணைத்தும் கொண்டார். தனது இறுதிக் காலம்வரை அத் தடத்திலிருந்து விலகிக்கொள்ளவில்லை என்பது அவருக்குரிய சிறப்பாகும்.

எனக்கு தோழர் ஜெயரத்தினத்துடனான தொடர்பு 1963-64 கால கட்டத்தில் ஏற்பட்டதாகும். அப்பொழுது அவர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தார். அவரோடு கொழும்புத்துறை செ.யோகநாதன், நீராவியடி செல்வபத்மநாதன் போன்ற பல்கலைக்கழக மாணவர்களும் பொதுவுடமை இயக்க மாணவர் - வாலிபர் அணிகளில் முன்னின்றனர். யாழ் நகரில் இடம் பெற்ற மாணவர் மாநாட்டிலும், பின் வாலிபர் மாநாட்டிலுமே ஜெயரத்தினத்தின் தொடர்பு ஏற்பட்டது.



http://ninaivumalar.online/

தோழர் ஜெயரத்தினத்தின் ஆசிரியராக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பித்த ஆசிரியர் ஜனகன் ஆவர். அவர் ஒரு சிறந்த பொது வுடமைவாதியாவார். அவரது இல்லம் கச்சேரி நல்லூர் வீதியிலேயே இருந்தது. அதன் காரணமாக ஜெயரத்தினம் தனது 16வது, 17வது வயதில் மாக்சிசத்தை கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்.

அரியாலையில் ஒரு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதில் அ.ஜெயரத்தினம், ச.சண்முகநாதன், ஐ.சண்முகலிங்கம், வே.அரியரட்ணம், எஸ்.சுப்பிரமணியம், சி.லிங்கேஸ்வரன் மற்றும் சிலர் அங்கம் பெற்றனர். தான் பின் பற்ற வந்த கொள்கையடிப்படையினைத் தனது சகோதரர்களுக்கும் விளங்கச் செய்து அவர்களும் அதனைப் பின் பற்றி வந்தனர்.

ஜெயரத்தினம் பொதுவுடமைக் கொள்கையிலும் கட்சியின் செயற்பாட் டிலும் அக்கறையுடையவராக இருந்து வந்த அதேவேளை அவர் வகித்த வந்த அரசாங்க நிர்வாகப் பதவி காரணமாக குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படையான அரசியல் நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்து வந்தார். ஆனால் அப் பதவி பெறுவதற்கு முன்பு அரசியல் நிகழ்வுகளிலும் போராட்டங்களிலும் பங்கு கொண்டிருந்தமை இவ்வேளை நினைவு கூரத்தக்கதாகும். 1969ம் ஆண்டில் மே தினத்தை அன்றைய ஆட்சியினர் தடைசெய்த போது அதனை மீறிய பெரும் ஊர்வலம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் நடாத்தப்பட்டது. அச்சட்ட விரோத ஊர்வலத்தில் தனது தம்பி பாலச்சந்திரனுடன் கலந்து கொண்டு தனது உணர்வையும் ஓர்மத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அடுத்து 1968இல் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் கலந்து கொண்ட அனுபவத்தை அண்மையில் ஒரு கூட்டத்திலும் எடுத்துக் கூறியிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றி வந்தார். அவர் குறிப்பிட்ட காலம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளி யல் விரிவுரையாளராக இருந்தவர். அவ்வேளை இருபாலை கிழக்கில் அமைந் துள்ள பாரதி கலாமன்றம் நடாத்திய "பாரதி விழாவும் அக்டோபர் புரட்சி தினமும்" நிகழ்வில் மாதகல் வ.கந்தசாமி, க.தணிகாசலம், எஸ்.இளங்கீரன், கே.டானியல், கா.செந்திவேல் ஆகியோருடன் ஜெயரத்தினமும் உரையாற் றினார். அவரது தலைப்பாக "வேலையில்லாப் பிரச்சினையும் தீர்க்கும் வழி வகையும்" எனக் கொடுக்கப்பட்டிருந்தது. மிக நேர்த்தியான ஒரு உரையினை ஆற்றியிருந்தமை இன்றும் நினைவில் நிலைத்து நிற்கிறது.



http://ninaivumalar.online/

மேலும் ஜெயரத்தினம் 1982இல் தேசிய கலை இலக்கிய பேரவை பாரதி நூற்றாண்டை முன்னிட்டு நடாத்திய மாதமொரு கருத்தரங்கத் தொடரில் "பொருளியல் சிந்தனைகளும் பாரதியும்" என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். அவர் இக்கட்டுரையை சமர்பிக்கும்படி பேராசி ரியர் க. கைலாசபதியே கேட்டுக்கொண்டார். ஏனெனில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கைலாசபதியின் கவனத்திற்குரிய மாணவனாக ஜெயரத்தினம் விளங்கினார் என்பது குறிப்பிடவேண்டியதாகும்.

ஜெயரத்தினம் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி மக்களுக்கான ஆகக் கூடிய சேவையை வழங்கிக் கொண்டவர். அதேவேளை அப் பதவியின்போது அமைச்சர்களின் கெடுபிடிகள், வற்புறுத்தல்கள், குறுக்கு வழிகளுக்கு துணை நிற்க மறுத்துக் கொண்டவர். அதனால் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதிலும் தனது உறுதியையும் நேர்மையையும் இழக்காதவர்.

தோழர் ஜெயரத்தினத்தின் நிர்வாக ஆளுமைத்திறன், நேர்மை, மக்களுக்கு சேவை செய்யும் பண்புடமை போன்றவற்றால் ஒரு அரசாங்க அதிபராக வந்திருக்க வேண்டியவர். ஒரு முறை கொழும்பு அமைச்சர்கள் மட்டத்தில் அவருக்கு அரசாங்க அதிபர் பதவியை வழங்கி யாழ் மாவட்டத்திற்கு நியமிப்பது பற்றி ஆராயப்பட்டது. ஆனால் பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக அவை நிறைவேறாது போயின.

இவற்றையெல்லாம் அவ்வப்போதும், அண்மைய காலத்திலும் தோழர் ஜெயரத்தினம் எம்முடன் கலந்துரையாடி வந்தார். கடந்த சில ஆண்டுகளில் எமது பணிமனை கொக்குவில் சந்தியில் அமைந்திருந்தமையால் அடிக்கடி நடை பெற்று வந்த அரசியல் இலக்கிய கூட்டங்களுக்குச் சமூகமளித்து பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்தும் வந்தார். சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடாத்தி வரும் கூட்டங்களிலும் சமூக நிதிக்கான வெகுஜன அமைப்பு நடாத்திய கூட்டங்க ளிலும் பங்குபற்றி தனது அனுபவங்களையும் புதிய நிலைமைகளையும் கலந் துரையாடி வந்தவர் தோழர் ஜெயரத்தினம். அவரது நினைவுகள் எங்களுடன் வாழ்வது மட்டுமன்றி வாழ்வினுடைய பக்குவங்கள் புதிய தலைமுறையி னருக்கு பயன்தரும் பாடங்களாகவும் அமையக் கூடியவையாகும்.



http://ninaivumalar.online/

# To our loving Kunchiah family!

**Ravi, Geetha, Raviena, Rathesh and Rasa Aunty**
**(Australia)**

I would like to share my cherishing memories of late Jeyaratnam Aiah. I called him Jeyaratnam Kunchiah from my young age. I knew him very well as he was in respected position as AGA in North area (in my memories) when I was schooling. I could remember that he signed my passport application form at his residence at Kokuvil when I was 19 years old and l was planning to go to lndia for pursuing higher studies. He gave me good and valuable advice too, encourag ing me to study further and particularly he told me not think about going Middle Eastern Countries and later no career prospects here in Sri Lanka. His few words were really good motivation for me to study further in that difficult and probl em situations in North back in 1984. Not only that, he was a honest and loving person, he and Aunty helped my mother to arrange and borrow certain amount of money for my graduate studies in India. He exhibited really a good and kind hearted attitude towards our family. I am very grateful to him.

He and his family also helped me for my wedding in Trincomalee in 1993, accommodated in his big and beautiful secretary quarters when he was holding Secretary position in North and East Provincial Government. Truly speaking, he was the one played the role as my father-in- law during our wedding at Methodist Church Trincomalee. Words are not enough to express my gratitude to him for his generous and helping mindset towards others, surprisingly God reminded me recently to thank him once again and I was in contact with him via whats app in Sept 2020 after nearly 18 years later, he acknowledged and responded to me saying "Thanks for remembering me after long time" It appears that I sent that message on his 50th anniversary Day later without knowing and that was on 11th Sep 2020 and it was not a coincidence but it was truly God's plan that I should remember him before he leave this world and reached the other side permanetly. May his soul rest in peace. May God bless abundantly loving Aunty, Children, grandchildren and other family members. Life never ends and Love never fails.



http://ninaivumalar.online/

# நெருப்பாறுகளை நீந்திக் கடந்த நண்பன்

வாழ்நாள் பேராசிரியர் சி.மௌனகுரு

நண்பரும் தோழருமான ஜெயரத்தினத்தின் திடீர் மறைவு மிகுந்த பேரதிர்ச்சி தரும் ஓர் செய்தியாகும் அவரை நான் முதன் முதலாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961 ஆண்டு சந்திக்கிறேன். சிறந்தவோர் பேச்சாளனாக அவர் எனக்கு அறிமுகமாகின்றார்.

அது ஓர் விவாத அரங்கு இருவரும் எதிர் எதிர் அணியிலிருந்து வாதிக்கிறோம் "இன்றைய நாகரிகம் தமிழ்ப் பெண்களை சீரழிக்கிறது - சீரழிக் கவில்லை " என்ற தலைப்பில் வாதிட்டமை ஞாபகம் வருகிறது. அவரது வாதிடும் திறன் அபாரமாக இருந்தது.

எதிராளிகளின் வாதங்களை அவர் எதிர் கொண்ட விதமும் அவற்றை மறுத்து வாதாடி தன் வாதங்களை வைத்த விதமும் அனைவரையும் கவர்ந்தது, ஓர் தேர்ந்த வழக்கறிஞர் போல அவர் வாதாடினார்,

அகத்தியர் போல கட்டையான குறுமுனித் தோற்றம், துரு துருப்பான கூரிய விழிகள், சொற்களை ஏற்றி இறக்கி அவர் பேசிய விதம், அறுத்து உறுத்தி வந்த அவரது தொனி இன்னும் ஞாபகம் இருக்கிறது.

அவரது பேச்சுவன்மை அதற்கு உதவியது. தன் வாதத் திறனால் அன்று அவர் எம் மனம் கவர்ந்தார்.

விவாத அரங்கு முடிய நானே சென்று அவருடன் அறிமுகமானேன். அவர் வாதத்திறமையைப் பாராட்டினேன். அவர் என்னைப் பாராட்டினார். அன்று தொட்டு நாம் இருவரும் நண்பரானோம். நெருக்கமான நண்பரானோம் அந்த ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே நாம் இருவரும் எதிரெதிர் அணிகளில் இருந்தோம் பின்னால் அவரும் நானும் கொள்கைகளாலும் செயற்பாடுகளாலும் ஓரணியினரானோம். ஒன்றாகச் செயற்பட்டோம், இந்த எமது எம் அணியில் அன்று பலர் இருந்தனர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நானும் அவரும் 1961-1965 வரை ஒன்றாகக் கல்வி பயின்ற நாட்கள் ஞாபகம் வருகின்றன. முதல் வருடம் (GAQ) ஒன்றாகப் பயின்றோம். தமிழில் அவர் மிகத் திறமை சாலியாக இருந்தார் நிறைய வாசிப்பார், நன்றாகக் கட்டுரை எழுதுவார், அவரது எழுத்து அலம்பல் சிலம்பல் இல்லாது இருக்கும். அவரது கட்டுரைகள் அப்போது இலங்கையின் கலை இலக்கிய உலகில் கலை



http://ninaivumalar.online/

இலக்கியம் பற்றி பெரும் விவாதங்களாக எழுந்து கொண்டிருந்தன, கலை கலைக்காக கலை மக்களுக்காக என இரு அணிப்பட்டு நின்றது அந்த விவாதம். அவர் அன்று கலை மக்களுக்காக என்று எழுதிய கட்டுரை முக்கியமானது.

அதற்கு முன்னர் தமிழ்ச்சங்கம் நடத்திய விவாதப்போட்டியில் அவர் பங்குகொண்டு இதே தலைப்பில் பேசி வெற்றியும் ஈட்டியிருந்தார்.

அன்று முதலாம் ஆண்டில் எமக்கு தமிழ் இலக்கியம் கற்பித்த பேராசிரியர்களான வித்தியானந்தன், கைலாசபதி ஆகியவர்களின் விருப்பிற்குரிய மாணவருமானார்.

முதலாம் ஆண்டு முடிய இரண்டாம் வருடத்திலிருந்து ஏதாவது ஓர் பாடத்தில் மூன்று வருடம் சிறப்பு நெறி செய்யலாம். அவர் பொருளியல் சிறப்புச் செய்ய சென்றார். அங்குதான் அவர் மிகச்சிறந்த பொருளியல் ஆசிரியர்களின் விருப்பிற்குரிய மாணவரும் ஆனார். அவருடன் அவரது நெருக்கமான நண்பரான தில்லைநாதன் என்போரும் சென்றுவிட நான் தமிழ் செய்யச் சென்றேன்.

எனினும் உறவுகள் தொடர்ந்தன. அவருக்கு நெருக்கமான பல நண்பர்கள் இருந்தனர். தனது பேச்சுத்திறனாலும், கட்டுரை எழுத்து வன்மையாலும் ஆழ்ந்த அறிவாலும் நற்குணத்தாலும் சகமாணவர் மனங் களையும் கற்பித்த ஆசிரியர் மனங்களையும் கவர்ந்தார். அவர்களின் பெரு மதிப்பிற்குரியவரானார்.

அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளம் சோசலிச கழகம் ஒன்று இருந்தது. தமிழ் சிங்கள இஸ்லாமிய மாணவர்கள் சந்திக்கும் கழகம் அது. அங்கு கிழமைக்கு இரு தடவை அல்லது மூன்று தடவைகள் சோசலிச வகுப்புகளை அக்கழகம் நடத்தியது. பேராசிரியர் கைலாசபதியும், பேராசிரியர் ப. சந்திரசேகரமும் எம்மை அங்கு செல்லுமாறு வழிகாட்டினர். அங்குதான் எமக்கு புதிய சிந்தனைகளும் சிங்கள மாணவ மாணவியரின் தொடர்புகளும் கிடைத்தன.

சமூக வரலாறு, சமூக அடிக்கட்டுமானம், சமூக மேற்கட்டுமானம் சமூக இயங்கியல், பொருள் முதல்வாதம் என்பன எமக்கு அறிமுகமாகின.

இலங்கை வரலாறு, இலங்கை அரசியல் என்பன இன்னொரு விதத்தில் அங்கு எமக்கு அறிமுகமாகின. அக்காலம் இலங்கையில் இடதுசாரி சிந்தனைகள் வேகமாக பரவிய காலம், ஜெயரத்தினம் ஏற்கனவே யாழ்ப்



http://ninaivumalar.online/

பாணத்தில் அக்கொள்கைகளால் கவரப்பட்டிருந்ததோடு அங்கு பல இடது சாரிகளையும் அறிந்திருந்தார். அந்த அவனுபவங்களை அவர் எம்முடன் பகிர்ந்து கொள்வார்.

நாம் கற்றவற்றை கூடியிருந்து விவாதிப்போம் பகிர்ந்து கொள்வோம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பீடஅரங்கின் முன்னால் கலஹா வீதியைக் கடந்து மேலே இருந்த அந்த மாணவர் கன்ரீன், நண்பர்கள் சந்தித்து அளவளாவும் இடமானது. விரிவுரைகள் முடிய அல்லது விரிவுரை களுக்கு இடையே கிடைக்கும் இடைப்பொழுதில் நாம் அங்குதான் சந்திப் போம். ஒரு பிளேன் டீ யுடன் ஆரம்பமாகும் உரையாடல் நீளும் அந்த இடத் திற்கு அருகாமையில்தான் பொருளியல் விரிவுரை மண்டபம். அங்குதான் பொருளியல் மாணவர்க்கான விரிவுரைகள் பெரும்பாலும் அங்கிருந்துதான் ஜெயரத்தினம் வருவார்.

சற்றுக் கீழிறங்கினால் கலைப்பீட மண்டபம் அதற்குப் பின்னால் தமிழ் சிறப்பு விரிவுரை அறைகள் அங்கிருந்தும் இங்கிருந்தும் வந்து அனைவரும் கூடும் பொது இடம் அந்த கன்ரீன். எவ்வளவு விடயங்கள் உரையாடியிருப்போம்? அரசியல், பொருளியல், இலக்கியம், சர்வதேச நிலைமைகள், மாக்ஸிசம், மெய்யியல், நாடகம், கலைகள், வரலாறு, மதங்கள் எல்லாவற்றையும் பற்றி உரையாடல்கள் நிகழும்.

அது வேறோர் உலகம். அனைவரும் புதிது புதிதாக வாசிப்பவர்கள். வாசித்தவற்றைப் பகிர்ந்து கொள்வதில் ஆர்வம். எம்மிடையே போட்டி, எல் லோரும் இளம் வயதினர். புதிய புதிய விடயங்களுக்கு அறிமுகமான காலம். புதிய கருத்தியல்களின் பாதிப்பிற்குள்ளான காலம்.

அன்று பல்கலைக்கழக காலம் உலகை அறியும் காலமாக இருந்தது.

“பரிதிகள் மேலும்- அந்தப்
பால் நிலா மீதும்
உறுதிகள் கோடி செய்து
உன்மத்தராயிருந்தோம்”

என்று அன்று கலைவாணன் எனும் கவிஞன் பாடியது இப்போது ஞாபகம் வருகிறது.

அங்கு உட்கார்ந்து உரையாடிய மாணவர்கள் இப்போது வயது 75ஐத் தாண்டியிருப்பார்கள். அக்காலத்தில்தான் பேராசிரியர் வித்தியானந்தன் கூத்துரு நாடகங்கள் தயாரித்துகொண்டிருந்தார். அவர் தயாரித்த கர்ணன்



http://ninaivumalar.online/

போர் (1962), நொண்டி நாடகம் (1963), இராவணேசன் (1964) அகியவற்றில் பிரதான பாத்திரங்கள் எனக்குக் கிடைத்தன. ஜெயரத்தினம் எனது ரசிகரா னார். ஒவ்வொரு நாடகம் முடிந்ததும் மறுநாள் சந்திக்கையில் நாடகம் பற்றிய எனது நடிப்பு பற்றிய பாராட்டுகள், விமர்சனங்கள் அவரிடமிருந்து கிடைக்கும். அவ்வளவும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள்.

இந்த இளம் சோசலிச சங்க மாணவர்கள் அயலிலிருந்து மலையில் வசித்த வறிய மலையக மக்களின் குடியிருப்புகளுக்குச்சென்று கல்விப் பணிகளிலும் ஈடுபட்டனர். பல்கலைக்கழகம் என்றால் தந்தக் கோபுரம் எனக் கருதப்பட்ட அக்காலத்தில் நடந்த இந்நிகழ்வுகள் மிக முக்கியமானவையாக எனக்கு இன்று தெரிகிறது.

எப்போதும் ஜெயரத்தினத்தின் பார்வை சாதாரண மக்கள் நோக்கி-யே இருந்தது. மக்களின் சுபீட்சம் நோக்கியே இருந்தது. அவர் பல்கலைக் கழக விரிவுரையாளராக ஆகியிருப்பின் பெரியதோர் பொருளியல் அறிஞரை இலங்கை கண்டிருக்கும். ஆனால் அவர் திசை மாறியது. நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் அதிகாரியுமானார். 1970களில் மட்டக்களப்பில் தேர்தல் அதிகாரியாகக் கடமை புரிந்தார்.

அப்போது அவர் தன் நேர்மையான நிர்வாகத்தால் அனை வரதும் மதிப்பிற்குமுரியவரானார். அவர் கிழக்கு மாகாணத்தில் பணி புரிந்து கொண்டிருக்கும் போது ஓர் பாரிய விபத்திற்குளாகி இரண்டு கால்களும் முறிந்துபோயின அவருக்கு இளம் வயதில் வந்த ஓர் பேரிடர் அது. அவர் அசைய முடியாத நிலையில், மட்டக்களப்பு ஆசுப்பத்திரியில் அனுமதிக் கப்பட்டிருந்தார்.

அச்சமயம் அவரைக் காண சாரிசாரியாக வந்த தமிழ் இஸ்லாமிய மக்கள் ஞாபகம் வருகிறார்கள், தமது உறவினர் ஒருவருக்கு இக்கதி ஏற்பட்டது போல அவர்கள் கண் கலங்க அவருடன் உரையாடியமை அவர் மீது மக்கள் வைத்த அன்பினை எடுத்துக்காட்டியது. அந்த அளவு தன் சேவையினால் மட்டக்களப்பு மக்களின் மனங்களையும் அவர் கவர்ந்திருந்தார். அதிலி ருந்து மீளுவாரோ எழுந்து நடப்பாரோ என நாம் ஐயுற்றோம். அவர் வாழ்வு முடிந்து விட்டதோ எனக் கவலையுற்றோம். ஆனால் எத்தனையோ தடை களைத் தாண்டி வந்த ஜெயரத்தினம் அதனையும் தாண்டி மீண்டார்.

ஜெயரட்ணம் நிறைய வாசிக்கும் திறன் மிக்கவர். எப்போதும் நூல்களை, அதிலும் முற்போக்கான நூல்களைத் தேடித் திரியும் ஓர் தேனீ அவர். தான்



http://ninaivumalar.online/

வாசிப்பதனை சுவைபட நண்பருக்கு எடுத்துக்கூறும் ஓர் எடுத்துரைப்பு முறையும் அவரிடம் இருந்தது. எமது நண்பர் வட்டத்தில் மிகுந்த மதிப்பிற்குரிவராக அவர் அன்று விளங்கினார். நிதானம், எதனையும் விஞ்ஞான பூர்வமாக அணுகுதல், கற்பனாவாதம் இன்மை என்பன அவரின் குணாதிசயங்கள். இக்குணங்களை அவர் தனது வாழ்வனுபவங்கள் மூலம் கற்றுகொண்டார். அவர் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எப்போதும் துயரப்பட்ட மக்களின் பால் நின்றன. அடக்கப்பட்ட மனிதர்களின் வலியினை அவர் மிக நன்றாகவே அறிந்திருந்தார்.

அவர் நீந்தி வந்த நெருப்பாறுகள் அதிகம். அவர் சந்தித்த சவால்கள் அவற்றிலும் அதிகம். தடைகள் தாண்டி வந்த சாதனையாளன் அவர். தனது இளம் வயதுக்காலத்தை தாம் கல்வி பெற்ற அனுபவங்களை அவர் கூறக் கேட்பது எமக்கு பெரு வியப்பைத் தரும்.

நெருப்பாற்றில் நீந்தி வந்த அந்த எதிர் நீச்சல் அனுபவங்களை மிக நெருக்கமானவருடன் மாத்திரமே அவர் பகிர்ந்துகொள்வார். மிகஉணர்ச்சிகரமாகப் பகிர்ந்து கொள்வார். என்னிடமும் எத்தனையோ விடயங்களை அவர் பகிர்ந்துள்ளார். அவர் பாடசாலைக் காலத்தில் மாத்திரமன்றி பல்கலைக் கழகக் காலத்திலும், உத்தியோக காலத்திலும் அந்தச் சவால்களைச் சந்தித்து வெற்றி கண்டே வந்துள்ளார். எதனையும் அமைதியான புன்னகையுடன் கடந்து செல்வது அவர் இயல்பு. ஆனால் அந்தப் புன்னகைக்குள் இருக்கும் எரிமலையை அவரை அறிந்தோர் மாத்திரமே அறிவர். கொதி நிலையோடும் இன் முகத் தோடும் ஒருவர் இருக்க முடியுமா? இருக்கலாம் என்பதற்கு உதாரணம் ஜெயரத்தினம்.

தனது பிள்ளைகள் மீதும் பேரப்பிள்ளைகள் மீதும், மனைவி மீதும், மருமக்கள் மீதும் பேரன்பு கொண்டவர். அவர் உறவுகளை மதித்து வாழ்ந்தவர் கடைசியாக சென்ற வருடம் அவரை அவர் இல்லத்தில் சந்தித்து பழைய ஞாபகங்களை மீட்டு வந்தமை நேற்றுப்போல இருக்கிறது.

அப்போது அவர் நோயுற்றிருந்தார் அச்சமயமும், புதிய நூல்கள் பற்றியே பேசினோம். அப்போதும் அவர் வாசித்தபடியே இருந்தார். அவரது வரலாறும் வளர்ச்சியும் பேசப்பட வேண்டியவை. எழுதப்பட வேண்டியவை. அவர் வரலாற்றிலிருந்து இன்றைய தலைமுறை படிக்க வேண்டியவை மிக மிக அதிகம்.



http://ninaivumalar.online/

கனக்கும் மனதோடு விடை தருகிறேன்
நண்பனே
இனிய நினைவுகளை விட்டுச் செல்கின்றாய்
சென்று வா
அன்று நம்பிக்கையோடு செயலாற்றிய பலர் இன்று இல்லை.
அனைவரும் போய் விட்டனர்.
**வாழ் நாள் சிலவே ஆயினும் என்ன**
**சாதல் எய்துமுன் மேதகு செய்வோம்**
என்று இறுதிவரை ஏதோ செய்துகொண்டிருக்கின்றனர் சிலர்.

"நண்பனும் தோழனுமான ஜெயரத்தினத்தனத்தோடு அந்த வளாக வாழ்க்கையில் உரையாடிய, விவாதித்த, செயல் திட்டம் தீட்டிய, செயற்பட்ட நாட்கள் என்னை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றன.
எஞ்சுவன என்ன?
நினைவுகள் மாத்திரம்தானே".



http://ninaivumalar.online/

# துன்பக் கடலில் மூழ்கினேன் அப்பா

தமயந்தி நக்கீரன்
மகள்

மார்கழித் திங்கள் 7ஆம் நாள் அப்பா உங்கள் மறைவுச் செய்தி பேரிடி யாய் வந்து விழுந்தது. உலகமே இருண்டது போன்ற உணர்வு, இதயம் வெறுமை ஆகியது. அதிர்ச்சியில் உறைந்து போனேன். அப்பா நீங்கள் இப் பூவுலகை விட்டு மறைந்தீர்கள் என்பதை நம்ப முடியவில்லை. உங்கள் பிரி வின் துயரத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலவில்லை.

இவ்வருடம் உங்களையும் அம்மாவையும் வந்து பார்ப்பதற்கு இருந் தேன். தற்போதைய சூழல் அதற்கு இடம் தரவில்லை. அப்பா உங்கள் இறுதி யாத்திரையில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கூட கிடைக்கவில்லை, இதயம் கனக்கிறது அப்பா.

2018 ஆம் வருடம் இலங்கை வந்து திரும்பும்போது என் கைக ளைப் பிடித்து முத்தமிட்டு 'போய்விட்டு வா' என்று வழி அனுப்பி வைத்தீர்கள். இதுதான் எங்கள் கடைசி சந்திப்பாக இருக்கும் என்று நான் கனவிலும் நினைத் ததில்லை. உங்கள் பிரிவு என்னை வாட்டுகிறது அப்பா.

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி என்றாலும் உங்கள் இழப்பை ஏற்க என் நெஞ்சம் மறுக்கிறது அப்பா. இந்த துன்பக்கடலில் இருந்து உங்கள் நினைவலைகளின் உதவியினால் மீண்டெழுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

என் அப்பா ஒரு நல்ல மனிதர் என்று எல்லோரும் கூற கேட்கிறேன் மிகவும் பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது.

'தமணி', 'தமணி' என்று என்னை செல்லமாக அழைப்பீர்களே அப்பா. அது இன்னும் என் செவியில் இருக்கிறது, அது எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.



http://ninaivumalar.online/

# அன்பு அண்ணனுக்கு ஆசை தங்கையின் கண்ணீர்ப் பூக்கள்

திருமதி.சொர்ணகாந்தரூபி லோகநாதன் (சகோதரி)
யாழ்ப்பாணம்

அண்ணா என்ற சொல்லுக்கு அர்த்தத்தைத் தந்து அழகாக்கிய எம் கரு வறை சொந்தம் அண்ணா நீங்கள். எங்கள் குடும்ப விருட்சம் ஒரு நொடியில் சாய்ந்ததடா. 07.12.2020 அன்று உம் மரணச் செய்தி கேட்டுத் துடித்துப் போனேன்.

அம்மா பூமணிக்கும், அப்பா அப்புத்துரைக்கும் 16.02.1942ம் ஆண்டு பூமியிலே வந்துதித்த மூத்தமகன் அண்ணா நீங்கள், ஆலமர நிழல் போல உங்கள் சகோதரர்கள் ஆறு பேரையும் பாதுகாத்து வளர்த்து அணைத்து வந்தீர். அண்ணா நான் ஐந்தாவது பெண் பிள்ளையாகப் பிறந்ததில் என்னி டம் பாசமும் கூடக் காட்டினீர்.

தங்கச்சி என்று அன்பாகக் கூப்பிடுவீர். எனக்கு சொர்ணகாந்தரூபி என்ற நீண்ட பெயரை ஏன் வைத்தீர்கள் என்று நான் அண்ணாவுடன் சிறுவய தில் சண்டை போடுவேன். அந்தப் பெயரின் அர்த்தத்தை எனக்குப் புரிய வைத்து என்னைச் சமாதானப்படுத்துவீர்கள்.

நீங்கள் ஆரம்பக் கல்வியிலும் மிகவும் கெட்டித்தனமாக இருந்தீர்கள் என அடிக்கடி அம்மா கூறுவார். பின் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் மிகவும் கெட்டித்தனமாக விடுதியில் தங்கியிருந்து படித்து வரும் காலத்தில் உமது நண்பர்களுடன் வீட்டிற்கு வந்தால் என்னை மிகவும் விருப்பத்துடன் உமது நண்பர்கள் உட்பட தூக்கித் திரிவீர்களென அம்மா அடிக்கடி கூறுவது இப்பவும் என் ஞாபகத்தில் இருக்கின்றது. நீர் பட்டம் படித்த பல்கலைக்கழகம் கண்டிப் பேராதனைக்கு என்னைக் கூட்டிச் சென்று காட்டினீர்கள்.

அண்ணா! எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம் நீங்கள் சொல்லுவீர்கள் முதன் முறையாக நான் பல்கலைக்கழகம் தனியாகத்தான் ரயிலில் சென்றேன். நான் ஒரு ரங்குப் பெட்டியுடன் தான் ஒரு சின்னப் பையனாகச் சென்றேன். அங்கு மாணவர்கள் எல்லோரும் தமது பெற்றோருடன் கார்களில் தான் வந்து இருந்தார்கள் என்பதைக் கூறுவீர்கள்.

பாசத்துக்கு ஓர் அண்ணா, பண்புக்கு ஓர் அண்ணா, கண்டிப்புக்கு ஓர் அண்ணா, கடமைக்கு ஓர் அண்ணா என நாம் ஆறுபேரும் வாழ்ந்து வந்தோம்.



http://ninaivumalar.online/

எனது இரண்டாவது அண்ணா டாக்டருக்குப் படிக்க பொரளை மருத்துவக் கல்லூரிப் பல்கலைக்கழகம் சென்றபோது கூட நீங்கள் தான் அண்ணா அவர் படிப்பதற்கும் பண உதவி செய்தீர்கள்.

அண்ணா! உங்கள் ஆறு சகோதரர்களையும் உயர்த்தி வைத்தீர்கள் அண்ணா. அதுமட்டுமல்ல எனக்குப் புது கல்வீடு கட்டி சீதனமும் தந்து உங்களைப்போலொரு பட்டதாரி மாப்பிள்ளையையும் பேசி திருமணம் செய்து வைத்தீர்கள். அதுமட்டுமல்ல எனது தங்கைக்கும் ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். எனது பிள்ளைகளை (மருமகன், மருமகள்) பார்த்து சந்தோசம் அடைந்தீர்கள். அண்ணா நீங்கள் கொழும்பில் இருந்தபோது கூட எனது அம்மா, அப்பாவின் ஈமைக்கிரியைகளிலும் வந்து கலந்து கடமைகளைச் செய்தீர்.

நீங்கள் எப்போதும் உங்களை உயர்த்திக் கொள்வதில்லை. எல்லோரி டமும் சிரித்த முகத்துடன் பேசுவீர்கள் அண்ணா. புன்னகை தவழும் முகத்தை மறக்க முடியவில்லை அண்ணா.

உடன்பிறப்புக்களை உயர்த்தி உச்சம் வைத்துப் பார்த்ததில் உமக்கு திருப்தியென அடிக்கடி கூறுவீர்கள். அண்ணா உன் குடும்பம், பிள்ளைகளென நன்னிலைப்படுத்தி அவர்களின் நல்வாழ்விற்காக உயிருள்ளவரை உழைத்த உங்களின் வாழ்வியல் வரும் சந்ததியினருக்கு படிப்பினையாக பாடம் புகட்டும். அண்ணா! பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் லண்டன் மாநகரில் இருந்தாலும் அன்பாலும் பாசத்தாலும் இணைந்துள்ளனர். நீங்கள் செய்த தவம் தான் அண்ணா.

இன்னுமொரு நினைவு என்னுள் பெருமை சேர்க்கின்றது. இலங்கை யின் நிர்வாகசேவையில் (S.L.A.S) இணைந்து அமைச்சுச் செயலராகப் பணியாற்றியபோது தமிழரின் முதல்நிலை பணியாளராக தேர்வு எய்தியதும் இன்னும் என்னுள் பெருமிதம் கொள்கின்றது. மீண்டும் உன் முகத்தை எப்போது பார்ப்பேன் என ஆவலாய் இருக்கின்றது. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



http://ninaivumalar.online/

# என் பெரியப்பா....

**உங்கள் மகன்**
**நல்லையா வில்லியம் சாந்தகுமார்**

கல்வியால் உயர்ந்த பெருமகனார்
கச்சிதமாகவே உன்னத உயர்பதவியாம்
புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளராய்
பூரிப்புடன் புனிதமாய் பணிபுரிந்து
GIZ இல் ஆளுமைமிகு ஆலோசகராக
ஆற்றலுடன் திகழ்ந்த தீரன்
ஆருயிர்க் கணவனாக அருமைத் தந்தையாக
அன்பான உறவாக அகிலத்தில் மிளிர்ந்த மேலோன்!
முப்பெரும் தேவிகளாய் மக்கள் பேற்றை
மகத்தாகக் கண்ட பெருமகனார்!
தனயன் இல்லாக்குறையை தணியவைத்த மகனாக
எனை அணைத்துக்கொண்ட அன்பான பெரியப்பா
பண்பாடு தோய்ந்த நெஞ்சமே!
புண்பாடில்லாத புண்ணியவாளனே!
அன்பான பேச்சும், அறிவான கதைகளும்
உங்களைப்போல் ஒருவரைத் தேடியும் காணோம்
கூப்பிட்ட குரலுக்கு குதித்தோடிச்சென்று
நிறைவான மனிதனை குறையில்லாது ஆற்றி நின்றேன்
ஆலமரமாக அழகு நிழல் பரப்பி நின்ற
சோலைவனம் இன்று சோபை இழந்ததுவோ?
நிலையில்லா உலகை விட்டு
நிறைவான இடம்நாடிச் சென்றீரோ?
நின் ஆன்மா நித்திய சுகம் பெற
இறையடி பணிந்து வேண்டி நிற்கின்றேன்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



http://ninaivumalar.online/

# மறக்க முடியாத பெருமகனார் ஜெயரட்ணம்

தோழர். தர்மகுலசிங்கம்
டென்மார்க்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"
என்ற குறளின் கூற்றுக்கிணங்க வாழ்ந்த மாமனிதர் தான் தோழர் அறிஞர் பெருமகனார் ஜெயரட்ணம் . தொண்ணூறுகளில் ஒரு நாள் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் அமரர் மரியாதைக்குரிய தோழர் தங்கவடிவேல் மாஸ்டர் (இவரை நான் அப்பா என கனிவாக அழைப்பது வழமை) எனக்கு ஒருவரை அறிமுகப்படுத்துகிறார். இவர் ஜெயரட்ணம் என தோழர் செந்தில் மூலம் பெயரளவில் அறியப்பட்ட ஜெயரட்ணம் என் முதல் அறிமுகத்திலே என்னைக் கவர்ந்து விடுகிறார்.

எளிமையும், புன்னகையும், கருணையும் நிறைந்த முகம். ஒரு அறிவார்ந்த பார்வை, தொடரும் உரையாடல் என்னையும் அவருக்கு பிடித்துப் போகிறது. தொடர்ந்து பல சந்தர்ப்பங்கள், ஜெயரட்ணம் அவர்கள் புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, அகதிகள் விவகார அமைச்சகத்தின் செயலாளராக இருந்த போது 2003இல் டென்மார்க்கிலிருந்து நோர்வே ஐரோப்பியா ஊடாக சமா தான யாத்திரை சென்ற தருணம் அமைச்சரையும் அமரர் ஜெயரட்ணம் அவர்களையும் சந்தித்து அறிக்கை சமர்ப்பணம் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத் தில் தோழர் அமரர் எம்.சி. லோகநாதனும் என்னுடன் வருகை தந்திருந்தார். அமைச்சின் ஊடக இயக்குனர் சி.சதிஸ்குமார் சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். அது ஒரு காலத்தால் அழியாத வரலாற்று நிகழ்வாகும்.

கருத்தரங்குகளில் அவருக்கும் எனக்குமான புரிதல் நீள்கின்றது, என் மொழிபெயர்ப்பு "தாய் " நூலின் அறிமுக விழாவை தலைமை ஏற்று நடத்தி பரவசப் பட்டவர். அவர் என்னைக் கட்டிப் பிடித்து பாராட்டியது இன்னமும் என் நினைவில் பசுமையாக நிலைத்து நிற்கின்றது.

செவ்வணக்கம் சொல்லி அஞ்சலிக்கிறேன்.



http://ninaivumalar.online/

# ஜெயரட்ணம் அவர்கள் ஓர் உன்னத மனிதன்

முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம்
உப தலைவர் – மலையக மக்கள் முன்னணி

அமரர் ஜெயரட்ணம் அவர்கள் இலங்கையின் சிவில் நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியாவார். 1970 ஆம் ஆண்டு வவுனியா அரசாங்க அதிபராக இருந்த பிரட்மன் வீரகோன் அவர்களின் வழிகாட்டலில் DROவாக (இன்றைய பிரதேச செயலாளராக) அரசபணியில் இணைந்துள்ளதோடு மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அதிகாரி, அத்தியாவசிய சேவைகள் அதிகாரி உள்ளிட்ட பல்வேறு பதவிகளிலும் இருந்துள்ளார்.

2001 - 2004 காலப்பகுதியில் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் அகதிகள் விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் செயலாளராக பதவி வகித்தார். நான் அப்போது அந்த அமைச்சில் பணிப்பாளராகவும், வட மாகாண புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள்குடியேற்ற அதிகார சபையின் (RRRN) இயக்குனராகவும் பணியாற்றியதால் அந்த காலத்தில் திரு.ஜெயரட்ணம் அவர்களோடு மிகவும் நெருங்கி பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருந்தது.

சுமார் மூன்று தசாப்த காலமாக எமது நாட்டில் இடம் பெற்ற கொடூர யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான எமது மக்களின் துன்ப துயரங்களுக்கு இயன்றவரை தன்னாலான சேவைகளை துணிகரமாக நிறைவேற்றுவதில் சமூக அக்கறையோடு அர்ப்பணிப்புடன் கடமையாற்றினார்.

பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவருக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் காரணமாக போர் நிறுத்த காலத்தில் வடகிழக்கு மாகாணங்களில் அமைச்சின் அபிவிருத்தி கடமைகளை முன்னெடுக்கும் போது அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன அவர்களுடன் இணைந்து அரசு மற்றும் தமிழ் தரப்பினரிடையே கருத்து மோதல்கள் ஏற்படாதவாறு அரசியல் சமூக அந்தஸ்து மற்றும் பிரதேச பாகுபாடுகள் இல்லாமல் அனைவரோடும் ஒன்றிணைந்து நடுநிலையாக செயற்பட்டதன் காரணமாக அரசு மற்றும் அரசு சார்பற்ற சர்வதேச அமைப்புகளும் ஜெயரட்னம் அவர்களது சாதுரியமான நிர்வாக திறமைகளை வெகுவாகப் பாராட்டினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



http://ninaivumalar.online/

தனிப்பட்ட ரீதியில் மிகவும் எளிமையான அமைதியான சுபாவம் கொண்ட ஜெயரட்ணம் அவர்கள் தமிழ் மொழி பண்பாட்டு விழுமியங்களிலும் அதிக ஆர்வம் நிறைந்தவர் என்றால் மிகையாகாது.

எனது திருமண வைபவத்தில் குடும்பத்தினர் சகிதம் கலந்து கொண்ட தோடு கௌரவ மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பிரமுகர்களுக்கு தமிழ் திருமண சடங்குகள் சம்பிரதாயங்களின் சிறப்புகளையும் ஆங்கிலத்தில் அவர்களுக்கு விளங்கப்படுத்திய பண்புகளையும் ஒருபோதும் மறக்க முடியாது.

சமவுடமை சிந்தனைகளில் அதிக நாட்டம் மிக்க ஜெயரட்ணம் அவர்கள் சிறந்த இலக்கியப் பேச்சாளர் மற்றும் எழுத்தாளரும் ஆவார். தமிழ் , ஆங்கி லம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் நானெழுதிய சில நூல்களையும் ஆர்வத்தோடு வாசித்ததோடு வடகிழக்கு புனர்வாழ்வு அனுபவங்களை தனி யாக எழுதுமாறு ஆலோசனைகளையும் கூறி பாராட்டிய பெருந்தகையுமாவார்.

திரு ஜெயரட்ணம் அவர்களது மறைவு அவரது குடும்பத்தினர் நண்பர்களுக்கு மட்டுமல்லாமல் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பாரிய இழப்பா கும் அந்த வகையில் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆறுதலை தெரிவிப் பதோடு அன்னாரது ஆத்மா இறைவனின் நிழலில் இளைப்பாற வேண்டுகிறேன்.



http://ninaivumalar.online/

# அர்த்தமுள்ள விடுதலைப் பயணத்தில் மறைந்த தோழர் ஜெயரட்ணம்

க.தணிகாசலம்
தலைவர்
தேசிய கலை இலக்கிய பேரவை

அனைத்து உயிரினங்களையும் போல மண்ணில் தோன்றி மண்ணில் மறைவது தான் மனித வாழ்வு. அந்த மனித வாழ்வை ஒவ்வொருவரும் அர்த்தமுள்ளதாகவும் தமக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் பயனுள்ளதாகவும் வாழவேண்டும். ஆனால் அத்தகைய நல்வாழ்வு அனைவருக்கும் எட்டாத சமூக அமைப்பிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உயிர் வாழ்வுத் தேவைக்காக மனிதர்கள் ஒன்று கூடி சமூகமாக வாழ முற்படும்போது அதற் கான உழைப்பிலும் பகிர்விலும் ஏற்படும் வேறுபாடுகள் மனித உறவுப் படி நிலைகளாக, ஏற்றத் தாழ்வாக பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கும் அடித்தளமா கின்றன. இதனால் இன்று நிலவும் ஒடுக்குதல்கள் நிறைந்த சமூக அமைப்பில் அவ்வொடுக்குதல்களை எதிர்த்து விடுதலை நோக்கி உழைப்பவர் பக்கம் நிற்பதே உயர்ந்த வாழ்க்கைக்கு இலக்கணமாக அமைகின்றது.

அத்தகைய ஒரு வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவராக தோழர் ஜெயரட்ணம் வாழ்ந்து மறைந்தார். இலங்கையின் வடபகுதியில் இவரைப் போன்று பல்லாயிரக் கணக்கானவர்கள் ஒன்று திரளக்கூடிய "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன அமைப்பு" கம்யூனிஸ்க் கட்சியின் தலைமையில் அறுபதுகளில் உருவானபோது அதன் உறுதிமிக்க செயற்பாடுகள் பழமைவாத ஒடுக்குமுறை கள் பலவற்றை இல்லாதொழித்து ஒரு பண்பாட்டு மாற்றத்தை இந்த மண்ணில் ஏற்படுத்தியது. அத்தகைய விடுதலைப் பயணத்தில் தன்னையும் அடையாளப் படுத்தி வாழ்ந்து மறைந்தவர்களுள் ஒருவராக தோழர் ஜெயரட்ணம் இருந்தார்.

இத்தகைய அமைப்பின் செயற்பாடுகளில் இவரை நான் அறிந்திருந்த போதிலும் 1969ஆம் ஆண்டில் இருபாலை பாரதி கலாமன்றத்தில் நடந்த "ஒக்டோபர் புரட்சியும் பாரதி விழாவும்" என்ற நிகழ்வில் அவரை கருத்துரை வழங்குவதற்காக அழைத்தபோது ஏற்பட்ட நெருக்கம் இறுதி வரை தொடர்ந்தது. போர்க்காலச் சூழலிலும் கொக்குவிலில் அமைந்திருந்த அவரது இல்லத்திற்கு நானும் மறைந்த தோழர் நாகரட்ணமும் "தாயகம்" இதழ்களை வழங்குவதற் காக செல்வோம். வரவேற்று உபசரித்து நீண்டநேரம் மனம் திறந்து உரையாடு



http://ninaivumalar.online/

வார். பின்னர் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையில் பௌர்ணமி தினங்களில் தொடர்ந்து நடைபெறும் “சமூக விஞ்ஞான வட்டக் கருத்தரங்கு”களுக்கு வருகைதருவதுடன் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டு இளம் தலைமுறையினருடன் தனது அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வார்.

இறுதியாக 2020 ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற தோழர் சி.கா.செந்திவேலின் “பாதையும் பயணமும் ஓர் அனுபவப் பகிர்வு” என்னும் நிகழ்வில் தோழர் ஜெயரட்ணம் பங்குகொண்டு சிறப்பித்திருந்தார். அமைதியான தோற்றம் அறிவார்ந்த தெளிவுடன் உரையாடும் பாங்கு இவற்றுடன் விடுதலைப் பயணத்தில் பங்களித்து மறைந்த தோழர் ஜெயரட்ணம் அவர்களை நினைவு கூர்ந்து தேசிய கலை இலக்கிய பேரவையின் சார்பில் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.



புதுமை விரும்பிகளே! புத்தி ஜீவிகளே!
மாணவ, மாணவிகளே!

# பாரதி விழாவும் அக்டோபர் புரட்சி தினமும்

இடம்: பாரதி கலா மன்றம்
இருபாலை கிழக்கு

காலம்: 2-10-69 போயா தினம் மாலை 6-30 மணிக்கு,

உரை நிகழ்ச்சிகள்:

தலைவர்; வி. சோமசுந்தரம் (B.A. Cul.)

'பாரதியும் புதுயுகமும்' — மாதகல் வ. கந்தசாமி
'பாரதியின் பார்வையில்...' — க. தணிகாசலம்
'எழுந்தது பார் யுகப்புரட்சி' — எஸ். இளங்கிரன்
'புதுயுகத்தின் தந்தைகள்' — கே. டானியல்
'வேலையில்லாப் பிரச்சினையும் தீர்க்கும் வழி வகையும்' — யே. ஜெயரத்தினம் (பொருளியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்)
'புது யுகத்துக்கு எமது பணி' — கே. செந்தில்வேல்

○ ஈழத்து முற்போக்குக் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் கவிஞர். முருகு ராஜரத்தினம் அவர்களின் 'என்று வரும்..?' எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு வைபவமும் இடம்பெறும்.

## பேக்காட்டாதை!

(நகைச்சுவை நாடகமும் இடம்பெறும்)

க. தருமராசா
மன்றத் தலைவர்

மா. தம்பிராசா
மன்றச் செயலாளர்



http://ninaivumalar.online/

# பொருளியல் சிந்தனைகளும் பாரதியும்

அ.ஜெயரத்தினம்

யுகக் கவிஞான பாரதி தமது சமகாலப் பிரச்சினைகள் குறித்து கவிதைகள், கட்டுரைகள் வாயிலாக பல்வேறு கருத்துக்களை வெளி யிட்டுள்ளான். அக்காலத்து அரசியல், தமிழ் இலக்கியம், பெண் விடு தலை, சாதி ஒழிப்பு போன்ற பிரதானமான விடயங்களில் தீர்க்கமான கருத்துக்கள் பல பாரதியிடமிருந்து வெளிவந்தன. கவிஞனாகவும், பத் திரிகையாசிரியனாகவும், அரசியல்வாதியாகவும், சமூக சீர்திருத்தவா தியாகவும் பன்முகப்பட்ட ஆளுமை பெற்றிருந்தவன் பாரதி. இதன் காரணமாக சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் நடை முறைப் பிரச்சினைகள் குறித்தும் கருத்துக்களை இடையறாது வெளி யிட்டான்.

இவ்வாறு பாரதியால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் அவன் வாழ்ந்த காலச் சூழலில் மிகுந்த முற்போக்கானவையும் தெளிந்த சிந் தனை கொண்டவையாயும் காலம் மாற்றத்தோடு இயைந்தவையாவும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன; போற்றப்படுகின்றன. இதேவகையில் பொரு ளியல் சிந்தனைகள், கருத்துக்கள் எதையும் பாரதி வெளியிட்டுள்ளானா என்று சிந்திப்பதும் பயனுடையதாகும். இன்று வாழ்க்கைச் செலவு, விலை வாசி உயர்வு பற்றி எவருமே கருத்துத் தெரிவிப்பதுபோல அக்காலத் தில் நடைமுறை பொருளாதார பிரச்சினைகள் பற்றி பாரதி கருத்துக்கள் தெரிவித்திருக்கலாம். அதோடு அமையாது அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பொருளாதார கருத்துக்களையும் வெளியிட்டுக்கலாம்.

இப்படி ஏதாவது கருத்துக்களை பாரதி வெளியிட்டிருப்பின் அக்கருத் துக்கள் அன்றைய காலச் சூழ்நிலையில் முற்போக்கானவையா? அவருடைய ஏனைய துறைக் கருத்துக்களோடு ஒத்திசைவு கொண்டனவா? என்பதையும் காலத்துக்கு காலம் அவனிடமிருந்து வெளிவந்த இத்தகைய கருத்துக்கள் வளர்ச்சியில் பாங்கானவையா? அல்லது முரண்பாடுடையவையா? என்பதையும் அவனது கருத்துக்களை உருவாக்கிய சக்திகள் சூழ்நிலைகள் யாவை? தேசிய சர்வ தேசிய இயக்கங்களின் பாதிப்பு எத்தகையது என்பதை யும் சம கால இந்திய பெருந்தலைவர்களின் கருத்துக்களோடு பாரதி யின் கருத்துக்கள் மாறுபடுகின்றனவா? அல்லது உடன்படுகின்றனவா? என்பதையும் உள்வாங்கியதாகவே எனது கட்டுரை அமையும்.



http://ninaivumalar.online/

## இந்திய நாட்டு வறுமை பற்றி

இந்திய நாட்டு வறுமை, பஞ்சம் என்பன பற்றி பாரதி ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். இந்தியாவில் வறுமையும் பஞ்சமும் பாரதி பிறந்த காலத்தும் வாழ்ந்த காலத்தும் மிகச் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. முருகையன் அவர்கள் தமது "காலமாற்றங்களும் பாரதியும்" என்ற ஆய்வுரையில் (பாரதி ஆய்வரங்க உரை) இந்திய நாட்டு வறுமை நிலைபற்றி பாரதி கொண்டிருந்த கருத்துக்களை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினார்.

இந்தியர்கள் தமது வறுமை எல்லைக்கு காரணம் யாது என்பதை அறியாதவர்களாய் இருப்பது கண்டு பச்சாத்தாபப்படும் பாரதி, அந்த வறுமையைப் போக்க குரல் கொடுப்பதையும் முப்பது கோடி மக்களின் சங்கம் முழுவதும் பொதுவுடைமையாவதாலே தான் அது சாத்தியமாகும் என்று கூறுவதையும் விளக்கியிருந்தார். இது இந்திய வறுமையைத் தீர்க்க பாரதி கொண்டிருந்த அடிப் படைத் தத்துவக் கண்ணோட்டமாகும்.

பாரதி வறுமையை நேரடியாக அனுபவித்தவர். ஓரளவு வசதியுள்ள குடும்பத்திலே அவர் பிறந்திருந்தாலும் தந்தையாரின் தொழில்முறிவும் மரணமும் இளமையிலிருந்தே பாரதியை வறுமையின் பிடிக்குள் தள்ளின. பாரதியார் இறக்குவரை வறுமையின் பிடியிலிருந்து மீளவில்லை. ஓர் அன்பர் உதவிய ஐம்பது ரூபா பணத்தில் தான் பாரதியின் இறுதிக் காரியங்களே நடைபெற்றன.

பாரதி தனது ஸ்வசரிதையில் தனது தந்தை தீய வறுமையால் பெருந் துயர் எய்தி நின்றதைக் கூறுகின்றார். "ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம் ஆற்றிமிக்க பொருள் செய்து வாழ்ந்த" சின்னச்சாமிஐயர் ஓங்கிநின்ற பெருஞ் செல்வம் யாவையும் ஊணர் செய்த சதியில் இழந்தனன்; என்று விவரிக்கிறார்.

அந்நியராகிய ஆங்கிலேயர் செய்த சதியினாலே தந்தை பொருள் இழந்து வறுமை எய்தியதையும் அதன் விளைவுகளையும் பாரதி நேரே அனுபவிக்கிறார்.

"பாங்கினின்று புகழ்ச்சிகள் பேசிய
பண்டை நண்பர்கள் கைநெகிழ்தே கினர்
வாங்கியுய்ந்த கிளைஞரும் தாதரும்



http://ninaivumalar.online/

வாழ்ந்த தேய்ந்தபின்யாது மதிப்பாரோ?

என்பது பாரதியின் அனுபவ வாக்கு. இத்துயரினால் தந்தை இறக்க பாரதி சிந்தை கலங்கினார். இளமையில் வறுமை கொடிது என்பார். வறுமையின் தாக்கம் பாரதிக்கு இளமையிலே அதுவும் திருமணமாகி சில நாட்களிலே ஏற்பட்டுவிட்டது. அப்போது அவனுக்கு வயது பதினாறு; திருமணமாகி ஒரு வருடம். இதனாலே தான்

"பொருளில்லார்க்கினமில்லை, துணையில்லை
பொழுதெல்லாம் இடர் வெள்ளம் வந்தெற்றுமால்"
என்று வள்ளுவர் குறளை மேற்கோள்காட்டி
"பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்" என்று தீர்மானமாக பாரதி கூறுகிறார்.

இவ்வாறு பாரதியின் சொந்த வறுமையனுபவம் இந்திய நாட்டின் வறுமைப் பிரச்சினையை ஒழிக்க வேண்டும் என்பதில் அவருக்கு ஓர் ஆவேசமான தூண்டுகோலாயிருந்திருக்கலாம். அதில் சந்தேகமில்லை, ஆனால் இந்திய நாட்டின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளில் மனம் ஈடுபாடு கொண்ட கவிஞன் பாரதி, பிராமணனாகப் பிறந்தும் சாதியொழிப்பை வேண்டி நின்ற பாரதி சொந்த அனுபவம் இருக்காது விட்டால் கூட, வறுமையை ஒழிக்க குரல் கொடுத்திருப்பான் என்பதில் ஐயமில்லை. ஏனெனில்,

"தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை..."

மிடிமைப் பிணியும் அடிமைத்தனத்தையும் பூண்டிருந்த பாரதத்தையே பாரதி அன்று தரிசிக்கிறான். ஆகவே வறுமையொழிப்புக்காகவும் சுதந்திர மீட்சிக்காகவும் பாரதி குரல் கொடுப்பது இயல்பே.

பாரத தேசத்தின் நிலைபற்றி 1881ல் கார்ல்மாக்ஸ் பின்வருமாறு எழுதினார். (மாக்ஸ் எங்கல்ஸ் நூல் திரட்டு தொகுதி 35 பக்கம் 129/130) "பலவித வடிவங்களில் ஆங்கிலேயர் ஆண்டு தோறும் இந்தியர்களிடமிருந்து பறித்துச் செல்லும் பணம். எந்தவித ஈடும் இன்றி அவர்கள் இந்தியர்களிடமிருந்து எடுத்துச் செல்லும் பணம் அவர்கள் இந்தியாவின் உள்ளே தங்களுக்கு உரிமைப்படுத்திக்கொள்வதை கணக்கில் சேர்க்காமலேயே



http://ninaivumalar.online/

அதாவது இந்தியர்கள் பிரிட்டனுக்கு ஆண்டுதோறும் இலவசமாக அனுப்ப வேண்டியிருக்கும் சரக்குகளின் மதிப்பை மட்டும் எடுத்துக்கொண்டால் இந்தியாவின் 6 கோடி விவசாய இயந்திரத் தொழில் உழைப்பாளிகளுடைய வருவாயில் மொத்தத் தொகையை விட அதிகம் ஆகும். இது மெய்யான இரத்தப் பெருக்கு. இது சகிக்க முடியாத கோரம்; பஞ்ச ஆண்டுகள் அங்கே ஒன்றன்பின் ஒன்றாக தொடர்கின்றன. அதிலும் பஞ்சம் ஐரோப் பியர் இதுவரை கற்பனைகூடச் செய்யாத அளவுகளை எட்டிவிடுகிறது." (இந்தியாவின் வரலாறு நூலில் மேற்கோள் காட்டப்பட்டது. முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ).

கார்ல்மாக்ஸ் இவ் வசனங்களை எழுதிய அடுத்த ஆண்டில் 1882இல் இத்தகைய பஞ்ச சூழ்நிலையில்தான் பாரதி பிறந்தான்.

கோடிக் கணக்கான மக்கள் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் வருடா வருடம் பலியாகின்றனர் என்ற விபரம் மேற்படி நூலில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

1896 – 97 – 6 கோடி 20 லட்சம்
1899 – 1900 – 2 கோடி 80 லட்சம்
1905 – 1907 – 1 கோடி 30 லட்சம்
1907 – 1908 – 4 கோடி 96 லட்சம்

1896 – 1908 பஞ்ச காலத்தில் பிளேக் நோயினால் மட்டும் 60 லட்சம் பேருக்கு மேல் மடிந்தனர். பாரதியின் நெஞ்சு பொறுக்கவில்லை. அவனது ஏக்கம் கவிதையாக உருப்பெறுகிறது.

"கஞ்சி குடிப்பதற் இல்லார் – அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே – நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே – இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே"

கஞ்சி குடிப்பதற்கு இல்லாத காரணத்தை மக்கள் அறியாமல் இருக்கின்றார்களே என்ற பரிதவிப்பும் இம் மக்களுடைய துயரைத் தீர்ப்ப தற்கு ஒரு வழியும் இல்லையே என்ற பாரதியின் ஏக்கமும் கவிதையிலே வெளியாகின்றன.



http://ninaivumalar.online/

அவுஸ்ரேலிய பாடசாலை ஒன்றில் இந்தியர்களின் உணவு எது என்று கல்வியதிகாரி கேட்ட வினாவுக்கு, "பட்டினி" என்று ஒரு சிறுமி பதிலளித்ததாகப் பாரதி கட்டுரையொன்றில் குறிப்பிட்டதையும் இங்கு மனங்கொள்ளவேண்டும். இது எவ்வளவு தூரம் இந்தியாவின் பட்டினி, வறுமை என்பன பற்றி பாரதி ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதை விளக்கும்.

கஞ்சி குடிப்பதற்கில்லாதாருடைய துயரைத் தீர்ப்பதற்கான வழியை பிற்காலத்தில் பாரதி திட்டமாகக் கூறுகிறார்.

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் – இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் – பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்."

என்ற கவிதையிலே எல்லோருக்கும் வயிற்றுக்குச் சோறிடும் வழியைக் கூறுகிறார். பிறர் பங்கைத் திருடுதலாகிய சுரண்டலைத் தவிர்ப்பதால் எல்லோருக்கும் சோறுண்டு, பஞ்சமில்லை என்பது அவனது கருத்து. சுரண்டலே பசி பட்டினியின் மூலகாரணமாவதை பாரதி தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இதனால் தான் மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆகாரம் பூமாதேவி கொடுக்கும் என்று திடமான உறுதியுடன் பாரதி தனது கட்டுரையொன்றில் கூறியுள்ளார்.

பிறர்பங்கைத் திருடாமல் விதி செய்து நடைமுறைப்படுத்தல் அடிப்படையான, ஆனால் மிக நீண்டகால வழிமுறையாகும். ஆகவே உடனிகழ் கால வழி முறையாக பாரதி இன்னொரு கருத்தையும் சொல்கிறார். இந்தியாவில் பஞ்சம் என்ற தமது கட்டுரையில் பின்வருமாறு பாரதி குறிப்பிடுகின்றான். (பாரதியின் கட்டுரைகள் பக்கம் 213/214).

"பஞ்சம் பஞ்சம் என்ற சப்தம் நமது சமூகத்தில் தற்காலம் மலிந்து விட்டது. நாட்டில் உண்டாகும் பஞ்சமெல்லாம் பணப் பஞ்சமேயன்றி தானியப் பஞ்சமன்று..." என எழுதுகிறார். அதாவது பூமி விளைகிறது ஆனால் அவ் விளைச்சலை அனுபவிக்க மக்களுக்கு வாய்ப்பில்லை. அவர்களது கையில் தானியங்களை வாங்குவதற்கு பணம் இல்லை. செயற்கையாக ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தை குறிப்பிட்டு, இதை நீக்குவதற்கு பின்வரும் அபிப்பிராயங்களை தனது கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார்.



http://ninaivumalar.online/

1. மக்களின் வருவாய்த்துறைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுப் பணப் பஞ்சத்தை நிவர்த்திக்க வேண்டும்.
2. அதிக விளைச்சல் உள்ள மலிவான காலத்தில் தானியங்களை வாங்கி சேமித்து வைத்து பஞ்ச காலத்தில் அரசாங்கமே மலிந்த விலையில் மக்களுக்கு விற்கவேண்டும். (இதை Buffer stock policy என தற்காலத்தில் அழைக்கின்றனர். இன்றும் பல நாடுகளில் அரசாங்கங்கள் இத்தகைய கொள்கைகளை நடைமுறைப்படுத்தி, தானிய விலைத் தளம்பல்களை ஓரளவு கட்டுப்படுத்துகின்றன. சர்வ தேச ரீதி யான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இக்கொள்கை இன்று மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும்)
3. விளைச்சல் இல்லாத நிலத்திற்கு வரிகளை ரத்துச் செய்தல் வேண்டும்.
4. விவசாயிகளுக்கு வட்டியின்றி கடன் தரவேண்டும்.

இத்தகு நடவடிக்கைகளால் பஞ்சத்தை ஓரளவு தவிர்க்கலாம் என்கிறார். பாரதியின் இக்கருத்துக்களிலே ஒரு முக்கிய அம்சத்தை அவதானிக்கலாம். அதாவது அரசாங்கம் ஏனோதானோ என்று பார்த்துக் கொண்டிராமல் மக்களின் பொருளாதார சேமங்களில் தலையீடு செய்யவேண்டும் என்பது தான். இது வழிமுறையாக வந்த பிரிட்டிஷாரின் தலையிடாமை கொள்கைக்கு மாறான கருத்தாகும். சந்தை சக்திகளை எவ்வித கட்டுப்பாடுமின்றி இயங்க அனுமதித்தால் தன்னியக்கமாகவே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதார சேமம் நாட்டு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும் என்பதே தலையிடாமைக் கொள்கையின் சாரம்சமாகும்.

இக்கொள்கை 1930ஆம் ஆண்டுகள் வரையும் உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார சித்தாந்தமாகும். 1929 இன் (Great crash) என வருணிக்கப்படும் மாபெரும் உலகப் பொருளாதார மந்தமும் அதனையடுத்து வெளிவந்த J.M.கீன்ஸ் எழுதிய தொழில், பணம், வட்டி பற்றிய பொதுக் கொள்கை என்ற நூலுமே இக்கொள்கை கைவிடப்படவும் அரசாங்கம் நேரடி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் காரணங்களாயின. பாரதி இதற்கு பத்தாண்டுகளுக்கு முன்னரே அரசின் பொருளாதார நடவடிக்கைகளின் அவசியம் பற்றி வற்புறுத்தியுள்ளார்.

“ராஜ்ய சாஸ்திரம்” என்ற தமது கட்டுரையிலே பாரதி மிகத் தெளிவாக குறிப்பிடுகிறார். (பக்கம் 302)


http://ninaivumalar.online/

“ஜனங்களுக்குள்ளே சமாதானத்தைப் பாதுகாப்பதும் வெளி நாடுகளிலிருந்து படையெடுத்து வருவோரைத் தடுப்பதும் மாத்திரமே இராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்துவிடக் கூடாது. ஜனங்களுக் குள்ளே செல்வமும் உணவும் வாசம் முதலிய சௌகர்யங்களும், கல்வி யும், தெய்வ பக்தியும், ஆரோக்கியமும், நல்லொழுக்கமும், பொது சந் தோஷமும் மென்மேலும் விருத்தியடைவதற்குரிய உபாயங்களை இடைவி டாமல் அனுஷ்டித்துக் கொண்டி ருப்பதே ராஜங்கத்தின் கடமையாவது.” – அக்காலத்தே இது மிகவும் முன்னேறிய கருத்து.

ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை காரணமாக 19ம் நூற்றாண்டின் முழுமையும் இந்திய பொருளாதார அமைப்பில் பார தூரமான பாதிப்பு ஏற்பட்டது.

1. இந்தியா ஆங்கில கைத்தொழில் உற்பத்திச் சரக்குகளின் விற் பனைச் சந்தையாக மாற்றப்பட்டது.
2. ஆங்கில கைத்தொழில்களுக்கான மூலப் பொருட்களை மலிவான விலையில் உற்பத்தி செய்து அனுப்பும் மூலப்பொருள் விவசாய விளை நிலமாக இந்தியா மாற்றப்பட்டது.
3. உள்நாட்டு ஆங்கில முதலீடுகள் அதிகரித்தன.

இதன் விளைவாக உள்நாட்டு சுதேச கைத்தொழில்கள் அழிந்தன. குடிசைக் கைத்தொழில்கள் ஒழிந்தன. உள்நாட்டு உணவு விவசாயம் சீர்குலைந்தது. இதன் காரணமாக வேலையற்றோர் பட்டாளம் ஒன்று தோன்றி பஞ்சத்தால் வாடுகையில், தரகு வர்த்தகம் செய்த இந்திய வர்த் தகர்களிடம் மூலதனம் குவிந்து வந்தது. பெரிய மூலதனத்திற்கும் சிறிய மூலதனத்திற்கும் இடையே போட்டி ஏற்பட்டது. இத்தகைய ஓர் சூழ்நிலை யில்தான் பாரதியின் தந்தை சின்னச்சாமி ஐயர் தொடங்கி நடாத்திய பஞ்சாலை முறிவடைந்தது. ஆங்கிலேய முதலீடுகளின் போட்டியை தாங்க இந்திய சிறிய முதலீடுகளால் முடியவில்லை. இந்தச் சதிதான் ஊணர் செய்த சதி என்று பாரதியாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே பாரதியின் ஆங்கிலேயே வெறுப்புக்கும் அவனது சுதேசிய நோக்குக்கும் இளமையில் வித்தூன்றியதாக இரகுநாதன் தனது கட்டுரை ஒன்றிலே குறிப்பிடுகின்றார். (தாமரை செப்டெம்பர் 67).

ஆகவேதான், பாரதி கூறுகின்றார்:

“பாரத தேசம் சுதந்திரம் அடைந்தால்தான் அந்நியர்களின்



http://ninaivumalar.online/

அடங்காப் போட்டியாலும் அடங்காச் செருக்காலும் வரியாலும் கொல் லப்பட்டிருக்கும் கைத்தொழில்கள் நன்கு தளைத்தோங்கும்..." (பாரதி மும்மணிகள் - பக்கம் 4 - 1909/10 ஆண்டுகளில் இந்திய பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரைகள்).

மேலும்,

"எவ்வளவு நல்ல பூமியானாலும் எவ்வளவு நல்ல மரமானாலும் அடக்கியாளும் அந்நிய மரத்தின் நிழலில் தழைத்தோங்கி வளர முடியாது." (அதே நூல்) மிகத்தெளிந்த சிந்தனையோடு பாரதி மேற் கண்ட வரிகளை எழுதியுள்ளார்.

அடக்கியாளும் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறியாமல் இந்தியா வில் பொருளாதார வளர்ச்சி சாத்தியமில்லை என்பதையும், பொருளா தார விடுதலைக்கு அரசியல் தேச விடுதலை ஒரு முன்தேவை என்பதை யும் பாரதி வற்புறுத்தியிருக்கின்றார். இது பலராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை.

**வங்காளப் பிரிவினையும் சுதேசியமும்**

இந்திய சுதேசி இயக்கத்தை வீறுகொண்டெழச் செய்த பெரும் சக்தியாக வங்காளப் பிரிவினை கருதப்படுகிறது. 1905ஆம் ஆண்டில் இந்தியர்களுடைய கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் வைஸ்ராய் கர்ஸாள் என்பவனால் வங்காளம் பிரிவினை செய்யப்பட்டது. இச்செய்கை தேசிய பக்திக் கனலை கொழுந்து விட்டெரியச் செய்தது. கல்கத்தாவில் கூடிய இந்திய காங்கிரஸ் மாநாடு வங்காளப் பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவிக் கும் முகமாக தீர்மானங்களை நிறைவேற்றியது.

தாதாபாய் நவுரோஜியின் தலைமையில் இந்தியர்கள் அந்நியப் பொருட்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் சுதேசிய பொருட்களையே வாங்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதன் முதலாக சுயராட்சிய கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மூன்றின் வெளிப்பாடும் பொதுவாக சுதேசி இயக்கமென அழைக்கப் படலாயிற்று. இந்த இயக்கம் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்த வகையில் ஒரு அரசியல் இயக்கமாகவும் இந்திய தொழில் வளர்ச்சியின் மீட்சிக்கு அடியெடுத்துக்கொடுத்த வகையில் ஒரு பொருளாதார இயக்கமாகவும் உருவெடுத்தது.



http://ninaivumalar.online/

தீவிரவாதிகளாகிய திலகர் அணியினரே மேற்கண்ட தீர்மானங்களுக்கு முக்கிய கர்த்தர்கள் என்பதும் தாதாபாய் நவுரோஜியும், திலகரும் வளர்ந்து வரும் இந்திய முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள் என்பதும் அறிந்த தொன்றே. பாரதி தீவிர திலகர் அபிமானி என்பதும் கல்கத்தா காங்கிரஸில் கலந்து கொண்டவர் என்பதும் புதிய செய்திகள் அல்ல.

திலகர் இப்புதிய சுதேசிய கொள்கையை தமது "கேசரி" பத்திரிகை மூலமாக மராத்தியில் பிரசாரம் செய்து வந்தார். பாரதி இதே கொள்கையை தமது "இந்தியா" பத்திரிகை மூலமாக செய்து வந்தார்.

பாரதி இச்சுதேசி இயக்க நடவடிக்கைகளில் பலவிதமாக ஈடுபட்டார். இந்தியா பத்திரிகையில் அந்நிய பொருள் பகிஷ்காரத்தை விளக்கி பல கட்டுரைகள் எழுதினார். பகிஷ்காரத்தை எதிர்த்தவர்களுக்கு மறுமொழி பகன்றார். சென்னையில் பிபின் சந்திரபாலரை அழைத்து பிரசங்கங்கள் செய்வித்தார். சுதேசியத்தை கருவாகக் கொண்ட கவிதைகளைப் பொழிந்தார்.

"பத்தாம் அவதாரம்" என்ற பாரதியின் கட்டுரை பின்வருமாறு அமைகிறது. (பாரதி தரிசனம் – இரண்டாம் பாகம் – பக்கம் 68)

"வருஷந்தோறும் 60 கோடி ரூபாய்க்கள் இங்கிருந்து பெற்றடிக்கப் பட்டு வருகின்றன. இவ்வாறு நடந்துகொண்டிருந்தால் இந்தப் பாரத தேசம் நாளுக்கு நாள் சொல்ல முடியாத தரித்திரத்திலும் பிணியிலும் மூழ்கி வருவது ஆச்சரிய மாகுமா? இப்போது நடைபெற்று வரும் பிரிட்டிஷ் ராஜாங்க முறைமையிலே மேலே கூறியது போன்ற அநீதிகள் எத்தனையோ இருக்கின்றன. இந்த அநீதிகளை நாசம் செய்யும் பொருட்டாக நமக்கிடையே கடவுள் பத்தாம் அவதாரம் செய்திருக்கின்றார். இப்போது மனித ரூபமாக அவதாரம் செய்யவில்லை. அவருடைய அவதாரத்தின் பெயர் சுதேசியம்; அவருடைய ஆயுதம் (Boycott) அதாவது அந்நிய சம்பந்த விலக்கு அல்லது பகிஷ்காரம். அவருடைய மந்திரம் வந்தே மாதரம்."

சுதேசிய இயக்கத்தின் தோற்றத்தை ஒரு அவதாரம் என குறிப்பிடுவதிலிருந்தே பாரதி இந்த இயக்கத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளலாம். அந்நியப் பொருட்களை பகிஷ்கரிப்பதால் உள்நாட்டுப் பொருட்களுக்கு கிராக்கி ஏற்பட்டு, அவற்றின் விலை உயர்ந்து உள்நாட்டு கைத்தொழில்கள் வளர்ச்சியடையும் என்பதே இதில் பொதிந்துள்ள பொருளாதார சித்தாந்தம். வேறு வகையில் கூறி



http://ninaivumalar.online/

னால் உள்நாட்டுச் சந்தை உள்நாட்டு கைத்தொழில்களுக்காக பாதுகாக் கப்படுகிறது என்பதாகும்.

சுதேசதியத்தை மிகப் பரந்த பொருளில் காணும் பாரதி, கைத் தொழில் விருத்தி முதலான பொருளாதார விஷேசங்களை அதன் முதலாவது அம்சமாக கொள்கிறார். இந்திய நாட்டு கைத்தொழில்களை ஏன் இந்திய மக்கள் ஆதரிக்க வேண்டும்? ஆரம்ப கால கைத்தொழில் உற்பத்தி எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை? அவற்றை எவ்வாறு இந்திய ஜனங்களின் ஆதரவுடன் நிவர்த்திக்கலாம் என்பதையெல்லாம் வெகு விஸ்தாரமாகவே பாரதி எழுதுகிறார்.

(பாரதி முன்மணிகள் :- பக்கம் 57, 58, 59)ஆரம்ப நிலையிலுள்ள தொழில்களுக்கு வரிவிதிப்பு. இறக்குமதிக் கட்டுப்பாடு போன்ற கருவி களால் அரசாங்கம் பாதுகாப்பு அளிப்பது பொருளியல் கொள்கை யில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று, பாரதியார் காலத்தில் ஆரம்பத் தொழில்களைப் பாதுகாக்க அந்நிய அரசு முன்வராது என்பதால் பாரதி மக்களே இத்தொழில்களை முன் வந்து பாதுகாக்க வேண்டும் என்கிறார். ஆரம்ப தொழில்களின் உற்பத்தித் தரக்குறைவைப் பொருட்படுத்தாமல் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று தனது கட்டுரையிலே வேண்டுகோள் விடுக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த சட்டசபை மெம்பர்களும் காங்கிரஸ் பிர முகர்களும் அந்நியப் பொருள் பகிஷ்காரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்நிய பொருள்களிடம் வெறுப்பை ஏற்படுத்துவதால் பகிஷ்காரம் ஹிந்து தர்மத்துக்கு விரோதமானது என்றும் எல்லோரிடமும் கருணை காட்டு வதே ஹிந்து தர்மம் என்றும் கூறினார்கள். பாரதி இவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தார். பாரதி எழுதுகின்றார்:-

'எங்கள் நாட்டு சாமான்களையே நாங்கள் வாங்குவோம் என்றால் இதில் அந்நியர்களிடம் விரோதமிருப்பதாக ஏன் கொள்ள வேண்டும்? ஒருவன் தன் பத்தினியிடத்தில் அன்பு கொண்டு அவளுக்கு உண்மையாக நடக்கும் பட்சத்தில், அவன் அந்நிய ஸ்திரீகளை விரோதிக்கிறான் என்று அர்த்தமா? ஆதலால் இந்த சட்ட சபை வேதாந்திகள் அந்நியரிடம் காட்டும் தயவையும் கருணையையும் சிறிது சுதேசிகளிடமும் செலுத்தும் படி கேட்டுக்கொள்கின்றோம்.' இவ்வாறு பாரதியின் பேனா மிக வலிமை யுடன் எழுதுகிறது. இச் சுதேசி இயக்கத்தில் பாரதி மிகத் தீவிரமாகவே



http://ninaivumalar.online/

ஈடுபட்டார். இதன் காரணமாகவே பாரதி அரசின் பார்வைக்குள்ளாகி புதுச்சேரி செல்ல நேர்ந்தது. இதே காரணத்துக்காகவே திலகர் கைது செய்யப்பட்டார் என்பது மனம் கொள்ளத்தக்கது.

இந்திய தொழில் வளர்ச்சியை மையப் பொருளாகக் கொண்டு பாரதி பாடிய பாடல்கள் வெகு பிரசித்தம். அவருடைய பாரத தேசம் என்ற கவிதையில் 'உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்' என்கி றார். கப்பல் தொழில், பயிர்த் தொழில், சுரங்கத் தொழில், கடல் தொழில், புடவைத் தொழில், ஆயுதத் தொழில், காகிதத் தொழில் என்றிவ்வாறு பற்பல நவீன தொழில்கள் எல்லாம் செய்வோம் என்று அறிவிக்கிறார். இவரது இக் கவிதை ஒரு 5 ஆண்டுத் திட்டம்போல் இருப்பதாக பிரபல விமர்சகர் ரகுநாதன் அபிப்பிராயம் தெரிவித் துள்ளார்.

பிற கைத்தொழில்கள் வளர்வதற்கு ஆதாரமான எந்திரத் தொழில்கள், நுகர் பொருட்களை ஆக்குகின்ற கைத்தொழில்கள், மூலப்பொருட்களை உருவாக்குகின்ற கைத்தொழில்கள் என்று ஆயி ரமாயிரம் தொழில்களைக் கனவு காண்கிறார். விவசாயத்துக்கும் கைத் தொழிலுக்கும் போதிய அழுத்தத்தை பாரதி கொடுத்திருப்பது அவரது பல பாடல்களிலிருந்து தெளிவாகும். சகல தொழில்துறைகளிலும் இந்தியா முன்னேற வேண்டும். தனது சொந்தப் பலத்திலே நிற்க வேண்டும் என்பதே பாரதியின் ஆவல். இதனால் தான் அந்நாளில் ஆசிய நாடுக ளுக்கு ஆதர்சமாயிருந்த ஜப்பான் நாட்டிடமிருந்து தொழில் நுணுக்கங்களை கற்று வரும்படி இளைஞர்களைப் பாரத்து பாரதி தனது கட்டுரை ஒன்றிலே வேண்டுகோள் விடுக்கிறார். வளர்ச்சியடைந்த ஒரு நாட்டிடமிருந்து தொழில் நுணுக்கங்களைப் பெற்றுக் கொள்ளுதலின் இன்றியமையா மையை பாரதி நன்கு புரிந்திருந்தார்.

பூனா நகரத்திலே 1905 அக்டோபர் 8 ஆம் திகதி 5000 மக்கள் முன்னிலையில் திலகர் அந்நியப் பொருள் குவியலுக்கு தீ மூட்டினார். கூடியிருந்த மக்கள் தீயை வலம் வந்து விபூதி பூசி உடையில்லாமல் திரிய நேர்ந்தால் கூட இனியொரு போதும் ஆங்கிலத் துணிகளை வாங்கு வதில்லை என சபதம் ஏற்றனர்.

சென்னையில் பாரதியின் அழைப்பின் பேரில் திருவல்லிக்கேணி கடற் கரையில் பிபின் சந்திரபாலர் அந்நிய துணிமணிகளுக்கு தீ மூட்டி னார். காந்திக்கு முன்னரே அந்நியத் துணி பகிஷ்கரிப்பில் பாரதி ஈடுபட்டு விட்டார் என்று வ.ரா. எழுதுகிறார். சுதேசி இயக்கத்தின் வீச்சையும் வேகத்



http://ninaivumalar.online/

தையும் கணிப்பதற்கு பின்வரும் நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறுவர். 75 விலைமாதர் NASIK என்ற இடத்தில் கூடி இனி அந்நியப் பொருட்களை உபயோகிப்பதில்லை என்று தீர்மானம் எடுத்தார்களாம். *

இவ்வாறு நாடு முழுவதும் சுதேசி இயக்கத்தால் கவரப்பட்ட போது உணர்ச்சி வேகம் கொண்ட கவிஞனான பாரதியின் மனோநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று கூறவேண்டுவதில்லை.

தமிழ் நாட்டில் 1906 இல் தூத்துக்குடியில் வ.உ.சியின் சுதேசி கப்பல் கம்பனி இத்தகைய சூழ்நிலையில்தான் ஆரம்பமாகியது. ஆனால் அதற்கும் சின்னச்சாமி ஐயரின் பஞ்சாலைக்கு நேர்ந்த கதியே ஏற்பட்டது.

தேசிய முதலாளித்துவத்தின் சுதேசிய பொருளாதார இயக்கத்தை அன்றைய நிலையில் பாரதி ஆதரித்தது மிகவும் சரியானதும் முற்போக் கான நிலைப்பாடு கொண்டதும் ஆகும்.

**ருஷ்யப் புரட்சியின் பாதிப்பு**

பிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரமாகிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சுலோகத்தை தனது இலட்சியமாக 'இந்தியா' பத்திரிகையில் பொறித்து வெளியிட்ட பாரதி, பத்திரிகை ஆசிரியனாக (Journalist) இருந்தமையால் சமகால வெளியுலகத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்று அவற்றின் தாக்கங்களுக்கும் செல்வாக்குக்கும் ஆட்பட்டான்.

1917ன் ருஷ்ய அக்டோபர் புரட்சியை வாழ்த்தி வரவேற்ற முதலா வது இந்தியக் கவிஞனான பாரதி அப் புரட்சியின் இலட்சியத்திலும் உடன்பாடு கொண்டிருந்தான் என்பதையும் இந்தியாவில் ஒரு பொது வுடமை சமுதாய அமைப்பு தோன்ற வேண்டுமென்று விரும்பினான் என்பதையும் அவனது பல கவிதைகளும் கட்டுரைகளும் எடுத்துக் காட்டுகின்றன.

வெறுமனே புரட்சிக் கோஷங்களால் பாரதி கவரப்பட்டான் அல்ல. புரட்சிக்குப் பிந்திய ருஷ்ய நிகழ்ச்சிகளை அவன் நன்கு அவதானித்து வந்துள்ளான் என்று அவனது கட்டுரைகள் புலப்படுத்துகின்றன.

---

அடிக்குறிப்பு : * The myth of lokamanya. Telak and mass politics in Maharastra By Richard I cushman.



http://ninaivumalar.online/

*1917 இல் புரட்சி நடந்து முடிந்த சில நாட்களுக்குள் 'செல்வம்' என்ற கட்டுரை யில் பாரதி பின்வருமாறு எழுதுகிறார்.*

*'ருஷ்யாவில் சோஷலிஸ்டுக் கட்சியார் ஏறக்குறை தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றி விடக்கூடுமென்று தோன்றுகிறது. இக் கொள்கை மென்மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கனவே ஸ்ரீமான் லெனின் முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடமையாகிவிட்டது. ருஷ்யாவிலிருந்து இது ஆசியாவில் தாண்டிவிட்டது."*

*'இச் சித்தாந்தம் பரிபூரண ஜெயமடைந்து மனிதருக்குள்ளே ஸகஜ தர்மமாக ஏற்பட்ட பிறகுதான் மானிடர் உண்மையான நாகரிகம் உடையோர் ஆவர்."*

*பாரதியின் இக் கருத்துகளுக்கு வேறு விளக்கம் தேவையில்லை. 'கலைகள்' என்ற கட்டுரையிலே பாரதியார் பின்வருமாறு எழுதுகிறார்.*

*'ஸமத்துவக் கொள்கையிலே இரண்டு செய்திகளைப் பற்றிய விசாரணையுண்டாகிறது. முதலாவது செல்வத்தை உண்டாக்குதல் இரண்டாவது அதைப் பங்கிட்டுக் கொடுத்தல். முதல் விஷயம் திறமையின் உபயோகத்தைப் பற்றியது. இரண்டாவது விஷயம் இன்பங்களைப் பங்கிட்டுக் கொள்வது பற்றியது. இன்பங்களை நேரே வகுத்தால் ஒவ்வொருவனுக்கும் இன்பம் உண்டாகிறது. நேரே வகுத்தல் என்பது ஒன்றுபோல் வகுத்தல் என்று அர்த்தமல்ல. நியாயமாக வகுத்தல் என்று அர்த்தம். நியாயமே சமத்துவத்தின் பெயர். நியாயமே முதலாவது சமத்துவம்.." இதனால் 'மனிதன் செல்வனாவான், குடிகள் விடுதலை பெற்றிருப்பர், நாடு உயர்வு பெற்றிருக்கும்."*

*இக்கருத்துக்களில் நவீன சோஷலிசத்தின் உள்ளடக்கம் முழுமையாக அடங்கியுள்ளது. ஆகவே பாரதி ஒரு சமதர்ம பொருளாதார அமைப்பை வரவேற்கிறபோது அதை நன்கு புரிந்துகொண்டுதான் கூறியுள்ளான் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டும்.*

*இவ்வாறே பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபாலர் ஆகியோர் சோவியத் புரட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை தமது கட்டுரைகளிலும் சொற் பொழிவுகளிலும் ஆதரித்தனர்.*



http://ninaivumalar.online/

சமத்துவ பொருளாதார சமூக அமைப்பை தனது இலட்சியமாக ஏற்றுக் கொண்ட பாரதி, லெனின் வழிமுறையை ஏற்றுக்கொண்டவர் அல்ல. லெனின் போன்றவர்களது பலாத்கார வழி இந்தியாவில் ஏற்படுவ தற்கு முன்னரே சமாதானமான வேறு வழிகளில் ஒரு சமத்துவ சமு தாயத்தை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

இந்து சனசமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பது போல அவ்வளவு தார தம்மியம் இல்லையென்றும் முதலாளி, தொழிலாளி விரோதம் ஐரோப்பாவில் இருப்பதுபோல் இந்தியாவில் இல்லை என்றும் ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பது போல் இந்திய நாட்டுச் செல்வர் அவமதிப்பதில்லை என்றும் ஏழைகளுக்குத் தானம் கொடுக் கும் வழக்கம் இந்தியாவில் உள்ள தென்றும் இதன் காரணமாக ஒரு வன்முறை இயக்கம் தேவைப்படாது என்ற ரீதியிலும் பாரதியார் அபிப்பி ராயம் தெரிவித்துள்ளார். இந்திய மதத் தத்து வங்களில் பாரதிக்கு இருந்த ஈடுபாடும் இந்திய நிலப்பிரபுத்துவ முறையும் சாதி அமைப்பும் வர்க்க முரண்பாடுகளை கூர்மையடைய விடாமல் தடுத்து வந்தமையும் பாரதியின் மேற்போந்த அபிப்பிராயத்துக்கு அடிப்படையாக இருந் திருக்கக்கூடும்.

ஆனால் ஒன்றைக் கவனிக்கவேண்டும். சமாதானமாக மாற் றங்கள் ஏற்படாவிட்டால் வன்முறையில் அவை ஏற்படுவது தவிர்க்க முடியாததாய் விடும் என்பதை பாரதி அங்கீகரித்திருக்கிறார். அவர் எழு தினார்.

'ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாளிகள் ஒரு சபை கூடி அந்தக் கிராமத்திலுள்ள ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய யோசனை கள் பண்ணி நிறைவேற்ற வேண்டும். அன்பினால் உலகத்தின் துயரங் களை எளிதாக மாற்றிவிடலாம். அங்ஙனம் செய்யாமல் அஜாக்கிரதை யாய் இருந்தால் ஐரோப்பாவைப் போல் இங்கும் ஏழை செல்வர் என்ற பிரிவு பலமடைந்து விரோதம் முற்றி அங்கு ஜனக்கட்டு சிதறும் நிலை மையிலிருப்பது போல் இங்கும் ஜனசமூகம் சிதறி, மகத்தான விபத் துக்கள் நேரிட இடமுண்டாகும்." (பக்கம் 74 பாரதியார் கட்டுரை.)

இது ஓர் எச்சரிக்கை. அன்பினால் செய்யத் தவறின் வன்முறை விபத் துக்கள் ஏற்படும் என்கிறார் பாரதி. அதாவது வரலாற்றின் தவிர்க்க முடியாத தன்மையை புரிந்தவர் போல பாரதி பேசுகிறார்.



http://ninaivumalar.online/

எனினும் பாரதி தன்னளவிலே ஒரு கற்பனாவாத வழிமுறையை தனது கட்டுரைகளிலே எழுதியுள்ளமையை கவனிக்காமல் விட முடியாது. கிராமங்க ளில் நிலச்சுவான்களும் பண்ணையடிமைகளும் கூடி 'தொழில் நிர்வாக சங்கம்' என்றொரு சங்கம் அமைத்து கிராமத் தொழில் கல்வி, சுகாதாரம், துணி, உணவு என்று இன்னோரன்ன எல்லாவற்றையும் கவ னித்தால் வறுமையற்றுப் போய்விடும். இதனைப் பார்த்து மெச்சி எல்லோ ரும் கைக்கொள்வர் என்றெல்லாம் எழுதுகிறார். (பக்கம் 388,389 பாரதி யார் கட்டுரைகள்.)

பாரதியின் பொருளாதார சிந்தனைகளிலே காலத்தின் போக்கை அவன் புரிந்து கொண்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. சுதேசிய இயக்க போராட்ட கால காட்டத்திலே அவன் உள்நாட்டு முதலாளித் துவத்தை ஆதரித்தான். பிற்காலத்திலே சமத்துவ பொருளாதாரத்தை ஆதரித்தான். இது பாரதியில் காணப் படும் வளர்ச்சி: காலத்தின் தேவை.

**பாரதியும் காந்தியும்**

இந்திய தேசப் பிதாவான மகாத்மா காந்தியின் பொருளாதாரக் கொள்கைகளை பாரதியின் கொள்கைகளுடன் ஒப்பிடுதல் பொருத்த மாயிருக்கும் என நம்புகிறேன்.

நவீன முதலாளித்துவ நாகரிகத்தையும் பெரிய இயந்திரத் தொழில் துறையையும் முதலாளித்துவ நகரப் பண்பாக்கத்தையும் காந்தி விமர் சித்து வந்தார். கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் உற்பத்தியை மீண்டும் உயிர்ப்பித்து வளர்ப்பது, பொருளாதார நோக்கில் தனித்து இயங்கும் கிராம சமுதா யங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பொருளாதார வாழ்க்கையை கட்டுப்பாடின்றி இயங்கச் செய்வது ஆகி யன காந்தியின் செயல் திட்டத்தில் அடங்கி இருந்தன.

இந்திய விவசாயி, கம்மியன், குடிசைத் தொழிலாளி, சிறு வியா பாரி ஆகியோரின் குட்டி பூர்ஷவா தன்மை கொண்ட கற்பனா சோஷலிச ஆதர்ஷம் காந்தியின் இந்த விமர்சனத்திலும் செயல் திட்டத்திலும் வடிவு பெற்றது. (இந்திய வரலாறு – மாஸ்கோ.)

காந்தி நவீனத் தொழில் மயத்தை எதிர்த்தார். 'யந்திரசாலை, ஆலை இவற்றால் என்ஜின் புகையேறிய நாட்டிலே தேவர்கள் இரார். நவீன யந்திர தந்திரங்களினாலும் அவற்றினால் விளையும் செல்வத்



http://ninaivumalar.online/

தினாலும் இன்பமுண்டாகா" என்று காந்தி கூறுகிறார். மேற்கோள் பாரதியினுடையது. (பக்கம் 64 பாரதி கட்டுரைகள்.)

ஆனால் பாரதியோ நேர்மாறான கருத்துக் கொண்டவன் வரப்போவது இயந்திரயுகம் என்பதைத் தெரிந்துகொண்டு அதை அங்கீகரித்து வரவேற்றவன். பாரிய இயந்திர கைத்தொழிலாக்கத்தினால் தான் இந்தியா முன்னேற முடியும் என மனமார நம்பியவன்.

'இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையும் செல்வமும் கொடுப்பது எல்லா விதமான கைத்தொழில்களும் தற்காலத்திலே இரும்பு யந்திரங்களாலே செய்யப்படுகின்றன. ஆதலால் நமது சேத்து கொல்லருக்கு நாம் பலவிதங்களில் அறிவு விருத்தியும் ஜீவன சௌகர்யங்களும் ஏற்பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்றவரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்' என்று பாரதி எழுதுகிறார்.

காந்தி உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடமை ஆக்கப்படுவதை ஏற்றுக்கொண்டவர் அல்லர். உற்பத்திச் சாதனங்களையும் பெரும் செல்வங்களையும் வைத்திருப்போர் அவற்றை நம்பிக்கைச் சாதனமாக, தர்ம சாதனமாக ஒரு தர்மகர்த்தா முறையில் ஏனைய மக்களுக்காக நிர்வகித்து வரவேண்டும் என்று விரும்பினார். பாரதி சகல உற்பத்திச் சாதனங்களும் நாட்டு மக்களுக்கு உரிமையளிக்கப்படவேண்டும் என்று விரும்பினார். கைத்தொழில் வியாபாரம் எதுவும் கூட்டுத் தொழிலாகவே நடைபெற வேண்டும் என்றார். "வியாபாரத் தில் கூட்டு வியாபாரம் எங்ஙனம் சிறந்ததோ அதுபோலவே கைத்தொழிலும் கூட்டுத் தொழிலே சிறப்பு வாய்ந்தது. முதலாளியொருவர் கீழே பல தொழி லாளிகள் கூடி நடத்தும் தொழிலைக் காட்டிலும் தொழிலாளிகள் பலர் கூடிச் செய்யும் தொழிலே அதிக நன்மையைத் தருவதாகும்" (பக்கம் 304) என்று எழுதியுள்ளார். இதனால்தான் அவர் கூடித் தொழில் செய் என்று தமது ஆத்தி சூடியில் அறிவுறுத்துகிறார்.கூடி வினை செய்வோர் கோடி வினை செய்வார் என்பது அவர் வாக்கு. காந்தி தமது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக அந்நிய துணி பகிஷ்காரத்தை முன்னின்று நடத்தினார். பாரதி காந்திக்கு முன்பே சுதேசி இயக்கத்தில் திலகரின் தலைமையில் இதை ஆதரித் தார்.

"தொழிலாளியை கஞ்சிக்குப் பறக்க விட்டு விட்டு தனது பணப்பெட்டி களை நிரப்பிக் கொள்ளும் ஒவ்வொரு முதலாளியும் கொள்ளைக்


http://ninaivumalar.online/

காரரே ஒழிய வேறில்லை" என்று பாரதியும் "தனது தேவைக்கு மேல திகமாக பொருள் சேர்ப்பவன் திருடன்" என்று காந்தியும் கூறுவதில் ஒற்றுமையிருக்கிறது.

ரொட்டிக்கு வழியில்லாதவனிடம் கடவுளைப் பற்றி பேசக் கூடா தென காந்தி சொன்னார். "ஜனங்களுடைய வயிற்றுக்கு கஞ்சி காட்ட முடியாவிட்டால் அந்த தேசத்தில் எவ்வளவு பெரிய வித்வான் இருந்தும் பிரயோசனம் என்ன?" என்று கேட்கிறான் பாரதி.

தொடர்ந்து அவர் சொல்கிறார், "சகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர். அங்கே குருக்கள் எல்லாம் பொய்யர், பண்டிதர் எல்லாம் மூடர், மேன்மை நிலை பெற வேண்டுமானால் கைத்தொழில்கள் பெருகும்படி செய்யவேண்டும். சாத்திய மில்லை என்று சொல்லி ஏங்குவதில் பயனில்லை. எப்படியேனும், எப்படியேனும், எப்படியேனும் செல்வத்தை வளர்க்க வேண்டும்..."

(நன்றி : மூலம் - 'பாரதியின் பன்முகப்பார்வை' . தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு - 1. 1984)

அ. ஜெயரத்தினம்



பேராதனை பல்கலைக் கழக பொருளியல் சிறப்புப் பட்டதாரியான (1961—65)இவர் கைலாசின் மாணவராவர். கண்டி மு. போ. எ. சங்கச் செயலாளராக இருந்த இவர் இலங்கை நிர்வாக சேவையில் தற்போது பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டப் பணிப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.



http://ninaivumalar.online/

# Tributes from Grandchildren

A Man of Principle

My Dearest Thaththa,

We often saw each other when I was a little girl. Although I cannot remember much from the early years of my life, I can say that I am always wishing to be a little girl again, to experience the happiest moments of my life – most of which I spent with you and Ammama. How I long to be in your arms again!

You are no longer physically here but you have an everlasting place in my heart. You give me comfort. You are the light in the darkness. You inspire me.

Nothing could give me greater pride and happiness than to be your eldest grand daughter.

I will continue your legacy.

I love you Thaththa. An indescribable and immeasurable amount of love.

***Janu***

## All Rounder

Dear Thaththa,

I miss you dearly. When I heard the news, I was very saddened. It pains me that I could not visit you one last time this summer, because of the COVID-19 pandemic. I am immensely proud of your numerous achievements, such as be coming a nationally renowned civil servant. Just like you, I love playing cricket and last time I was in Sri Lanka, I remember watching cricket together with you, which I found very enjoyable.

Your memories live on forever.

I love you Thaththa.

***Arjun***



http://ninaivumalar.online/

## Dear Thatha

You mean inspiration to me. My mum has been telling me all about the hardships you had to overcome at such a tender age. You faced them off with courage and I will always look up to you!

I treasure the times we spent together in India as we travelled around in autos and also in Jaffna where we enjoyed watching cricket. I also remember the time when the bakery van drove around Kokkuvil and we rushed to buy bread so that we could have our favourite breakfast with dhal. I also remember the day my mother and I were leaving Jaffna, we went to the store together and bought snacks for my journey.

It is a heartbreaking thought that I will never be able to see you again however, you will be my guiding light forever.

Love you loads,
***Beishman***

## To our Thatha,

I miss you so much Thatha!!! I got to know that you were a great helper for the people in Sri Lanka. You always appreciate me as a young Mathematician and as a sort of comedian. We had great times when we had conversations to ex plain the news from England while you shared news about Sri Lanka over Viber especially during the Covid pandemic/lockdown time. Unfortunately ¾ a month before Covid-19's new strain appeared, you had some weakness due to your age (which is 79) and while you were having a bath, you fell over and had a minor heart attack ☹.

It was such a tragedy which will make us never forget you and your love for us all. You are figuratively here but not literally. You will always be in our hearts and minds as we will be in your soul. If we aren't reminded of you, your birthday on the 16th of February will. We shall celebrate your deathday too and honour you with our talents and give you hope.

I can proudly call myself the most competitive, intelligent, funny and creative and is willing to carry on your reign.
I love you ∞ % ( infinity percent ).

***Aathiran***



http://ninaivumalar.online/

# வம்ச விருட்சம்

அப்புத்துரை + பூமணி

↓

**ஜெயரத்தினம்**

யோகராஜா

பாலச்சந்திரன்

தெய்வேந்திரன்

சொர்ணகாந்தரூபி

ரவீந்திராதேவி

புவனேந்திரராஜா

சடையர் + தையல்நாயகி

↓

கங்கைநாதன்

**லோகநாயகி**

கமலநாயகி

லிங்கநாதன்

ரங்கநாயகி

சிவலோகநாதன்

**ஜெயரத்தினம்** — **லோகநாயகி**

↓

துஷ்யந்தி + புவிராஜன் → பீஷ்மன்

தமயந்தி + நக்கீரன் → ஜானகி, அர்ஜுன்

கல்யாணி + கண்ணன் → ஆதிரன், மிர்ணாளினி



http://ninaivumalar.online/

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உலகெங்கி லுமிருந்து தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் நேரிலும் தொடர்புகொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும்,

திடீரென இடியாய் வந்த எம் தந்தையின் துயரச் செய்தி கேட்டு திகைத்து, செய்வதறியாது நின்ற போது பக்கபலமாக நின்ற உறவினர்கள் அன்பர்கள் நண்பர்களுக்கும்,

அன்னையின் பக்கத்தில் நாம் இல்லாத போதும் அவருக்குத் துணை நின்று தந்தையின் இறுதிச் சடங்கினை ஒழுங்குற நிகழ்த்த உதவிய உறவி னர்களுக்கும்,

தற்போதைய தீவிர தொற்று நோய்ச் சூழலிலும் கூட எம் தந்தை மீது கொண்ட அன்பினால் நேரில் திரண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்,

மேலும் பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகை அறிவித்தல்கள் வழங்கிய அனைவருக்கும்,

அஞ்சலி உரைகள் நிகழ்த்தி எம் தந்தையின் மேன்மைகளை எடுத்தி யம்பியதுடன் அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்த தந்தையின் நீண்ட நாள் நண்பர்களுக்கும், தோழர்களுக்கும், அன்பினால் உவந்து ஓவியம் வரைந்தளித்த தோழர் தங்கவடிவேல் சௌந்தருக்கும் மற்றும் அதிகாலை 2 மணியளவில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்த போதும் இறுதிச் சடங் கிற்கு நேரில் சென்று இரங்கல் உரையை ஆற்றிய தந்தையின் நண்பர் சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும், மிகக் குறுகிய கால அவகாசத்தில் நாம் கேட்ட தற்கிணங்க தந்தையுடனான அனுபவங்களை இரைமீட்டு இறுதிச் சடங்கு அன்று வழங்கிய பேராசிரியர் மௌனகுரு அவர்களுக்கும்,

யாழ். ஸ்டான்லி கல்லூரியின் சார்பில் பாடசாலைக் கொடியை எம் தந்தையின் புகழுடலுக்கு அணிவித்து கௌரவப்படுத்திய பாடசாலைச் சமூகத் தினருக்கும்,



http://ninaivumalar.online/

இந்நினைவு மலரை ஓர் ஆக்கபூர்வமான ஆவணமாக உருவாக்க தந்தையுடனான தமது அனுபவங்களை பகிர்ந்து உதவிய உலகெங்கிலும் வாழும் அவரது நண்பர்களுக்கும், தோழர்களுக்கும், நன்றி கூறுவதற்கு வார்த்தைகள் இன்றித் தவிக்கின்றோம். மேலும் உலகமே பெரும் நோய்த் தொற்று அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய இந்நிலையில் எம்முடன் எவ்வாறாயினும் தொடர்புகொண்டு எம்மை ஆறுதற்படுத்திய உறவினர்கள், நண்பர்கள், தந்தையின் தோழர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**துஷ்யந்தி, தமயந்தி, கல்யாணி**



http://ninaivumalar.online/

http://ninaivumalar.online/



http://ninaivumalar.online/

# மிகச் சிறந்த கடமையாளனாக...


















http://ninaivumalar.online/



















http://ninaivumalar.online/

gtz



Writing Skills for Public Servants





## நண்பர்களுக்கு உண்மை நண்பனாக...









http://ninaivumalar.online/

## உலக சுற்றுப் பயணங்களில்...


















# இலக்கிய மற்றும் சமூக அரங்குகளில்...



















# குடும்பத்தில் தந்தையாக...












## பேரப்பிள்ளைகளுடன்...






















ஸ்ரீ மாருதி பதிப்பகம், தொ.பே: 0777917680

http://ninaivumalar.online/

நினைவுமலர்

Ninaivu Malar .Online

http://ninaivumalar.online/